விலை: ரூபா 20 பக்கங்கள் 28

# உதயன்

சுடர் 30 கதிர் 306 வள்ளுவர் ஆண்டு 2046 புரட்டாதி11, திங்கட்கிழமை 28.09.2015

# தமிழரின் நிரந்தரத் தீர்வுக்கான நடவடிக்கை விரைவில் வேண்டும்

## ஜனாதிபதி மைத்திரியிடம் வலியுறுத்தினார் பான் கீ-மூன்

நியூயோர்க், செப்ரெம்பர் 28

தமிழ் மக்களுக்கான நிரந்தர அரசியல் தீர்வை வழங்குவதற்கான நடவடிக்கைகளை விரைந்து ஆரம்பிக்க வேண்டும் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் ஐ.நா பொதுச் செயலாளர் பான் கீ மூன் வலியுறுத்தியுள்ளார்.

ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளரினால் வெளியிடப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள பரிந்துரைகளை இலங்கை அரசு நடைமுறைப்படுத்த வேண்டும் என்றும் அவர் கேட்டுள்ளார்.

ஐ.நா பொதுச் சபையின் 70ஆவது கூட்டத்தொடரில் கலந்து கொள்ள நியூயோர்க் சென்றுள்ள ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்றுமுன்தினம் ஐ. நா பொதுச் செயலாளர் பான் கீ மூனை சந்தித்து கலந்துரையாடினார்.

இந்த சந்திப்பிலேயே ஐ.நா பொதுச்செயலாளர் மேற்கண்டவாறு வலியுறுத்தியுள்ளார்.

இதன் போது பொதுத் தேர்தலை அமைதியாக நடத்தி முடித்தமைக்கு ஜனாதிபதிக்கு வாழ்த்துத் தெரிவித்த பான் கீ மூன், நாட்டின் நல்லாட்சி, தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்கம் தொடர்பில் பாராட்டுக்களைத் தெரிவித்தார்.

அத்துடன் தமிழ் மக்களுக்கு அரசியல் தீர்வை விரைந்து வழங்குவதன் ஊடாக நாட்டின் அமைதி மற்றும் ஸ்திரத்தன்மை மூலம் நீடித்த சமாதானத்தை எட்ட முடியும் என சுட்டிக்காட்டிய ஐ.நா பொதுச் செயலாளர், அதற்கான பேச்சை உடனடியாக ஆரம்பிக்க வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

ஐநா மனித உரிமைகள் ஆணையாளரினால் வெளியிடப்பட்ட

பக்.24



# நேற்று 17.6 மி.மீ மழைவீழ்ச்சி

யாழ்ப்பாணம், செப். 28,

நேற்று யாழில் 17.6 மில்லிமீற்றர் மழை வீழ்ச்சி பெறப்பட்டது. கடந்த ஆண்டு இந்தக் காலப்பகுதி வரை 35.7 மில்லிமீற்றர் மழை வீழ்ச்சி பதிவானது என்றும் இந்த வருடம் 35.0 மில்லிமீற்றர் மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது.

பக்.24

# சுகாதார சேவைகள் பணிப்பாளர், யாழ்.போதனா பணிப்பாளர் நியமனம்

யாழ்ப்பாணம், செப்.28

யாழ். பிராந்திய சுகாதாரசேவைகள் பணிப்பாளராக வைத்திய கலாநிதி கனகராஜா நந்தகுமாரனும், யாழ்.போதனா வைத்தியசாலை பணிப்பாளர் பதவிக்கு வைத்திய கலாநிதி தங்கமுத்து சத்திய மூர்த்தியும் நியமிக்கப்பட்டுள்ளனர் .

வைத்திய கலாநிதி திரு கனகராஜா நந்தகுமாரன் யாழ். இந்துக் கல்லூரியின் பழைய மாணவரும், யாழ்.பல்கலைக்கழக மருத்துவப் பட்டதாரியும் கொழும்பு பல்கலைக்கழக மருத்துவ நிர்வாகத்துறை முதுமாணிப்பட்டதாரியுமாவார்.

பக்.24

# அமெரிக்க தீர்மான வரைவு ஆபத்துக்கள் நிறைந்தது

## சரத்துக்கள் நீக்கப்பட வேண்டும் என்கிறார் மகிந்த ராஜபக்ச எம்.பி.

கொழும்பு, செப்.28

இலங்கை விவகாரம் தொடர்பில் அமெரிக்காவால் முன்வைக்கப்பட்டுள்ள தீர்மான வரைவில், உள்ளக விசாரணையை பலப்படுத்தும் வகையில் அமைந்துள்ள பரிந்துரைகளை 'நாட்டுக்கு ஆபத் தானவை' என்று விமர்சித்துள்ளார் முன்னாள் ஜனாதிபதியான மகிந்த ராஜபக்ச.

பொதுநலவாய நீதிபதிகள் உள்

பக்.24



# அமெரிக்கப் பிரேரணைக்கு ஆஸி. இணை அனுசரணை

கொழும்பு, செப்.29

இலங்கை தொடர்பில் அமெரிக்காவால் கொண்டுவரப்பட்ட பிரேரணைக்கு ஆஸ்திரேலிய அரசு இணைப் பங்களிப்பை வழங்கத் தீர்மானித்துள்ளது.

குறித்த பிரேரணையானது இலங்கையின் நல்லிணக்கத்துக்கு ஏதுவாக அமைந்துள்ளதால் அதற்கு ஒத்துழைப்பு வழங்க தமது அரசு முன்வந்துள்ளது என்று ஆஸ்திரேலிய வெளிவிவகார அமைச்சர் ஜூலி பிஷொப்

பக்.24

# நேற்றிரவு நாடு முழுவதும் மின் தடை

யாழ்ப்பாணம், செப்.28

நேற்றிரவு நாடு முழுவதும் இரவு 11.30 மணி முதல் மின்சாரம் தடைப்பட்டது. நாடு முழுவதும் மின்சாரம் தடைப்பட்டுள்ளது என்றும் மின்சார விநியோகத்தை வழமைக்குக் கொண்டுவருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என்றும் இலங்கை மின்சார சபை தெரிவித்தது. எனினும் மின் தடைக்கான காரணம் தெரி

பக்.24

# சமந்தா பவரை சந்தித்து சுமந்திரன் எம்.பி. பேச்சு

கொழும்பு, செப்.28

ஐக்கிய நாடுகளுக்கான அமெரிக்க தூதுவர் சமந்தா பவர் மற்றும் அமெரிக்காவின் பிரதி தூதுவர் சிசன் ஆகியோரை கடந்த வாரம் தமிழ் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் ஜெனிவாவில் சந்தித்து பேச்சு மேற்கொண்டுள்ளார்.

இலங்கை

பக்.24

# சர்வதேசத்தை வெளிநாடாக மாற்றிய ரணில் விக்கிரமசிங்க

கொழும்பு, செப்.28

ஐ.நா மனித உரிமைகள் சபையில் அமெரிக்கா சமர்ப்பி[illegible]ள்ள தீர்மான வரைவிலிருந்து சர்வதேசம் என்ற சொல்லை அகற்றுவதற்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவே காரணம் என்று கொழும்பு இராஜதந்திரிகள் தெரிவித்துள்ளனர்.

இதுகுறித்து மேலும் தெரிவிக்கப்படுவதாவது:-

இலங்கைப் படையினரும் விடுதலைப்புலிகளும் போர்க் குற்றங்களில் ஈடுபட்டனர் என்பது விசாரணை அறிக்கை மூலம் வெளியானதை தொடர்ந்து கடந்த வாரம் அரசு பல முனைகளில் தீவிர நடவடிக்கைகளை முன்னெடுத்தது.

இதேகாலப் பகுதியில் இலங்கை தொடர்பான அமெரிக்க தீர்மானத்தின் முதலாவது நகல் வடிவம் ஐ. நா. மனித உரிமைகள் சபையின் உறுப்பு நாடுகள் மத்தியில் இடம்பெற்ற உத்தியோகப்பற்றற்ற கலந்துரையாடலின் போது சில மாற்றங்களிற்குள்ளானது.

அதில் அனேக மாற்றங்கள் இலங்கைக்கு சாதகமாக

பக்.24

# 2030 ஆம் ஆண்டளவில் இலங்கை அபிவிருத்தி இலக்கை பூர்த்தி செய்யும்

## ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவிப்பு

நியூயோர்க், செப்.28

நிலையான அபிவிருத்தி இலக்குகளை எதிர்வரும் 2030ஆம் ஆண்டளவில் இலங்கை பூர்த்தி செய்து கொள்ளும் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

ஐ. நா. பொதுச் சபையின் 70ஆவது அமர்வுகளில் பங்கேற்றுள்ள ஜனாதிபதி நேற்று நடைபெற்ற ஐ. நா அமைப்பின் நிலையான அபிவிருத்தி குறித்த மாநாட்டில் பங்கேற்று உரையாற்றிய போது இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்துள்ளதாவது:-

உலக வாழ் மனித இனத்தின் வாழ்க்கையை தர்க்க ரீதியானதும், அர்த்தபூர்வமானதும், சுபீட்சமானதுமாக மாற்றி அமைக்க வேண்டுமென்றே ஐ. நா அமைப்பு ஆரம்பம் முதல் முயற்சித்து வருகிறது. இதனை பூர்த்தி செய்து கொள்ள உலகத்தலைவர்களாகிய நாம் முயற்சிக்க வேண்டும்.

இம்முறை நிலையான அபிவிருத்தி குறித்து முன்வைக்கப்பட்டுள்ள யோசனைகளுக்கு இலங்கை பூரண அளவில் ஆதரவளிக்கும். 21ம் நூற்றாண்டில் உலக இயற்கை வள உணர்வுபூர்வமான புதிய பண்பாட்டைக் கட்டியெழுப்ப நடவடிக்கை எடுக்கப்படும்.

பக்.24

# பாகிஸ்தான் பிரதமர் இலங்கைக்கு வருவார்



நியூயோர்க், செப்.28

பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் செரீப் விரைவில் இலங்கைக்குப் பயணம் செய்ய விருப்பம் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் 70 ஆவது அமர்வுகளில் பங்கேற்றுள்ள ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை சந்தித்த போதே அவர் இவ்வாறு விருப்பத்தை வெளியிட்டுள்ளார்.

இந்த நிலையில் வெகு விரைவில் பாகிஸ்தான் பிரதமர் இலங்கைக்கு வருகை தருவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (ற-வ)

# உள்ளக பொறிமுறையையே அரசு பின்பற்றும்

## பிரதமர் ரணில் தெரிவிப்பு

கொழும்பு, செப்.28

இலங்[illegible]யில்இடம்பெற்றவை எனக் கூறப்படும் போர்க் குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் விசாரணைகளை நடத்துவதற்கு உள்ளக நீதிப் பொறிமுறையையே அரசு பின் பற்றும் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மீண்டும் இடித்துரைத்துள்ளார்.

ஊடகப் பிரதானிகளுடன் நேற்று நடைபெற்ற சந்திப்பின் போதே

பக்.24

# அரச பணியாளர்களுக்கு சம்பள அதிகரிப்பில்லை

கொழும்பு, செப்.28

தேசிய அரசின் அடுத்த நிதியாண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் அரச பணியாளர்களுக்கு சம்பள அதிகரிப்பு இருக்காது என்று தெரிவிக்கப்படுகின்றது. கடந்த அரசின் நடவடிக்கைகளால் நாடு பெரும் கடன் சுமையை

பக்.24

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன் | திங்கட்கிழமை | செப்ரெம்பர் 28 | 2015

# இரு ஜனாதிபதிகள் இருக்க முடியாது

## ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சீற்றம்

கொழும்பு, செப்.28

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவுக்கு வழங்கப்பட்டுள்ள பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து மீள் பரிசீலனை செய்யுமாறு உத்தரவிட்டுள்ள ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நாட்டில் இரு ஜனாதிபதிகள் இருக்க முடியாது என குறிப்பிட்டுள்ளார் என்றும் தெரியவருகின்றது.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது:-

கடந்த புதன் கிழமை இடம்பெற்ற வாராந்த அமைச்சரவை சந்திப்பின்போது முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச மீது ஜனாதிபதி கடும் விமர்சனங்களை முன்வைத்துள்ளார்.

இலங்கையில் இரு ஜனாதிபதிகள் இருக்கமுடியாது. அவ்வாறான செயற்பாடுகள் முடிவிற்கு கொண்டுவரப்படவேண்டும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி குடும்பத்தினருடன் தங்கியுள்ள பாசிக்குடா சுற்றுலாவிடுதியை சுற்றி முப்படையினர் தீவிரபாதுகாப்பு நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளமை தொடர்பாகவே சிறிசேன இந்த கருத்துக்களை வெளியிட்டுள்ளார்.

தற்போது வெறுமனே நாடாளுமன்ற உறுப்பினராக மாத்திரமுள்ள ராஜபக்சவுக்கு ஏன் இத்தனை பாதுகாப்பு என்பது தனக்கு புரியவில்லை என சிறிசேன தெரிவித்துள்ளார்.

ராஜபக்ச தற்போது தனது பாதுகாப்புக்கு 240 பேரை பயன்படுத்துகின்றார். எனது பதவிக்காலம் முடிவடைந்ததும் நான் உத்தியோக பூர்வ பங்களாக்களை தேடி செல்லமாட்டேன், பொலனறுவையில் உள்ள எனது வீட்டிற்கு சென்று விடுவேன் எனவும் ஜனாதிபதி அங்கு தெரிவித்துள்ளார் என்றும் கூறப்படுகின்றது. (ந)

# அமெரிக்க பிரேரணையை எதிர்த்து தமிழகத்தில் நேற்று ஆர்ப்பாட்டம்



சென்னை, செப். 28

அமெரிக்காவால் கொண்டுவரப்பட்டுள்ள சட்டவரைவுக்கு எதிர்ப்புத் தெரிவித்து தமிழகத்தில் நேற்று ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது. நாம் தமிழர் கட்சி ஏற்பாட்டில் நுங்கம்பாக்கம் வள்ளுவர் கோட்டம் அருகே இந்தக் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

போர்க் குற்றச்சாட்டுக்கள் தொடர்பிலான விசாரணைகளை மேற்கொள்வதற்கு சர்வதேச நீதிபதிகள் அடங்கிய குழுவை இலங்கையே உருவாக்க வேண்டும் என்ற கோரிக்கை அடங்கிய வரைவு தீர்மானம் ஒன்றை ஐநா. மனித உரிமை ஆணையகத்தின் கூட்டதொடரின் போது அமெரிக்கா கொண்டு வந்திருந்தது. அதற்கு எதிர்ப்புத் தெரிவித்தே குறித்த ஆர்ப்பாட்டம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

அதில் அந்தக் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் கலந்து கொண்டு உரையாற்றினார். இலங்கை அரசின் போர் குற்றங்கள் தொடர்பிலான உண்மைகள் வெளிவர வேண்டும் என்றால், நியாயமான சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டும் என்றும், உள்நாட்டு விசாரணைக்கு அனுமதி அளிக்கக் கூடாது. - என்று அவர் தெரிவித்தார்.

நாம் தமிழர் கட்சியின் மாநில ஒருங்கிணைப்பாளர்கள் அன்பு தென்னரசன், தடா.சந்திரசேகரன், ராவணன், மாவட்ட செயலாளர்கள் புகழேந்தி, ஏழுமலை, ரமேஷ், ராஜேந்திரன், சஞ்சீவிநாதன் மற்றும் கட்சியின் முன்னணி நிர்வாகிகள் குறித்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டிருந்தனர். (ந)

# இரண்டு நீதியரசர்களுக்கு எதிராக குற்றப்பத்திரிகை

கொழும்பு, செப்.28

நீதித்துறையில் நம்பகத்தன்மையை உறுதிசெய்யும் வகையிலும், நீதியரசர்களின் ஒழுக்க விதிகளை உறுதிசெய்யும் நோக்கிலும் உயர் நீதிமன்ற நீதியரசர்கள் இருவருக்கெதிராக குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்படவுள்ளது என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

தமது வீட்டுப் பணிப்பெண்ணை தாக்கி துன்புறுத்திய காரணத்துக்காக ஒரு நீதியரசருக்கு எதிராகவும், தமது மனைவி நடத்திவரும் ஆலோசனை நிறுவனமொன்றிற்கு பங்களிப்பு செய்துவரும் காரணத்துக்காக மற்றுமொரு நீதியரசர் மீதும் குறித்த குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்படவுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

குறித்த இரண்டு சம்பவங்கள் தொடர்பாகவும் தற்போது விசாரணை நடைபெற்று வரும் நிலையில், குற்றங்கள் நிரூபிக்கப்பட்டால் குறித்த இருவருக்கெதிராகவும் குற்றப் பத்திரம் தாக்கல் செய்யப்படும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ந)

## காவலாளியை தாக்கி வங்கியில் கொள்ளை

கொழும்பு, செப்.28

கொழும்பு தர்மபால மாவத்தை பகுதியிலுள்ள தனியார் வங்கி ஒன்றில் நேற்று அதிகாலை 5.5 மில்லியன் ரூபா பணம் கொள்ளையிடப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மோட்டார் சைக்கிளில் வந்த ஒருவர் காவலாளியை தாக்கி பணத்தை கொள்ளையிட்டுச் சென்றுள்ளார் என்று கூறப்படுகின்றது. காயமடைந்த காவலாளி வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை பொலிஸார் ஆரம்பித்துள்ளனர். (ந)



# யாழ். இந்துவின் 125ஆம் ஆண்டு நிறைவு விழா இறுதிநாள் நிகழ்வுகள் நேற்று

யாழ்ப்பாணம், செப்.28

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் 125ஆம் ஆண்டு நிறைவு விழா நிகழ்வுகள் நேற்று கல்லூரியின் குமாரசாமி மண்டபத்தில் நடைபெற்றன.

கல்லூரியின் அதிபர் ஐயம்பிள்ளை தயானந்தராஜா தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண சபை முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் கலந்துகொண்டார்.

கடந்த, 24ஆம் திகதி வியாழக்கிழமை ஆரம்பமான 125ஆம் ஆண்டு நிறைவு விழா நிகழ்வுகள் தொடர்ச்சியாக நான்கு நாள்கள் நடைபெற்று நேற்று நிறைவடைந்தன.

இறுதி நாள் நிகழ்வில் பாடசாலை மாணவர்களால் ஏற்பாடு செய்யப்பட்ட கலை நிகழ்வுகளும், நாட்டிய நாடகம் உட்பட பல்வேறு கலை சார் அம்சங்களை கொண்ட நிகழ்வுகள் இடம்பெற்றன. குறித்த நிகழ்வுகள் யாழ். இந்துக் கல்லூரியின் வளர்ச்சிப் பாதையை வெளிப்படுத்தும் முகமாக அமைந்திருந்தன.

நிகழ்வில் கல்லூரியின் பழைய மாணவர் பாலசுந்தரம் பிள்ளை, பேராசிரியர் குகபாலன், நல்லூர் கோட்டக்கல்வி பணிப்பாளர் அகிலன், வடமாகாண சபை உறுப்பினர் கஜதீபன்,கல்லூரியின் பிரதிமுகவர்கள், ஏனைய பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், இந்துக் கல்லூரி பழைய மாணவர்கள், பெற்றோர்கள் எனப்பலர் கலந்து கொண்டிருந்தனர். (ந-ரி5)










Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சட்டத்துக்கு முரணாக இயங்கும் மதுபான சாலைகள் மீது நடவடிக்கை

## சட்டமா அதிபர் திணைக்களத்துடன் கலந்துரையாடுகின்றது மதுவரித் திணைக்களம்

யாழ்ப்பாணம், செப். 28
யாழ்.மாவட்டத்தில் சட்டத்துக்கு முரணாகச் செயற்படும் மதுபான நிலையங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பது தொடர்பில் சட்டமா அதிபர் திணைக்களத்துடன் மதுவரித் திணைக்களத்தினர் கலந்துரையாடல் நடத்தி வருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

யாழ்.மாவட்டத்தில் சட்டத்துக்கு முரணாக 60 மதுபான நிலையங்கள் செயற்பட்டு வருகின்றன என்று மாவட்டச் செயலக பாதுகாப்புக் குழுக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டிருந்தது. இது தொடர்பில் கொழும்பிலுள்ள மதுவரித் திணைக்களத்தின் தலைமையகத்துக்கு முறைப்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதனடிப்படையில், குறித்த மதுபான நிலையங்கள் சட்டத்துக்கு முரணாக இயங்குகின்றனவா என்பது தொடர்பில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

வைத்தியசாலைகள், ஆலயங்கள், பாடசாலைகள் என்பவற்றிலிருந்து குறித்த மதுபான நிலையங்கள் சரியான தூரத்தில் அமைந்துள்ளனவா என்பது தொடர்பில் நில்அளவைத் திணைக்களத்தின் ஊடாக ஆய்வு முன்னெடுக்கப்பட்டது. அதனடிப்படையில் 9 மதுபான நிலையங்கள் அதை மீறிச் செயற்படுவது உறுதி செய்யப்பட்டது.

குறித்த மதுபான நிலையங்களுக்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்ளுமாறு யாழ்.மாவட்டச் செயலகத்தினால் அறிவுறுத்தல் வழங்கப்பட்டது. இந்த விடயத்தில் வடக்கு மாகாண ஆளுநர் பளிக்காரவும் நடவடிக்கை மேற்கொண்டிருந்தார்.

மேற்படி 9 மதுபான நிலையங்களுக்கு எதிராகவும் சட்ட நடவடிக்கை எடுப்பது தொடர்பில் சட்டமா அதிபர் திணைக்களத்துடன் மதுவரித் திணைக்களத்தினர் ஆராய்ந்து வருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ந-5)

### வீதியோரக் 'குடி'மக்களை கைது செய்ய நடவடிக்கை

யாழ்ப்பாணம், செப்.28
யாழ்.நகரில் வீதியோரம் மற்றும் பொது இடங்களில் வைத்து மதுபானம் அருந்துவோர் மீது பொலிஸார் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இரவுவேளைகளில் நகரில் முனீஸ்வரன் வீதி, முற்றவெளி, கொட்டடி, தனியார் பஸ்தரிப்பு நிலைய சுற்றாடல், முனியப்பர் கோயில் சுற்றாடல், புல்லுக்குளத்தடி மற்றும் பண்ணை சுற்றுலா மையம் போன்ற இடங்களில் மதுபானம் அருந்துவோரைக் கையும் போத்தலுமாகக் கைது செய்வதற்குரிய கண்காணிப்பு நடவடிக்கையை தீவிரப்படுத்தியுள்ளனர்.

யாழ்.நகரில் உள்ள மதுபான விற்பனை நிலையங்களில் இரவு வேளையில் மதுபானங்களை வாங்கும் மதுப்பிரியர்கள் சிலர் அவற்றைப் பொது இடங்கள், வீதியோரங்களில் வைத்து பருகிவிட்டுப் போத்தல்கள், 'ரின்' களை வீசி விட்டுச் செல்கின்றனர்.

தற்போது இவ்வாறு பொது இடங்கள், வீதியோரங்களில் வைத்து மதுபானங்களைச் சுவைக்கும் மதுப்பிரியர்களை உடன் கைது செய்வதற்கு நடவடிக்கை எடுத்துள்ள பொலிஸார் இரவுவேளையில் ரோந்தில் ஈடுபட்டுள்ளனர். (ந-17)

### பொதி செய்யப்பட்ட நிலையில் கஞ்சா: சந்தேகத்தில் ஒருவர் கைது

யாழ்ப்பாணம், செப்.28
காணி ஒன்றில் பொதி செய்யப்பட்ட நிலையில் 45 கிராம் கஞ்சா இருந்ததை அடுத்து அருகில் உள்ள வீட்டில் வசிக்கும் நபர் ஒருவரை சந்தேகத்தின் பேரில் யாழ்ப்பாணம் குற்றச்செயல் தடுப்பு பிரிவினர் கைதுசெய்துள்ளனர்.

நேற்று முன்தினம் சனிக்கிழமை மாலை யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதிப்பகுதியில் உள்ள வெற்றுக்காணி ஒன்றில் பொதி செய்யப்பட்ட நிலையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார் என்றும், அவரை யாழ்.நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கையை யாழ்ப்பாணம் குற்றத் தடுப்பு பிரிவு பொலிஸார் நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ந-106)

## ஆளுநர் அனுமதிக்கு காத்திருக்கும் வடமாகாண சபை நியதிச் சட்டங்கள்

யாழ்ப்பாணம், செப். 28
வடக்கு மாகாண சபையால் இதுவரை நான்கு நியதிச் சட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ள நிலையில் அவற்றில் இரண்டு நியதிச் சட்டங்களுக்கு மாத்திரமே ஆளுநரால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. கடந்த ஜனவரி மாதம் வடக்கு மாகாண ஆளுநராக பளிக்கார நியமிக்கப்பட்ட பின்னர் நிறைவேற்றப்பட்ட நியதிச் சட்டங்கள் இரண்டுக்குமே இன்னமும் அனுமதி வழங்கப்படவில்லை.

வடக்கு மாகாண சபை ஆரம்பிக்கப்பட்டு இரண்டு ஆண்டுகள் முடிவடைந்துள்ளன. மாகாணசபை நியதிச் சட்டங்கள் நிறைவேற்றப்படுவதன் ஊடாகவே அதிகாரசபைகள், திணைக்களங்கள் உருவாக்க முடியும். மாகாண சபையால் கடந்த வருடம் ஓகஸ்ட் மாதம் முதலாவது நியதிச் சட்டம் சமர்ப்பிக்கப்பட்டது.

நிதி நியதிச் சட்டம், முத்திரை வரி கைமாற்றல் நியதிச் சட்டம், முதலமைச்சர் நிதிய நியதிச் சட்டம் என்பனவே இவ்வாறு சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. மூன்று நியதிச் சட்டங்களும் மாகாண சபையில் நிறைவேற்றப்பட்டிருந்தாலும், அப்போதைய ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி நிதி நியதிச் சட்டம், முத்திரை வரி கைமாற்றல் நியதிச் சட்டம் இரண்டுக்கும் அனுமதி வழங்கியிருந்தார். முதலமைச்சர் நிதிய நியதிச் சட்டம் உருவாக்குவதற்கு அனுமதி வழங்கவில்லை. ஆளுநரால் அனுமதி வழங்கப்பட்டதற்கு அமைய வடக்கு மாகாண வருமான வரித் திணைக்களம் உருவாக்கப்பட்டு செயற்பட ஆரம்பித்துள்ளது.

இந்த நிலையில் வடக்கு மாகாணத்தின் புதிய ஆளுநராக பளிக்கார பதவியேற்ற பின்னர், கடந்த மார்ச் மாதம் 17 ஆம் திகதி வடக்கு மாகாண சபையில் வடக்கு மாகாண சுகாதார நியதிச் சட்டமும், ஏப்ரல் மாதம் 30 ஆம் திகதி வடக்கு மாகாண கல்வி நியதிச் சட்டம், வடக்கு மாகாண முன்பள்ளி நியதிச் சட்டம் என்பனவும் நிறைவேற்றப்பட்டிருந்தன.

குறித்த நியதிச் சட்டங்களில் வடக்கு மாகாண சுகாதார நியதிச் சட்டம், வடக்கு மாகாண கல்வி நியதிச் சட்டம் ஆகியவை ஆளுநரின் அனுமதிக்காக ஏப்ரல் மற்றும் மே மாதங்களில் அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. வடக்கு மாகாண முன்பள்ளி நியதிச் சட்டத்தில் இணைப்புக்கள் சில தேவைப்படுவதால் அவற்றைச் சமர்ப்பிக்குமாறு வடக்கு மாகாண கல்வி அமைச்சுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது என்றும் அவர்களால் குறித்த இணைப்புக்கள் இன்னமும் வழங்கப்படவில்லை என்று அவைத் தலைவர் குறிப்பிட்டார்.

ஆளுநரின் அனுமதிக்காக அனுப்பப்பட்ட நியதிச் சட்டங்களுக்கு நான்கு மாதங்கள் கடந்தும் ஆளுநர் பளிக்கார அனுமதி வழங்காமைக்கான காரணம் தொடர்பில், ஆளுநரின் செயலாளர் இளங்கோவனிடம் கேட்டபோது, குறித்த நியதிச் சட்டங்கள் சட்டமா அதிபர் திணைக்களத்துக்கு அனுப்பப்பட்டுள்ளது. அதிலுள்ள சில திருத்தங்கள் தொடர்பாக சட்டமா அதிபர் திணைக்களம் நேரடியாக குறித்த அமைச்சுக்களுடன் கலந்தாலோசித்து வருகின்றது – என்றார். (ந-5)

### போயா தினத்தில் இறைச்சி விற்பனை இருவர் கைது

யாழ்ப்பாணம், செப்.28
போயா தினமான நேற்று உரும்பிராய் பகுதியில் சட்டவிரோதமான முறையில் விற்பனை செய்யப்பட்ட 5 கிலோகிராம் ஆட்டு இறைச்சி மற்றும் 12 கிலோகிராம் மாட்டிறைச்சி என்பவற்றைக் கைப்பற்றியதுடன் அது தொடர்பில் இருவரைக் கைது செய்துள்ளதாக யாழ்ப்பாணப் பிராந்திய பொலிஸ் விசேட குற்றப் புலனாய்வு பொலிஸார் தெரிவித்தனர். கைதான இருவரும் கோண்டாவில் மற்றும் சுன்னாகம் பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என பொலிஸார் கூறினர். (ந)

## தனியார் பஸ் சேவைகளில் உள்ள குறைபாடு குறித்து முறையிடலாம்

### யாழ். தனியார் பஸ் சங்க தலைவர் கெங்காதரன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், செப்.28
யாழ்ப்பணத்தில் சேவையில் ஈடுபடும் தனியார் பஸ்களில் குறைபாடுகள் காணப்படுமாயின் பொது மக்கள் அது குறித்து யாழ்ப்பாணம் தனியார் பஸ் சேவைக்கு முறைப்பாடு செய்ய முடியும் என்று யாழ். மாவட்ட தனியார் பஸ் சங்க தலைவர் பொன்னுத்துரை கெங்காதரன் தெரிவித்துள்ளார்.

தனியார் பஸ்களில் பயணிக்கும் பயணிகள் தாம் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்கின்றனர் என்று கூறுகின்றனர். இட நெரிசல், நடத்துநர்களின் மனிதாபிமானமற்ற செயற்பாடுகள், போட்டிக்கு பஸ்ஸைச் செலுத்துதல் போன்ற பலவற்றை அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். இதுகுறித்துக் கேட்டபோதே கெங்காதரன் இவ்வாறு கூறினார்.

யாழ்ப்பாணத்தில் 16 தனியார் பஸ் சங்கங்கள் இயங்குகின்றன. அவற்றில் மூன்று சங்கங்கள் விலகியுள்ளன. 13 சங்கங்கள் எமது கட்டுப்பாட்டில் இயங்குகின்றன. சங்கங்கள் தனித்து இயங்க எத்தனிப்பதால் தலைமைத்துவத்தால் விதிக்கப்படும் கட்டுப்பாடுகளை பின்பற்றுவதில்லை. – என்று அவர் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் தொடர்ந்து தெரிவித்ததாவது:–

> **பொது மக்களுக்கு அசௌகரியங்கள் ஏற்படுத்தும் செயற்பாடுகளை ஆதாரத்துடன் நிரூபித்தால் அதற்குத் தக்க நடவடிக்கைகள் எடுக்கப் படும்.**

பொது மக்களுக்கு அசௌகரியங்கள் ஏற்படுத்தும் செயற்பாடுகளை ஆதாரத்துடன் நிரூபித்தால் அதற்குத் தக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும். இதற்குப் பொறுப்பான அரச உத்தியோகத்தர்களின் பொறுப்பின்மையும், இந்த நிலைக்கு காரணம். ஒரே சங்கமாக ஒரு தலைமைத்துவத்துக்குள் செயற்படும்போது பிரச்சினைகளைத் தீர்ப்பது சுலபம். தனித்து இயங்கும் மற்றைய 3 தனியார் பஸ் சங்கங்களும், சட்டரீதியான விடயங்களை கச்சேரியூடாகச் செயற்படுத்துகின்றனர்.– என்றார்.

இது தொடர்பில் நாம் அரச அதிபர் நா.வேதநாயகனைத் தொடர்பு கொண்ட போது:–

சங்கங்களுக்குள் நிலவும் விரிசல் நிலைகளையும், பிரச்சினைகளையும் கருத்தில் கொண்டு செயற்படுவோம். தனியார் பஸ் நடத்துநர்களுக்குச் சீருடை வழங்குவது குறித்துக் கலந்தாலோசித்து வருகிறோம். விரைவில் நடைமுறைப்படுத்தப்படும். அவர்களுக்கு எதிரான ஒழுக்காற்று நடவடிக்கைகள், அவர்களில் தலைமையினூடாக நடைமுறைப்படுத்தப்படும். தனியார் பஸ் சேவையில் நிலவும் பிரச்சினைகள் விரைவில் தீர்க்கப்படும். – என்றார். (ந-14)

## பொலிஸ் கண்ணில் மண்தூவி சுன்னாகத்தில் தொடரும் திருட்டு

### பொதுமக்கள் விசனம்

வலி.வடக்கு, செப்.28
குற்றச் செயல்களைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதாக சுன்னாகம் பொலிஸார் கடந்த வெள்ளிக்கிழமை நீதிமன்றில் அறிக்கை சமர்ப்பித்த சில மணி நேரத்திலேயே சுன்னாகம் பகுதியில் சுமார் ஏழரை இலட்சம் ரூபா பெறுமதியான நகைகள் அறுத்துச் செல்லப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.

சுன்னாகம் தெற்கு மூர்த்தியான் கூடல் பகுதியில் ஒரு தாலிக்கொடியும், சங்கிலியும், கந்தரோடை கற்பொக்கனைப் பகுதியில் ஒரு தாலிக்கொடி, உடுவில் கீழிச்சந்தைப் பகுதியில் ஒரு சங்கிலி ஒன்றும் பிற்பகல் மூன்று மணிக்கும் நாலரை மணிக்கும் இடையில் அறுத்துச் செல்லப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ள பொதுமக்கள் பொலிஸாருக்குச் சவால் விடும் வகையில் ரவுடிகள், திருடர்கள் அட்டகாசம் அதிகரித்துள்ளது என்றும் விசனம் தெரிவித்துள்ளனர்.



சுன்னாகம் பொலிஸ் பிரிவில் ரவுடிகளின் அட்டகாசம் தலை தூக்கியிருந்த நிலையில் விசேட அதிரடிப் பொலிஸாரைப் பயன்படுத்தி ரவுடிகளின் அட்டகாசத்தை நிறுத்துமாறு நீதிமன்று பொலிஸ் உயர் அதிகாரிகளுக்குப் பணித்திருந்தது. அதையடுத்து அதிரடிப்படையினரும் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள நிலையில் வாள்வெட்டுக்கள், அடிபிடிகளை நிறுத்தியவர்கள் தற்போது வழிப்பறியில் ஈடுபடத் தொடங்கியுள்ளனர் என்று பொதுமக்கள் கூறுகின்றனர்.

அதேபோன்று கடந்த வெள்ளிக்கிழமை இரவு ஏழாலைப் பகுதயில் இரண்டு ஆடுகள் திருடப்பட்டுள்ளன. இவைகள் யாவும் சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டுள்ளன.

பொலிஸாரின் ரோந்து நடவடிக்கைகள், கண்காணிப்புக்கள் நீதிமன்றப் பணிப்புரைக்கு அமைவாக அதிகரிக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படும் நிலையில் இவ்வாறான சம்பவங்கள் நடைபெற்று வருகின்றமை தொடர்பில் பொதுமக்கள் விசனம் தெரிவித்தனர். (ந-86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மட்டக்களப்பு மாவட்டத்தில் 7,000 மாற்றுத் திறனாளிகள்

## சமூக சேவைகள் உத்தியோகத்தர் எஸ்.அருள்மொழி தெரிவிப்பு

மட்டக்களப்பு, செப்.28

மட்டக்களப்பு மாவட்டத்தில் 7 ஆயிரம் மாற்றுத்திறனாளிகள் உள்ளனர் என்று அவர்களின் பிரச்சினைகளுக்கு முழுமையான தீர்வை வழங்கமுடியாத நிலை காணப்படுகின்றது என்றும் மட்டக்களப்பு மாவட்ட சமூக சேவைகள் உத்தியோகத்தர் எஸ்.அருள் மொழி தெரிவித்துள்ளார்.

செவிப்புலன் வலுவற்றோர் புனர்வாழ்வு நிறுவனத்தின் 15ஆவது ஆண்டு நிறைவு தினம் மற்றும் உலக செவிப்புலனற்றோர் தின நிகழ்வு, மட்டக்களப்பு தேவநாயகம் மண்டபத்தில் கடந்த சனிக்கிழமை நடைபெற்றது. அதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள 14 பிரதேச செயலாளர் பிரிவுகளில் தலா 500 க்கும் மேற்பட்ட மாற்றுத்திறனாளிகள் உள்ளனர். இவர்களுக்கு பல்வேறு பிரச்சினைகள் காணப்படுகின்றன. அந்தப் பிரச்சினைகளை முழுமையாக தீர்க்க முடியாத நிலைமை உள்ளது.

செவிப்புலன் வலுவற்ற சிறுவர்கள் ஏழாம் தரம் மட்டுமே இங்கு கல்வி பெறக்கூடிய வாய்ப்பு உள்ளது. அவர்கள் மேற்கல்வியை தொடர வேண்டுமானால், யாழ்ப்பாணம் செல்லவேண்டும். அல்லது இந்தியா செல்லவேண்டும். எனவே, இங்குள்ள அரசியல் தலைவர்கள் இங்கு தரம் ஏழுக்கு மேல் கல்வியை பெறும் வகையிலான நடவடிக்கைகளை எடுக்கவேண்டும்.

கிழக்கு மாகாணத்தில் அரசால் முழுமையாக பராமரிக்கக் கூடிய விசேட முதியோர் இல்லமொன்று அமைக்கப்படவேண்டும். மட்டக்களப்பு மாவட்டத்தில் 18 வயதுக்கு குறைந்த 60 வயதுக்கு மேற்பட்ட மூளை வளர்ச்சி குன்றியவர்களை பராமரிப்பதற்கு மட்டுமே நிலையங்கள் உள்ளன. 18 வயதுக்கும் 60 வயதுக்கும் இடைப்பட்டவர்களை பராமரிப்பதற்கான நிலையங்கள் இல்லை. இவர்களுக்கான நிலையங்களை அமைப்பதற்கு அரசார்பற்ற நிறுவனங்கள் மற்றும் அரசு முன்வர வேண்டும்- என்றார். (ற)



யாழ். குடாநாட்டில் அண்மைக்காலமாக நிலவி வரும் கடும்வெப்பமான காலநிலையைத் தொடர்ந்து குளங்கள், கிணறுகள், நீர்நிலைகள் வற்றி வறண்டு வருகின்றன. நீர்வற்றி சகதியாகக் காணப்படும் குளத்தில் உள்ள மீன்களை உண்பதற்காகக் கொக்குக் கூட்டங்கள் குளங்களை ஆக்கிரமித்துள்ளன. முற்றாக வறண்டு வற்றிய குளங்களில் கால்நடைகள் மேய்ச்சலில் ஈடுபட்டுள்ளதையும் பல இடங்களில் காணமுடிகிறது. (ற-135)

# கட்டுக்கரை குள விவசாய நடவடிக்கை குறித்து பிரதமர், நீர்ப்பாசன அமைச்சருடன் சந்திப்பு

மன்னார், செப்.28

மல்வத்து ஓயா நீரை கட்டுக்கரை குளத்தில் தேக்கி வைத்து விவசாய நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்துதல் தொடர்பாக மன்னார் கட்டுக்கரை திட்டமிடல் முகாமைத்துவக் குழு உறுப்பினர்கள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் நீர்ப்பாசன அமைச்சர் விஜயமுனி சொய்சா ஆகியோரை கடந்த புதன்கிழமை சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர்.

தமிழ் தேசியக்கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், நாடாளுமன்ற குழுக்களின் பிரதி அவைத்தலைவருமான செல்வம் அடைக்கலநாதனின் ஏற்பாட்டில் இந்தச் சந்திப்பு நடந்துள்ளது.

வன்னி மாவட்ட நாடா ளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தலைமையில் சென்ற கட்டுக்கரை திட்டமிடல் முகாமைத்துவக்குழு உறுப்பினர்கள் முதலில் நீர்ப்பாசன அமைச்சர் விஜயமுனி சொய்சாவைச் சந்தித்து உரையாடினர்.

அதன்போது கட்டுக்கரை குளத்தில் உள்ள நீரை நம்பி சுமார் 30 ஆயிரம் ஏக்கர் விவசாயச் செய்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என்றும்,ஆனால் கட்டுக்கரை குளத்தில் தேக்கி வைக்கப்படும் நீர் சுமார் ஒரு மாத காலத்திற்கு மாத்திரமே போதுமானதாக உள்ளது என்றும், ஏனைய மாதங்களுக்கு நீர் பற்றாக்குறை ஏற்படுகின்றது என்றும் கட்டுக்கரை திட்டமிடல் முகாமைத்துவக்குழு உறுப்பினர்கள் நீர்ப்பாசன அமைச்சரின் கவனத்துக்குக் கொண்டு வந்தனர்.

அத்துடன் மழை நீரை கட்டுக்கரை குளத்தில் சேமித்து வைப்பதற்கு கட்டுக்கரை குளத்துக்கான வான் கதவு அமைத்தல் மற்றும் கட்டுக்கரை குளத்துக்கு நீர் பாய்ச்சும் வடிகான்கள் தூய்மைப்படுத்தப்பட வேண்டும் என்பன குறித்தும் மல்வத்து ஓயா நீரை கட்டுக்கரை குளத்திற்கு அணைக்கட்டினூடாகக்கொண்டு சென்று நீரை தேக்கி வைக்கின்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் கட்டுக்கரை திட்டமிடல் முகாமைத்துவக்குழு உறுப்பினர்கள் நீர்ப்பாசன அமைச்சரிடம் கோரிக்கை முன்வைத்தனர்.

இந்தச் சந்திப்பின் பின்னர் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் சந்திப்பு நடைபெற்றது.

இதன் போது கட்டுக்கரை குளத்திற்கான வான் கதவு அமைத்தல், வடிகான்கள் தூய்மைப்படுத்துதல் போன்ற விடயங்கள் ஆராயப்பட்டது. மன்னார் மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்படுகின்ற நெல்லை கொள்வனவு செய்தல் மற்றும் நெல்லை களஞ்சியப்படுத்துதல் போன்ற விடயங்களும் பிரதமர் ரணில் விக்கிரம சிங்கவின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டது.

மன்னார் மாவட்ட விவசாயிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை கேட்டறிந்த பிரதமர் ரணில் விக்கிரசிங்க மல்வத்து ஓயா நீரை கட்டுக்கரை குளத்தில் தேக்கி வைப்பதற்கான வேலைத் திட்டத்தை வெகு விரைவில் ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படும் என்றும், மன்னார் மாவட்ட விவசாயிகளின் பிரச்சினைகளுக்கு உரிய நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும் என்றும் தெரிவித்துள்ளார். (ற-56)

# சகாய நிதித் திட்டம் மூலம் உறுப்பினர்களுக்கு பயன்

யாழ்ப்பாணம், செப்.28

வடமாகாண பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தால் உருவாக்கப்பட்ட சகாயநிதித் திட்டத்திக் கீழ் பல திட்டங்களை அதன் உறுப்பினர்கள் பெற்று வருகின்றனர் என்று தலைவர் என்.கணேசன் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்தாவது:-

சமாசத்தின் பணிப்பாளர் சபையினால் இந்தத் திட்டம் முன் வைக்கப்பட்டு உருவாக்கப்பட்டது. இந்தத் திட்டத்தில் இணைந்து கொண்ட அங்கத்தவர்கள், பணியாளர்களுக்கு மரணம், விபத்து பாதிப்பு போன்றவற்றிக்கு இந்த சகாய நிதித் திட்டத்தின் ஊடாக உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

விபத்தால் பாதிக்கப்புட்டு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் உறுப்பினர்களுக்கு விபத்துக்கான நிதி வழங்கப்பட்டும் வருகின்றது. இந்தத் திட்டத்தின் ஊடாக உறுப்பினர்கள் அதிக பயன்பெற்றும் வருகின்றனர்.

இந்தத் திட்டம் தற்போது சமாசத்தால் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்பட்டும் வருகின்றது. இந்தச் சகாய நிதித் திட்டத்தில் சங்கப் பணியாளர்கள், உறுப்பினர்கள் தொடர்ந்தும் இணைந்து கொள்ள முடியும். சகாய நிதித் திட்டத்தில் இணைவ தன் மூலம் எதிர்காலத்தில் பயனாளிகள் பல்வேறு நன்மைகளைப் பெற்றுக் கொள்ள முடியும்- என்றார்.(ற-17)

# முல்லை. வட்டுவாகல் பாலத்தை புனரமைக்குமாறு கோரிக்கை

முல்லைத்தீவு, செப்.28

முல்லைத்தீவு வட்டுவாகல் பாலத்தை புனரமைத்துத் தருமாறு முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழிலாளர்கள் வேண்டுகோள் விடுத்துள் ளனர்.

முல்லைத்தீவு மாவட்ட கடற் றொழிலாளர் சங்கங்களின் சமாசத்தில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் மாகாண சபை உறுப்பினர்கள் கலந்துகொண்ட கூட்டத்திலே இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

போராலும் ஆழிப்பேரலையாலும் முல்லைத்தீவு நகரம் பேரழிவுகளைக் கண்டுள்ளது. முல்லைத்தீவின் நகரத்தின் நுழைவாயிலான வட்டுவாகல் பாலம் நீண்டகாலமாகப் புனரமைக்கப்படாமலுள்ளது. இப்பாலத்தினை புனரமைப்பதன் மூலமாக முல்லைத்தீவு நகரம் பெரும் வளர்ச்சியடையு மெனத் தெரிவிக்கப்பட்டது.

அதேவேளை, முல்லைத்தீவு நகர அபிவிருத்திக் குழுவும் கடந்த மூன்று மாதங்களுக்கு முன்னர் முல்லைத்தீவு மாவட்டச் செயலருடன் நடத்திய சந்திப்பில், வட்டுவாகல் பாலம் புனரமைக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கையை விடுத்திருந்தது. (ற)

# யாழ். முஸ்லிம் ஒன்றுகூடல்-2015







யாழ்ப்பாணம், செப்.28

வடக்கு மாகாண கல்வி ,பண் பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களமும் யாழ். முஸ்லிம் சிவில் சமூகமும் இணைந்து நடத்தும் யாழ் முஸ்லிம் ஒன்றுகூடல்-2015 [illegible] மற்றும் சனிக்கிழமைகளில் நடைபெற்றன.

யாழ். ஒஸ்மானியாக் கல்லூரி வளாகத்தில் நடைபெற்ற இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் த.குருகுலராஜா கலந்துகொண்டார். கௌரவ விருந்தினராக வடக்கு மாகாணசபையின் அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம், வடக்கு மாகாண சபை உறுப்பினர் அ.அஸ்மின் ஆகியோர் கலந்து கொண்டனர்.

அங்கு உரையாற்றிய அமைச்சர் குருகுலராஜா தெரிவித்ததாவது:-

இவ்வாறான ஒன்று கூடல்கள் கலாச்சார நிகழ்வுகளினால் சிறுவர் மற்றும் பெரியவர் மத்தியில் கலாசார விழுமியங்களை மேலும் வளர்த்துக் கொள்ள உதவியாக அமையும். – என்றார்.

யாழ்ப்பாணம் ஒஸ்மானியா கல்லூரிக்கு ஒரு தொகுதி மின்விசிறிகள் ஹிரா கல்வி மறுமலர்ச்சிக் கழகத்தால் வழங்கப்பட்டன. அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் யாழ் மாவட்ட அமைப்பாளரும் கழகத்தின் ஸ்தாபகத்தலைவருமான தேசமானிய அல்ஹாஜ் அமீன் ஹாஜியார் உள்ளிட்ட குழுவினரால் வடக்கு மாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜாவின் ஊடாக உப அதிபர் மௌலவி பைசர் மதனியிடம் அவை கையளிக்கப்பட்டன. (ற-ரி1.10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதிர்ந்த அரசியல்வாதிகள் கருத்தால் தமிழ் மக்கள் மத்தியில் குழப்பநிலை

## கிழக்கு மாகாணசபை உறுப்பினர் கருணாகரம் தெரிவிப்பு



மட்டக்களப்பு, செப்.28

ஐ.நாவால் விடுக்கப்பட்ட அறிக்கையில் இலங்கையில் இறுதிக் கட்டத்தில் நடந்த போருக்கு சர்வதேச விசாரணை தேவை, அது கலப்பு நீதிமன்றம் ஊடாக நடத்தப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ள நிலையில் சர்வதேச விசாரணை முடிந்துவிட்டது என்று சில முதிர்ந்த அரசியல்வாதிகள் மக்களை குழப்பு கின்றனர் என்று தெரிவித்துள்ளார் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம்.

கடந்த வியாழக்கிழமை காலை மட்டக்களப்பு கல்லடி சுவாமி விபுலானந்தா அழகியல் கற்கைகள் நிறுவகத்தின் ஒன்று கூடல் மண்டபத்தில் நடைபெற்ற மட்டக்களப்பு மாவட்ட முன்பள்ளி ஆசிரியர்களுக்கான சீருடை வழங்கும் நிகழ்வில் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

2013ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட வடக்கு மாகாணசபையால் அங்குள்ள முன்பள்ளி ஆசிரியர்களுக்கு 6ஆயிரம் ரூபா வேதனம் வழங்கப்படுகின்றது. ஆனால் அதற்கு முன் னர் ஆரம்பிக்கப்பட்ட கிழக்கு மாகாண சபையால் இங்குள்ள முன்பள்ளி ஆசிரியர்களுக்கு எந்தவித வேதனமும் வழங்கப்படவில்லை. கிழக்கு மாகாண கல்வி அமைச்சு ஆற்ற வேண்டிய சில வேலைத்திட்டங்கள் எங்களது இயலாமை காரணமாக முதலமைச்சரால் மேற்கொள்ளப்படுகின்றன. இதன் காரணமாக எமது பாட சாலைகளும் மக்களும் புறக்கணிக்கப்படும் நிலை கிழக்கு மாகாணத்தில் ஏற்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள முன்பள்ளிகளுக்கு உள்ளூராட்சி சபைகள் ஊடாக ஒதுக்கீடுகளைப் பெற்று முன்பள்ளி ஆசிரியர்களுக்கான வேதனங்களை வழங்குவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. கடந்த 30வருட காலப் போர் காரணமாக பெரும் இழப்புகளை எதிர்கொண்டு இன்று நல்லாட்சி என் காலப்பகுதியில் எமது பிரச்சினைகளுக்கு தீர்வொன்றை எதிர்பார்த்துநிற்கும் காலப்பகுதியில் நாங்கள் உள்ளோம்.

அதேவேளை, எமக்கு பலம் சேர்க்கும் வகையில் ஐ.நா. மனித உரிமைகள் சபையில் எதிர்வரும் 30ஆம் திகதி வரைவு ஒன்று வரவுள்ளது. இன்று தமிழர்கள் மத்தியில் ஒரு குழப்பமான சூழ்நிலையை எமது அரசியல்வாதிகள் உருவாக்கியுள்ளனர். பாதிக்கப்பட்ட எமது மக்களுக்கு நீதி கிடைக்க வேண்டும். புரையோடிப் போயுள்ள எமது இனப் பிரச்சி னைக்கு நிரந்தர தீர்வு ஒன்றை பெற்றுக் கொள்ள வேண்டுமாகவிருந்தால் இலங்கையில் நடை பெற்ற இனப்படு கொலைகளை மேற் கொண்ட போர்க் குற்றவாளிகளுக்கு தண்டனை கிடைக்க வேண்டுமாகவிருந்தால் அதற்கு சர்வதேச விசாரணை தேவையென நாங்கள் கோரிக்கை விடுத்து வருகின்றோம்.

ஆனால் சில முதிர்ந்த அரசியல்வாதிகள் சர்வதேச விசாரணைகள் நடைபெற்றுவிட்டது. சர்வதேச விசாரணை இனி எதற்கு எனக் கூறுகின்றனர். ஆனால் ஐ.நாவால் விடுக்கப்பட்ட அறிக்கையில் இலங்கையில் இறுதிக்கட்டத்தில் நடந்த போருக்கு சர்வதேச விசாரணை தேவை, அது கலப்பு நீதிமன்றம் ஊடாக விசாரணை நடத்தப்படவேண்டும் என குறிப்பிட்டுள்ள நிலையில் சர்வதேச விசாரணை முடிந்துவிட்டதாக மக்களை குழப்புகின்றனர்.

நாங்கள் இதுதொடர்பில் தெளிவாக இருக்கவேண்டும். கடந்த காலத்தில் லட்சக்கணக்கான உயிர்களை இழந்த நாங்கள் மீண்டும் ஒரு இழப் பைச் சந்திக்ககூடாது என நினைப் போமானால் நாங்கள் ஒன்று பட்டு சர்வதேச விசாரணை ஊடாக இணைந்த வடகிழக்கில் நிரந்தர தீர்வைப் பெற்றுக் கொள்ளக் கூடிய தான நகர்வு இருக்க வேண்டும் – என்றார். (ற-10)



ஐக்கிய நாடுகளின் 70ஆவது ஆண்டு பொதுச்சபை கூட்டத்தில் கலந்துகொண்டுள்ள ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப்பை சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார். அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் நேற்றுமுன்தினம் இந்தச் சந்திப்பு நடைபெற்றுள்ளது. (ற)

# அரசின் தவறுகளுக்கு ஜே.வி.பி. பொறுப்புக்கூறியாக வேண்டும்

## முன்னாள் தலைவர் சோமவன்ச தெரிவிப்பு

கொழும்பு, செப்.28

தேசிய அரசின் தவறுகளுக்கு ஜே.வி.பி. பொறுப்புக்கூற வேண்டுமென்று அதன் முன்னாள் தலைவர் சோமவன்ச அமரசிங்க தெரிவித்துள்ளார். ஜே.வி.பியின் முன்னாள் தலைவர் சோமவன்ச அமரசிங்க தற்போது அந்தக் கட்சியிலிருந்து விலகி தனிக்கட்சியொன்றை ஆரம்பித்து, அரசியல் செயற்பாடுகளை முன்னெடுக்கின்றார்.

அத்துடன், கட்சியின் தற்போதைய தலைவர் அனுரகுமாரதிஸாநாயக்க, செயலாளர் ரில்வின் சில்வா, பரப்புரைச் செயலாளர் விஜித ஹேரத் ஆகியோர் மீது கடுமையான விமர்சனங்களையும் முன்வைத்து வருகின்றார்.

இந்த நிலையில் தேசிய அரசை அதிகாரத்துக்குக் கொண்டு வருவதில் ஜே.வி.பியின் புதிய தலைமைத் துவம் உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் பெரிய பங்களிப்புச் செய்துள்ளதாக சோமவன்ச அமரசிங்க குற்றம் சாட்டியுள்ளார்.

எனவே, இந்த அரசு மேற் கொள்ளும் அனைத்துத் தவறுகளுக்கும் ஜே.வி.பியின் தற்போதைய



முக்கியஸ்தர்கள் பொறுப்புக் கூற வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ற)

# சர்வதேசத் தண்டனையிலிருந்து மகிந்தவை காப்பாற்றினார் ரணில்

## அசாத் சாலி தெரிவிப்பு

கொழும்பு, செப்.28

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சர்வதேச தண்டனையிலிருந்து காப்பாற்றியுள்ளார் என்று மத்திய மாகாண சபை உறுப்பினர் அசாத் சாலி தெரிவித்துள்ளார்.

மனித உரிமை ஆணைக்கு குழு இலங்கையின் போர்க் குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல் குறித்து வெளியிட்டுள்ள அறிக்கை தொடர்பில் ஊடகம் ஒன்றுக்குக் கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

ஜனாதிபதி மைத்திரிபால மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் அமைத்துள்ள அரசானது இலங்கை மீது சுமத்தப்பட்ட போர்க் குற்றச்சாட்டுக்களிலிருந்து காப்பாற்றிள்ளது. அதன் மூலம் மகிந்த ராஜபக்சவும் காப்பாற்றப்பட்டுள்ளார்.



தற்போது சர்வதேச விசாரணை என்ற விடயம் உள்ளக விசாரணையாக மாறியுள்ளது. புதிய அரசில் [illegible] மக்களும் உரிய சமத்துவ[illegible]தப்படுவதைக் காணக்கூடியதாக உள்ளது– என்று தெரிவித்துள்ளார். (ற)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா



**மேடம்:** நண்பர்களின் உதவி தக்க சமயத்தில் கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் வருமானம் அதிகரிக்கும். பெண்கள் மனம் போல ஆடை, ஆபரணம் வாங்குவர். புத்திரரின் செயலைக் கண்டு மனம் மகிழ்வீர்கள்.

**இடபம்:** அனைவரிடமும் அன்பு பாராட்டி மகிழ்வீர்கள். தொழில், வியாபாரத்தில் வருமானம் பன்மடங்கு உயரும். குடும்பத்துடன் விருந்து, விழாவில் கலந்து கொள்வீர்கள். பணியாளர்கள், நிர்வாகத்தினரால் பாராட்டுப் பெறுவர்.

**மிதுனம்:** உற்சாகத்துடன் அன்றாடப் பணிகளில் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபாரத்தில் வருமானம் அதிகரிக்கும். பிள்ளைகள் வழியில் திடீர் செலவு ஏற்படலாம். அரசியல்வாதிகள், அரசியல் ரீதியான பயணம் மேற்கொள்வர்.

**கடகம்:** அறிமுகம் இல்லாதவரிடம் அதிக நெருக்கம் வேண்டாம். தொழில், வியாபாரத்தில் பொறுப்பும் அதற்கேற்ப இலாபமும் கூடும். ஆரோக்கியம் சீராக இருக்கும். பணியில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**சிங்கம்:** கடந்த கால உழைப்புக்கான பயனைப் பெறுவீர்கள். தொழில் வியாபாரத்தில் வியத்தகு வளர்ச்சி உண்டாகும். தாய்வழி உறவினர்கள் பாசத்துடன் நடந்து கொள்வர். ஆரோக்கிய விடயத்தில் அக்கறை கொள்வீர்கள்.

**கன்னி:** மற்றவர்களால் பிரச்சினைக்கு ஆளாகலாம் கவனம். தொழில், வியாபாரத்தில் மிதமான இலாபம் கிடைக்கும். நண்பர்களின் உதவியைக் கேட்டுப் பெறுவீர்கள். பிள்ளைகளின் செயற்பாடு ஆறுதல் அளிக்கும்.

**துலாம்:** எதிர்கால நலன் கருதி ஆர்வத்துடன் பாடுபடுவீர்கள். தொழில், வியாபாரத்தில் படிப்படியாக இலாபம் உயரும். பெண்கள் வாக்குவாதத்தில் ஈடுபட வேண்டாம். மாணவர்களுக்கு கல்வி வளர்ச்சிக்கான சூழல் அமையும்.

**விருச்சிகம்:** உறவினரிடம் இருந்த கருத்து வேறுபாடு மறையும். தொழில், வியாபாரத்தில் உழைப்புக்கேற்ப இலாபம் உயரும். மனம் விரும்பிய வகையில், ஆடம்பரச் செலவு செய்வீர்கள்.

**தனுசு:** சாதுரியமாகச் செயற்பட்டு வெற்றி காண்பீர்கள். தொழில் வியாபாரத்தில் வருமானம் பன்மடங்கு உயரும். புதிய வீடு, வாகனம் வாங்கும் முயற்சியில் ஈடுபடுவீர்கள். உறவினர் வருகையால் வீட்டில் மகிழ்ச்சி கூடும்.

**மகரம்:** மனதில் இனம்புரியாத மகிழ்ச்சி நிறைந்திருக்கும். அன்றாடப் பணிகளில் சுறுசுறுப்பாக ஈடுபடுவீர்கள். தொழில், வியாபாரத்தில் போதுமான இலாபம் கிடைக்கும். பணியாளர்களுக்குச் சலுகை கிடைக்க வாய்ப்புண்டு.

**கும்பம்:** நண்பர்களைச் சந்தித்துப் பேசி மகிழ்வீர்கள். தொழில், வியாபாரத்தில் மிதமான ஆதாயம் கிடைக்கும். பெண்கள் வீட்டுச் செலவில் சிக்கனத்தைப் பின்பற்றுவர். மாணவர்கள் படிப்பில் மட்டும் கவனம் செலுத்தவும்.

**மீனம்:** நிதானத்துடன் செயற்பட்டால் பிரச்சினை உண்டாகாது. தொழில், வியாபாரத்தில் சுமாரான இலாபம் கிடைக்கும். பணியாளர்கள் பணி நிமிர்த்தம் வெளியூர் செல்வர். பெண்கள் ஆடம்பர எண்ணத்தைக் கைவிடுவது நல்லது.

## பித்தனின் சிந்தனை



**பெண் :** டொக்டர் என்னுடைய இரண்டு வயது மகன் எப்ப பார்த்தாலும் விரல் சூப்புகின்றான் .

**டாக்டர் :** ஒன்றும் பிரச்சினை இல்லை.....மாற்றிவிடலாம்

**பெண்:** சரியான அவமானமாக இருக்குது டாக்டர் எல்லாரும் கேலி,கிண்டல் செய்யினம்;...எவ்வளவு செலவானாலும் பரவாயில்லை.

**டாக்டர் :** ஒன்றும் செலவில்லை ... உங்களுடைய இரண்டு வயது மகனுக்கு ஒரு பெரிய பையனுடைய ...... காற்சட்டையை போட்டு விடுங்கள்....அவ்வளவுதான்

**பெண் :** (குழப்பமாக)......எதுக்கு டொக்டர்..?

**டாக்டர்:** அந்தக் கால் சட்டை அவனுக்குப் பெரிதாக இருக்கும்:... அது கழண்டு விடாமல் மேலே இழுத்து விடுவதே அவனுடைய வேலையாக இருக்கும், விரல் சூப்புவதற்கு நேரம் இருக்காது.

மிருகக் காட்சி சாலையில் புலி
ஒன்று பார்வையாளரில்
ஒருவரைக் கொன்றுவிட் டது.
அதைக் கண்ட பக்கத்து கூண்டில்
இருந்த குரங்கு புலியைப் பார்த்துக்
கேட்டது
ஏன் அவனைக் கொன்றாய்
புலி : அந்தப் பரதேசி நாய் மூன்று
மணிநேர மாக என்னைப் பார்த்துச்
சொல்லுறான் எவ்வளவு பெரிய
பூனை என்று

பலர் நாற்காலி
கிடைக்கும் வரை
தீயைப்போல சுறுசுறுப்பாய்
இருக்கிறார்கள்.
கிடைத்தபிறகோ அந்த
நாற்காலியைப்போல்
விறைத்துப் போகிறார்கள்...

--கவியரசு வைரமுத்து.



## பேஸ் புக்கில் பிடித்தவை...






இவ்ளோதாங்க ஆணோட வீரம் திருமணத்துக்கு முன்



திருமணத்துக்குப் பின்











வியத்தகு அரசு என்ன ஒரு அவசரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.மாவட்டத்தில் இலவச நீரிழிவு சிகிச்சை முகாம் நடத்த ஏற்பாடு

## சனசமூக நிலையங்களின் ஒத்துழைப்பு தேவை

சாவகச்சேரி,செப்.28
யாழ்.போதனா வைத்தியசாலையின் நீரிழிவு சிகிச்சைப் பிரிவினர் வைத்தியசாலை அபிவிருத் திச் சங்கத்தடன் இணைந்து யாழ். மாவட்டத்தி லுள்ள அனைத்துப் பிரி வுகளிலும் இலவச நீரிழிவுப் பரி சோதனை முகாம்களை நடாத்தத் திட்டமிட் டுள்ளனர். இதற்கு அந்தந் தப் பிரிவில் உள்ள சனசமூக நிலை யங்களின் ஒத்துழைப்பை எதிர் பார்த்துள்ளதாக ஏற்பாட்டாளர்கள் அறிவித் துள்ளனர். ஒவ் வொரு பிரிவிலும் கண்டறியபடா மல் இருக்கும் நீரிழிவு நோய்,உயர் குருதி அமுக் கம், அதிகரித்த உடற்பருமன், அதிகரித்த கொழுப் புப்படிவு ( கொலஸ்ரோல் ) போன்ற சுகாதாரப் பிரச்சினைகளைக் கண்டறிய சனசமூக நிலை யங்கள் ஊடாக இலவச பரிசோதனை முகாம் களை அந்தந்த இடங்களில் நடத்தவுள்ளனர். தமது பிரிவில் இலவச பரிசோதனைகளை நடத்த விரும்பும் சனசமூக நிலையங்கள் அந்தப் பகுதியில் உள்ள 50 க்கும் மேற்பட்டோரை பரிசோதனையில் கலந்து கொள்ள ஒழுங்குகள் மேற்கொண்ட பின் னர், நீரிழிவு சிகிச்சை நிலையம், போதனா வைத்திய சாலை, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அறிவிக்குமாறும், பரிசோத னைக் தினத்தன்று பரிசோதனைக்கு வரு வோர் சுமார் 12 மணி நேரத்துக்கு முன்னர் உணவு மற்றும் தேநீர் அருந் தாமல் கலந்துகொள்ள அறி வுறுத்துமாறும் போதனா வைத்தியசாலைப் பணிப் பாளர் அறிவித்துள்ளார். யாழ். மாவட்டத்தில் நடத்தப்படும் இலவச பரிசோதனை முகாம்களில் பெருமளவு நீரிழிவு நோயாளர்கள் இனங்காணப்படுவதால் இந்த நோயினால் பாதிக்கப்படுவோரை ஆரம்பத் திலேயே இனங்கண்டு உரிய சிகிச்சை வழங்கும் முகமாக மேற்கொண் டுள்ள யாழ்.போதனா வைத்தியசாலையின் முயற்சிக்கு பொது அமைப் புக்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டுமென எதிர் பார்க்கப்படுகிறது. (ஐ)

### யாழ்.பல்கலைக்கழக மாணவர்களுடன் பேராசிரியர் மௌனகுரு இன்று சந்திப்பு

யாழ்ப்பாணம்,செப்.28
கிழக்குப் பல்கலைக்கழகப் பேரா சிரியர் மௌனகுரு யாழ். பல் கலைக்கழக மொழிபெயர்ப்புத் துறை மாணவர்களை இன்று முற் பகல் 10 மணிக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலக மண்டபத் தில் சந்திக்கவுள்ளார். தொடர்ந்து பிற்பகல் 3 மணிக்கு லண்டன் செ.பாலேந்திராவின் 'நெட்டை மரங்கள்' கவிதா நிகழ்வும்மௌன குருவின் சாண்வ தனம் அரங்க நிகழ்வும் நடைபெறவுள்ளன. யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடை பெறும் இந்த நிகழ்வில் ஆர் வலர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (ஐ–10)

## அறிவித்தல்

**கைதடி வீட்டுத் திட்டச் சங்க ஆதனம் (சிங்கமலைத் தோட்டம்) முழுவதும் 03.10.2015 காலை 8.00 மணிக்கு சங்க உறுப்பினர்கள் சமூகத்தில் அளப் பனவு செய்யப்படவுள்ளது என்பதை உறுப்பினர்கள் யாவருக்கும் இத்தால் அறியத் தருகின்றோம்.**

**கைதடி வீட்டுத் திட்டச் சங்கத்திடம் உறுதி நிறைவேற்றியிருந்தும் இதுவரை வீடமைத்து குடியிருக்காத உறுப்பினர்களின் உறுதிகள் யாவும் சங்க விதிகளுக்கமைய இரத்தாகியதாக கருதப்பட்டு புதிய உறுப்பினர்களுக்கு உறுதி நிறைவேற்றிக் கொடுக்கப்படும் என்பதை இத்தால் அறியத் தருகிறோம்.**

**கைதடி வீட்டுத் திட்டச் சங்கத்தால் உறுதி நிறைவேற்றப்பட்டு, இதுவரை குடியமராத அக்கறையுடையவர்கள் யாராவது இருப்பின் அன்றைய தினம் காலை 8.00 மணிக்கு சங்க தலைவர் செயலாளரை வீட்டுத் திட்டச் சங்க ஆதனத்தில் சந்திக்குமாறு இத்தால் கேட்டுக் கொள்ளப்படு கின்றீர்கள்.**

நா.சிதம்பரக்குருக்கள் — செயலாளர்
தம்பையா வேலாயுதம் — சட்ட ஆலோசகர்
சே. து.தட்சணாமூர்த்தி — தலைவர்
கைதடி வீட்டுத்திட்ட சங்கம்
பதிவு திகதி 15.04.1975 பதிவு இலக்கம் 2455
சங்கச் செயலகம்: 258 ,அரசடி வீதி,கந்தர்மடம்,யாழ்ப்பாணம்

# சிறைக்கைதிகளுக்கு கைப்பணிப் பயிற்சி

யாழ்ப்பாணம்,செப். 28
பனை அபிவிருத்திச் சபை, யாழ். சிறைச் சாலையில் தங்கியிருக்கும் கைதிக ளுக்கு பனம்பொருள் உற்பத்திக் கைப் பணிப் பயிற்சியொன்றை ஆரம்பித்துள்ளது. சிறைச்சாலையில் உள்ள சுமார் இருபது கைதிகளுக்கு ஆறு மாதங்கள் இந்தப் பயிற்சி வழங்கப்படவுள்ளது. சிறைச்சாலையில் ஆறு மாதங்கள் சிறைத் தண்டனை வழங்கப்பட்ட கைதி களுக்கே இந்தப் பனம் உற்பத்திக், கைப்பணிப் பயிற்சி வழங்கப்பட்டு வருகின்றது. பனை அபிவிருத்திச் சபை யின் தலைவர் எஸ்.கோகுலதாசன் இந்தக் கைதிகளுக்கான பயிற்சிகளை ஆரம்பித்து வைத்துள்ளார். சபையின் பொதுமுகாமையாளர் பி.லோகநா தன், விரிவாக்க முகாமையாளர் கே.கோபாலகிருஷ்ணன் ஆகியோ ரும் நிகழ்வில் கலந்து கொண்டனர். சிறைக் கைதிகளுக்கான இந்த ஆறு மாதங்களைக் கொண்ட பயிற்சி நெறியின் முடிவில் அவர்களுக்கு கைப்பணிக்கான உபகரணங்கள் மற் றும் பொருள்களைப் பனை அபிவிருத் திச்சபை வழங்கும் என்றுசபையின் அதி காரி ஒருவர் தெரிவித்துள் ளார்.(ஐ–17)

# நுளம்புப் பெருக்கத்துக்கு ஏதுவான சூழல் மூவருக்கு தலா 3 ஆயிரம் ரூ. அபராதம்

சாவகச்சேரி,செப்.28
நுளம்பு பெருகுவதற்கு ஏதுவான நிலையில் குடியிருப்புகளை வைத் திருந்த மூன்று பேருக்கு சாவகச்சேரி நீதிமன்றில்தலா 3 ஆயிரம் ரூபா வீதம் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. கடந்த வாரம் சுகாதாரப் பகுதியினருடன் இணைந்து டெங்குக் கட்டுப்பாட்டு வாரத்தில், குடியிருப்புக்கள் மற்றும் காணிகள் தரிசிப்பு நடவடிக்கையில் ஈடுபட்ட பொலிஸார், நுளம்புப் பெருக் கத்துக்கு ஏதுவான நிலையில் காணி கள் மற்றும் குடியிருப்புக்களை வைத் திருந்த மூவருக்கு எதிராக நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்தனர். வழக்கு களைத் தனித்தனியாக விசாரித்த நீதிவான் அவர்கள் குற்றத்தை ஒப்புக் கொண்டதை அடுத்து தலா 3 ஆயிரம் ரூபா வீதம் அபராதம் விதித்தார்.
இதே வேளை– மதுபோதையில் தலைக்கவசமின்றி மோட்டார் சைக்கிள்செலுத்திய நபர் ஒருவருக்கு 8 ஆயிரத்து 500 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. (ஐ)

# நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டும் வீதி விளக்குகள் பொருத்தப்படவில்லை

சாவகச்சேரி,செப்.28
சாவகச்சேரி பிரதேச சபையினால் பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில், மக்கள் பங்களிப் புட னானமின்வீதி விளக்குகள்பொருத் துவதற்கு நிதி ஒதுக்கப்பட்டும், இதுவரை அந்த வேலைத்திட்டம் மேற்கொள்ளப்படவில்லையென அப்பகுதி பொதுமக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். பிரதேச சபை செயற்பட்ட காலத்தில் மக்களின் கோரிக்கை விடுக்கப்பட்டதை யடுத்து நூற்றுக்கணக்கானோர் தமது விண்ணப்பங்களை வழங்கி யிருந்தனர். விண்ணப்பங்கள் அனுப்பப்பட்டு ஆறுமாதங்களா கியும் மக்கள் பங்களிப்புடனான வீதி விளக்குகள் பொருத்தும் பணி கள் இடம்பெறவில்லை. அத்துடன் பிரதேசத்தின் பல இடங்களில் வீதி விளக்குகள் இல்லாததால் இரவு வேளைகளில் திருடர்களின் நட மாட்டம் அதிகரித்துள்ளதால் இந் தத் திட்டத்தை உடனடியாக நடை முறைப்படுத்துமாறும் பிரதேச மக்கள் கேட்டுள்ளனர்.
இது தொடர்பாக முன்னாள் பிரதேச சபை உறுப்பினர்களுடன் தொடர்பு கொண்டு கேட்டபோது இந்த மின் விநியோகம் தொடர்பாக சபையின் கூட்டத்தில் ஆராயப்பட்டு ஒவ் வொரு உறுப்பினரின் பிரிவுக ளிலும் தலா 3 லட்சம் ரூபா செலவில் மக்கள் பங்களிப் புடனான மின்விநியோகத் திட்டம் ஆரம்பிக்கப் படல் வேண்டுமென முடிவு செய்யப்பட்டு நிதி யும் ஒதுக்கப்பட்டுள் ளது எனத் தெரி வித்துள்ளனர். இது தொடர்பாக பிரதேச சபை யிடம் கேட்ட போது மக்கள் பங்களிப்புடனான மின்விநியோகத் திட்ட வேலைகள் இலங்கை மின்சார சபையின் உதவி யுடன் மேற் கொள் ளப்பட அவர்களது உதவிகள் கோரப் பட்டுள்ளன. அவர் கள் அதற்குரியநாள் நேரத்தை ஒதுக் கித்தரும் பட்சத்தில் பொருள்களைக் கொள்வனவு செய்து வேலை கள் மேற் கொ ள் ள ப் ப டு ம் எனத் தெரிவித்துள் ளது. (ஐ)

## வெங்கலச்செட்டிகுளம் பிரதேச சபை இறைச்சிக் கடை/மீன் கடை/ பொதுச் சந்தை நடத்துவதற்கான கேள்வி அறிவித்தல் - 2016

01.01.2016 தொடக்கம் 31.12.2016 வரையிலான காலப்பகுதிகளுக்கு கீழ்காணும் குத்தகைகளுக்கான கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விப்படிவங்கள் இணைப்பிரதிகளில் வழங்கப்படும். கேள்விப் படிவங்களின் ஒரு பிரதி அரக்கு முத்திரை இடப்பட்டு தவிசாளர், பிரதேசசபை, வெங்கலச்செட்டிகுளம் என்ற முகவரிக்கு பதிவுத்தபால் மூலமாகவோ அன்றேல் பிரதேசசபை அலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப் பெட்டியிலோ 2016ஆம் ஆண்டு 10ஆம் மாதம் 14ஆம் திகதி மு.ப 10.00 மணிக்கு முன்னதாக கிடைக்கக்கூடியதாக சேர்க்கப்படல் வேண்டும். இரண்டாவது பிரதியினை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், பூங்கா வீதி, வவுனியா என்ற விலாசத்துக்கு குறித்த திகதியில் அல்லது அதற்கு முன்னர் அனுப்பிவைக்கப்படுதல் வேண்டும்.கேள்விப் படிவங்கள் யாவும் 14.10.2016ஆம் திகதி மு.ப 11.00 மணிக்கு திறந்து பரிசீலிக்கப்படும். கேள்விப்பத்திரத்தை 22.09.2016 – 13.10.2016 பிபகல் 3.00 மணிவரை வெங்கலச்செட்டிகுளம் பிரதேசசபை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். கேள்வி திறத்தலின் போது கேள்விதாரர் அல்லது அவரால் எழுத்துமூலம் அதிகாரமளிக்கப்பட்டவர் கேள்விச்சபை கூட்டத்தில் பார்வையாளராக கலந்து கொள்ள முடியும்.

நிபந்தனைகள்

1. விண்ணப்பதாரி தொடர்ச்சியாக 03 வருடங்கள் செட்டிகுளம் பிரதேசத்தில் வசிப்பவர் என்பதற்கான கிராமசேவையாளரின் சான்றிதழுடன் கேள்விப்படிவம் பெறப்பட வேண்டும்.
2. ஏற்கனவே குத்தகை கேள்வி கோரலில் பிரதேசசபை கறுப்புப்பட்டியலில் உள்வாங்கப்பட்டவர்களுக்கு கேள்விப்படிவங்கள் வழங்கப்பட மாட்டாது.
3. சித்தியெய்தும் கேள்விதாரர் 14.10.2016இல் இருந்து 07 (ஏழு) நாட்களிற்குள் 1/3 வைப்புத்தொகையை செலுத்தத்தவறின் குத்தகை கேள்வி இரத்துச்செய்வதுடன் கேள்வி வைப்பு மீளளிக்கப்பட மாட்டாது.

| இல | கடை விபரம் | வருடாந்த குத்தகை | மீளளிக்கப்படும் வைப்பு | கேள்விப் படிவ கட்டணம் |
|---|---|---|---|---|
| 1 | மாட்டிறைச்சிக் கடை ஆண்டியாபுளியங்குளம் | 199,700.00 | 8,000.00 | 1000.00 |
| 2 | மாட்டிறைச்சிக் கடை மாங்குளம் | 599,000.00 | 8,000.00 | 1000.00 |
| 3 | மாட்டிறைச்சிக் கடை சின்னச்சிப்பிக்குளம் | 131,500.00 | 8,000.00 | 1000.00 |
| 4 | மாட்டிறைச்சிக் கடை குருவெந்தபுலவு | 424,000.50 | 8,000.00 | 1000.00 |
| 5 | பொதுச் சந்தை மாங்குளம் | 303,334.00 | 8,000.00 | 1000.00 |
| 6 | மாட்டிறைச்சிக் கடை செட்டிகுளம் | 245,500.00 | 8,000.00 | 1000.00 |
| 7 | மாட்டிறைச்சிக் கடை பாவற்குளம் | 44,000.00 | 8,000.00 | 1000.00 |
| 8 | மீன் கடை செட்டிகுளம் | 224,100.00 | 8,000.00 | 1000.00 |
| 9 | மீன் கடை குருவெந்தபுலவு | 19,325.00 | 8,000.00 | 1000.00 |
| 10 | மீன் கடை மாங்குளம் | 223,000.00 | 8,000.00 | 1000.00 |
| 11 | ஆட்டோ தரிப்பிடம் (செட்டிகுளம், மாங்குளம், வீரபுரம், ஆண்டியாபுளியங்குளம்) | 38,302.00 | 5,000.00 | 1000.00 |
| 12 | கணேசபுரம் கடை இல 01 | 7,200.00 | 5,000.00 | 1000.00 |
| 13 | கணேசபுரம் கடை இல 02 | 7,200.00 | 5,000.00 | 1000.00 |

குறிப்பு : கேள்விச்சபையின் தீர்ப்பே இறுதியானது

சுப்பிரமணியம் விஜயதாஸ்
செயலாளர்,
பிரதேசசபை,
வெங்கலச்செட்டிகுளம்.

பிரதேசசபை,
வெங்கலச்செட்டிகுளம்,
25.09.2015

(சி.19367)(13.15)

# மலர் வெளியீடும் சான்றிதழ் வழங்கலும்

வடமராட்சி,செப்.28
வடமராட்சி சுருக்கெழுத்துக் கழகத்தின் 30 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு மலர் வெளியீடும் சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் முதலாம் திகதி வியாழக் கிழமை முற்பகல் 10மணிக்கு மாலைசந்தி பிள்ளையார் ஆலயத்தில் நடைபெறவுள்ளன. இதில் முத்து நூல் வெளியீடும், கற்கை நெறியை நிறைவு செய்த மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் வைபவமும் நடைபெறவுள்ளன.
இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக முன்னாள் கழகக் காப்பாளரும், ஓய்வு நிலை கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரச அதிபர் செ.ஸ்ரீநிவாசன் கலந்துகொள்ளவுள்ளார். அதனைத் தொடர்ந்து எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 4 ஆம் திகதி ஞாயிற் றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு விழா நிகழ்வுகளும் நடை பெறவுள்ளது. சட்டத்தரணி அ.க.நடராசா தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக மன்னார் ஓய்வு நிலை அரச அதிபர் வே.விஸ்வலிங்கம் கலந்து கொள்வார். (ஐ–422)

## சட்டவிரோதமாக மின்சாரம் பெற்றவர் பொலிஸாரால் கைது

சாவகச்சேரி,செப்.28
சட்ட விரோதமாக மின்சாரம் பெற்றவர் ரோந்து சென்ற பொலிஸாரிடம் வசமாக மாட் டிக் கொண்டார்.
இந்தச் சம்பவம் வரணி மாசேரி யில் இடம்பெற்றது.
குறித்த நபருக்கு எதிராக கொடி காமம் பொலிஸார் சாவ கச்சேரி நீதிமன்றில் கடந்த 25 ஆம் திகதி வழக்குத் தாக்கல் செய்தனர்.
வழக்கை விசாரித்த நீதிவான் 50 ஆயிரம் ரூபா பெறுமதி யான ஆள்பிணையில் செல்ல அனுமதித்து வழக்கை எதிர் வரும் ஒக்ரோபர் 23 ஆம் திகதிக்கு ஒத்திவைத் தார். (ஐ)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# பரசங்குளம் விவசாயிகளுக்கு காணிகள் வழங்க நடவடிக்கை

### நெடுங்கேணி பிரதேச செயலாளர் பரந்தாமன் தெரிவிப்பு

மாங்குளம்,செப்.28

பரசங்குளப் பகுதியில் வயல் காணிகள் அற்ற விவசாயிகளுக்கு காணிகள் வழங்கும் நட வடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக நெடுங்கேணி பிரதேச செயலாளர் பரந்தாமன் தெரிவித்துள்ளார்.

இந்தக் காணிகள் மாகாணக் காணி அலுவலர்களின் அனுமதியுடன் வழங்குவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பரசங்குளம் தற்போது ஐ.ஓ.எம் நிறுவனத்தினரால் புனரமைக்கப் பட்டுள்ளது.

இதனால் அந்தக் குளத்தைப் பயன் படுத்தி சிறு போகம், பெரும் போக வயல்கள் விதைக்கப்படவுள்ளதால் விவசாயிகளுக்கு நல்ல பயனைத் தரக்கூடும். அந்தப் பகுதியில் விவசாய நிலம் அற்ற விவசாயிகளுக்கு ஒரு ஏக்கர் வீதம் காணிகள் வழங்கப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஐ-422)

# அதிக சத்தத்துடன் ஒலிபெருக்கிகள் நிறுத்துமாறு மக்கள் கோரிக்கை

முல்லைத்தீவு,செப்.28

முல்லைத்தீவு மாவட்டத்தில் வானொலி மற்றும் ஒலிப்பேழைகள்,ஒலிபெருக்கி ஆகியவற்றை அதிக சத்தத்துடன் ஒலிக்கவிடுவதை நிறுத்த ஆவன செய்ய வேண்டும் எனக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. குறிப்பாக பிரதேசம் தோறும் இரவு நேரங்களில் அதிக சத்தத்துடன் நீண்ட நேரமாக சினிமாப் பாடல்களை ஒலிக்க விடுவதால் அருகாமையில் உள்ள பிள்ளைகளின் கற்றல் செயற்பாடுகள் தடைப்படுவதுடன் அதிக ஒலியால் சிறுவர் முதல் பெரியோர் வரை தூக்கமின்றியும் அவதிக்குள்ளாகியுள்ளனர். அத்துடன் ஆலயங்களிலும் அதிக ஒலியுடன் ஒலிபெருக்கிகளில் பாடல்கள் ஒலி பரப்பப்படுகின்றன.

இதனால் மக்களுக்கு இடையூறுகள் ஏற்படுகின்றன. எனவே பாடல்களை கேட்க விரும்புவோர், அடுத்தவர்களுக்கு இடையூறு விளைவிக்காது மட்டுப்படுத்தப்பட்ட சத்தத்துடன் கேட்குமாறு வேண்டப்படுவதுடன், இரவு நேரங்களில் அதிக ஒலியுடன் நீண்ட நேரம் ஒலி பெருக்கிகளை ஒலிக்க விடுபவர்கள் மீது பொலிஸார் நடவடிக்கை எடுக்குமாறும் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஐ-500)

# வடக்கு - கிழக்கு பிரதேசங்களில் ஹர்த்தால் அனுஷ்டிக்க வலியுறுத்து

யாழ்ப்பாணம், செப்.28

சர்வதேச விசாரணைப் பொறிமுறையே நடைமுறைப்படுத்த வேண்டும். அதனை வலியுறுத்துவதற்காக இன்று திங்கட்கிழமை தொடக்கம், நாளை மறுதினம் புதன்கிழமை வரை வடக்கு - கிழக்கு பிரதேசங்களில் ஹர்த்தால் அனுஷ்டிக்குமாறு, மக்கள் சக்தி அமைப்பு வேண்டுகோள் விடுத்துள்ளது. இது தொடர்பில் அந்த அமைப்பின் தலைவர் எம்.குமாரவேல் ஊடகங்களுக்கு அனுப்பி வைத்துள்ள அறிக்கையிலேயே இவ்வாறு வேண்டுகோள் விடுத்துள்ளார். ஜனநாயக எழுச்சிப் போராட்டமாக இது இடம்பெற வேண்டும் என்றும் அவர் அந்த அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளார். (ஐ-5)

# தனன்களப்பு விவசாயிகளுக்கு மானிய உரம்

சாவகச்சேரி,செப் .28

தென்மராட்சி தெற்கு தனன்களப்பு கமக்கார அமைப்புக்குட்பட்ட நெற்செய்கையாளர்களுக்கு 2015 -2016 காலப்பகுதிக்குரிய மானிய உர வகைகள் எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் முதலாம் திகதி வரை மீசாலை புத்தூர் சந்தி கமநல சேவைகள் நிலையத்தில் வழங்கப்படவுள் ளன. கமக்கார அமைப்பில் பதிவு செய்த அனைத்து உறுப்பினர்களையும் அன்றைய தினம் கலந்து கொண்டு தமக்குரிய உர வகைகளைப் பெற்றுக்கொளுமாறு அமைப்பின் தலைவர் வீ.சதானந்தன் அறிவித்துள் ளார். (ஐ)

## 5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில் 26 09 1934

ஆண்டவன் அடியில் 24 09 2010

**அமரர் கந்தர் இராஜரத்தினம்**

திதி- அபரபட்ச பிரதமை 28.09.2010


எங்கள் அன்பு அப்பா நீங்கள் மறைந்து 5 ஆண்டுகள்
எப்படித்தான் ஓடி மறைந்ததுவோ ஒளிவிளக்காய்
எம் நல் வாழ்வுக்கு வழிகாட்டி
எமை வாழவைத்த அன்புத் தெய்வமே அப்பா!
என்றும் எங்கள் தெய்வமான உங்களை
எம் உள்ளத்தில் வைத்துப் பூஜிக்கும்

"கோகுலம்"
காளிகோயில் வீதி,
கொக்குவில் கிழக்கு.

குடும்பத்தினர்.

# தேர்தல் திணைக்களத்தின் 60 ஆவது வருட நிறைவு

## பள்ளிவாசலில் பிரார்த்தனை



கொழும்பு, செப்.28

தேர்தல் திணைக்களத்தின் 60 ஆவது ஆண்டு நிறைவு தினத்தை முன்னிட்டு யாழ்ப்பாணம் முஹம்மதியா ஜும்மா பள்ளிவாசலில் பிரார்த்தனை நிகழ்வு நடைபெற்றது. இதன் போது யாழ். மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் ரி.அகிலன் மற்றும் உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டு மக்களுக்குத் தேர்தல் திணைக்களத்தின் ஆரம்பம் முதல் அதன் செயற்பாடுகள் குறித்துக் கருத்து தெரிவித்தனர். இந்த நிகழ்வை கிராமசேவகர் ஆர்.சல்பீர் நெறிப்படுத்தியதுடன் நிகழ்வில் பள்ளிவாசலின் நிர்வாகத் தலைவர் எ.சி முபீன் மற்றும் பேஷ் இமாம் மௌலவி மஹ்மூத் பலாஹி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். (ஐ-10)

# 'அலுகோசு' பதவிக்கு மீளக் கோரிக்கை

கொழும்பு,செப்.28

தூக்குத்தண்டனையை நிறைவேற்றும் அலுகோசு பதவி தொடர்பான பயிற்சியைப் பெற்றதன் பின்னர் அந்தச் சேவையைக் கைவிட்டுச் சென்றிருந்த இருவரும் மீளவும் அந்தப் பதவியைக் கோரியுள்ளனர். நீர்கொழும்பைச் சேர்ந்த பீ. சரத் புஸ்பகுமார மற்றும் கம்பஹ வாசியான கே.டீ.பத்மசிறி ஆகிய குடும்பஸ்தர்கள் இருவருமே இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளனர். இந்த இருவரும் பயிற்சியின் பின்னர் வழங்கப்பட்டிருந்த விடுமுறையில் வீடுகளுக்குச் சென்று திரும்பி கடமைக்குச் செல்லாமல் இருந்ததன் காரணமாக, சேவையைக் கைவிட்டுச் சென்றிருப்பதாகக் கருதிய சிறைச்சாலைகள் திணைக்களம் உரிய செயற்பாடுகளை மேற்கொண்டிருந்தது.

மேற்படி திணைக்களத்தில் நிலவியிருந்த தண்டனை நிறைவேற்றும் அலுகோசு பதவிகள் இரண்டுக்கும் 2012 ஆம் ஆண்டில் விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்தன. அந்தப் பதவி தொடர்பாக கிடைக்கப்பெற்றிருந்த 167 விண்ணப்பங்களுள் 2013 ஆம் ஆண்டில் இவர்கள் இருவரும் தெரிவு செய்யப்பட்டிருந்தனர்.

அதற்கு அமைய ஆறுவார காலப் பயிற்சி ஒன்றின் பின்னர் இவர்கள் இருவரும் ஓய்வூதியச் சம்பளத்துடனான அலுகோசு பதவிகள் தொடர்பாக சேர்த்துக் கொள்ளப்பட்டிருந்ததோடு இருவருக்கும் மூன்று நாள் விடுமுறை ஒன்றும் கிடைத்திருந்தது.

விடுமுறைக்குப் பின்னர் அவர்கள் மீள சேவைக்கு வந்து பொறுப்பேற்றுக்கொள்ளாதிருந்துள்ள குற்றச்சாட்டின் மீது 2013 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 4 ஆம் திகதி அவர்களின் சேவை முடிவுக்குக் கொண்டுவரப்பட்டிருந்தது. தமது தற்போதைய நிலை தொடர்பில் கொழும்பின் சிங்களப் பத்திரிகை ஒன்றுக்கு கருத்து வழங்கியிருந்த இவர்கள். அறியாமை காரணமாக நாம் தெரியப்படுத்தாது, சேவையைக் கையெழுத்திட்டு பொறுப்பேற்காது இருந்துவிட்டோம். ஆனாலும் அந்தப் பதவி கிடைக்குமென்ற நம்பிக்கை இன்னமும் எமக்குண்டு. எனவே புதிதாக அந்தப் பதவிக்கு இருவரைச் சேர்த்துக் கொள்ளும் அவசியம் இருக்காது என்றே கருதுகிறோம். அரசு மீண்டும் சாவுத்தண்டனையை நடைமுறைக்கு கொண்டு வருமானால் எந்தச் சந்தர்ப்பத்திலும் அந்தச் சேவையை நிறைவேற்றத் தயாராக இருக்கிறோம். இருவருக்குமே நிரந்தரமான தொழிலொன்றும் இல்லை. சிரமத்துடனேயே வாழ்க்கையை நடத்தி வருகிறோம் என அவர்கள் குறிப்பிட்டுள்ளனர். (ஐ-22)

# விபத்தொன்றில் தந்தையும், மகனும் காயம்

சாவகச்சேரி,செப்.28

முன்னால் சென்ற கொண்டிருந்த ஓட்டோ சமிக்ஞை செய்யாமல் திடீரென எரிபோருள் நிலையத்தினுள் திரும்பியதால் பின் தொடர்ந்து வந்த மோட்டார் சைக்கிள் ஓட்டோவுடன் மோதியதில் அதில் பயணித்த தந்தையும், மகனும் காயமடைந்தனர்.

இந்தச் சம்பவம் கடந்த 24 ஆம் திகதி சாவ கச்சேரி எரிபொருள் நிலையத் துக்கு முன்பாக ஏ -9 வீதியில் இடம்பெற்றது. காயமடைந்த வரணி நாவற்காட்டைச் சேர்ந்த இருவரும் சிகிச்சைக்காக சாவகச்சேரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். (ஐ)

# பொதுக் கூட்டமும் புதிய நிர்வாக சபைத்தெரிவும்

மாங்குளம் மத்திய மகா வித்தியாலயத்தின் பழைய மாணவர் சங்கப் பொதுக் கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு பாடசாலையின் அதிபர் ப.ரவீந்திரநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது. இதில் இந்தப் பாடசாலையில் கற்று வெளியேறிய பழைய மாணவர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு பழைய மாணவர் சங்கச் செயலாளர் அறிவித்துள்ளார். (ஐ-422)

# பெண்களுக்கு எதிரான வன்முறைகளை எதிர்த்து பெண்கள் வலையமைப்பினால் மனு கையளிப்பு

மட்டக்களப்பு, செப்.28

பெண்களுக்கெதிரான வன்முறைகள் மற்றும் பாலியல் துஷ்பிரயோகங்களை எதிர்த்து கடந்த 24 ஆம் திகதி திருகோணமலை மாவட்ட பெண்கள் வலையமைப்பினால் மனுவொன்று கிழக்கு மாகாண முதலமைச்சரிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

அமைப்பின் தலைவி, செயலாளர் கொண்ட குழுவினரே முதலமைச்சரைச் சந்தித்து மேற்படி மனுவை கையளித்தனர்.

இது தொடர்பில் கிழக்கு மாகாண முதலமைச்சர் ஹாபிஸ் நஸீர் அஹமட் கருத்து தெரிவிக்கும் போது; சிறுவர் துஸ்பிர யோகங்கள் மற்றும் பெண்களுக்கெதிரான வன்முறைகள் தொடர்பில் விழிப்பூட்டும் திட்டங்களை உள்ளூராட்சி மன்றங்கள் மற்றும் பாடசாலைகள் மூலமாக மேற்கொள்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளோம்.

சிறுவர் துஷ்பிரயோகத்துடனான கொலைகளுக்கு அரபி நாடுகளில் நிறைவேற்றப்படும் சாவுத் தண்டனை இலங்கையிலும் நிறைவேற்றப்பட்டால் இப்படியான கொடூர சம்பவங்களை முற்றாக நிறுத்தலாம். அத்துடன் விரைவில் அப்படியான சட்டத்தைக் கொண்டுவர ஜனாதிபதி இணக்கம் தெரிவித்துள்ளார். எனவே, நாட்டில் சமத்துவம், சகோதரத்துவம் உருவாகியிருக்கும் இவ்வேளை இதன் நடைமுறை சரியானதாக நூறு வீதம் நடைமுறையில் இருக்க மேல்மட்டத்தில் இருந்து சகல துறையினரினதும், அனைவரின் கட்டாயக் கடமையாக இருக்கிறது. எனவே இனிமேலும் இவ்வாறான கொடூரச் சம்பவம் நாட்டில் நடை பெறாமல் இருக்க குற்றவாளிகளுக்கு தகுந்த தண்டனையை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனத் தெரிவித்துள்ளார். (ஐ-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாவல்மரங்களிலிருந்து வீழ்ந்து காயமடையும் சிறுவர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு

## பெற்றோர் அவதானிப்புடன் இருக்கவும் மருத்துவர்கள் எச்சரிக்கை

சாவகச்சேரி,செப். 28

தற்போது நாவல்பழ சீஸன் ஆரம்பித்துள்ளதால் தென்மராட்சி பிரதேசத்தில் நாவல்மரங்களிலிருந்து வீழ்ந்து காயமடையும் சிறுவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. இதனால் சிறுவர்கள் மீது பெற்றோர் அவதானிப்புடன் இருக்க வேண்டும் என மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர். உயரமான மரங்களில் ஏறும் சிறுவர்கள் தவறுதலாக விழும் பட்சத்தில் உயிராபத்துக்களையும் சந்திக்க நேரிடும். எனவே பெற்றோர் அவதானிப்புடன் இருக்க வேண்டும் என மருத்துவர்கள் எச்சரித்துள்ளனர். தற்போது நாவல் மரங்களிலிருந்து வீழ்ந்து காயமடைந்து வைத்தியசாலையில் சிகிச்சைக்காக தினமும் சிறுவர்கள் சேர்க்கப்பட்டு வருகின்றனர்.

தென் மராட்சிப் பகுதியில் மிருசுவில் தவசிகுளம் பகுதியைச் சேர்ந்த நகுலதாஸ் மதுஸன் ( வயது -12 ) என்பவர் நாவல் மரத்திலிருந்து வீழ்ந்து கால் முறிந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார். இதேவேளை மீசாலை கிழக்கைச் சேர்ந்த வரதராஜா நிதர்சன் ( வயது -13) என்பவரும் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# பனை வடலிகளை வெட்டிய மூவர் கைது

கரணவாய்,செப்.28

வடமராட்சி கரணவாய்ப் பகுதியில் 6 பனை வடலிகளை வேருடன் அகற்றி களவாகக் கொண்டு சென்ற மூவரை நெல்லியடிப் பொலிஸார் கடந்த வாரம் கைது செய்துள்ளனர். கரணவாய் புறாப்பொறுக்கிப் பகுதியிலுள்ள தனியாருக்குச் சொந்தமான காணியில் இருந்த இந்த பனம் வடலிகளை அகற்றிச் சென்று கொண்டிருந்தபோது, மண்டான் பகுதியில் வைத்து உழவு இயந்திரத்தையும், அதனைக் கொண்டு சென்ற மூவரையும் நெல்லியடிப் பொலிஸார் கைது செய்து நெல்லியடிப் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட மூவர் மீதும் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப் படவுள்ளதாகத் நெல்லியடிப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ஐ-108)

# மட்டக்களப்பில் வாகனங்கள் சோதனை



மட்டக்களப்பு, செப்.28

வீதி விபத்துக்களை தடுக்க, காத்தான்குடி பொலிஸ் நிலையத்தின் மோட்டார் போக்குவரத்து பிரிவினால் பல்வேறு செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அதன் ஓர் அங்கமாக மட்டக்களப்பு மாவட்டத்தின் காத்தான்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் செல்லும் மக்கள் பாவனைக்கு உதவாத பழைய ,புதிய வாகனங்கள் மற்றும் பழுதடைந்த வாகனங்களை பரிசோதிக்கும் நடவடிக்கை கடந்த வாரம் நடைபெற்றது. மட்டக்களப்பு கல்முனை காத்தான்குடி பிரதான வீதியில் மீரா பாலிகா தேசிய பாடசாலைக்கு முன்பாக இடம்பெற்ற இந்த நடவடிக்கையை காத்தான்குடி பொலிஸ் நிலைய மோட்டார் போக்குவரத்துப் பிரிவும், மட்டக்களப்பு மோட்டார் போக்குவரத்து திணைக்களமும் இணைந்து ஏற்பாடு செய்திருந்தன. காத்தான்குடி பொலிஸ் நிலைய மோட்டார் போக்குவரத்துப் பிரிவின் பொறுப்பதிகாரி துஷார ஜெயலால் தலைமையில் இடம்பெற்ற இந்த வாகனப் பரிசோதனை நிகழ்வில் மட்டக்களப்பு மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தின் பரிசோதகர் வீ.ஆர்.ரி.லக்ஷ்மன் பண்டார, மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தின் உத்தியோகத்தர் பாஹிம்உட்படகாத்தான்குடி பொலிஸ் நிலையத்தின் மோட்டார் போக்குவரத்து பிரிவின் பொலிஸ் உத்தியோகத்தர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

இதன்போது மோட்டார் போக்கு வரத்துத் திணைக்களத்தின் பரிசோதகர் வீ.ஆர்.ரி. லக்ஷ்மன் பண்டாரவினால் பழைய பழுதடைந்த வாகனங்கள் பரிசோதிக்கப்பட்டதுடன், ஒழுங்கற்ற முறையில் வாகனங்களைச் செலுத்திய வாகன உரிமையாளர்களின் சாரதி அனுமதிப் பத்திரமும் பொலிஸாரினால் பறிமுதல் செய்யப்பட்டது. அதன்போது மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தின் பரிசோதகரினால் ஒரு பத்திரம் வழங்கப்பட்டது. அந்தப் பத்திரம் வழங்கப்பட்டு பத்து தினங்களுக்குள் ஒழுங்கற்ற முறையில் செலுத்தப்பட்ட வாகனங்கள் சரி செய்யப்பட்டு, மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தின் பரிசோதகரிடம் காட்டப்படவேண்டும் எனவும், அப்படிக் காட்டப்பட்டால் சாரதி அனுமதிப்பத்திரம் பொலிஸாரினால் கொடுக்கப்படும். இல்லாவிட்டால் குறித்த வாகனங்கள் மக்கள் பாவனைக்கு உதவாத வாகனம் என்று நீதி மன்றத்துக்கு ஒப்படைக்கப்படும் என காத்தான்குடி பொலிஸ் நிலையத்தின் மோட்டார் போக்குவரத்து பிரிவின் பொறுப்பதிகாரி துஷார ஜெயலால் தெரிவித்தார். இந்த வாகனப்பரிசோதனையின்போது மக்கள் பாவனைக்கு உதவாத 38 வாகனங்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டன. (10)


**பணிப்பெண் தேவை**

சிறிய வைத்திய குடும்பம் ஒன்றுக்கு ,வீட்டில் தங்கி இருந்து வேலை செய்யக்கூடிய ஒருவர் தேவை.

தொடர்பு : 071 103 5422 , 077 327 6502

**காணி விற்பனைக்கு**

சாவகச்சேரி, டச்சு வீதி மண்டுவில் காளி கோயிலுக்கு முன்பாக உள்ள 5 பரப்புக் காணி பயன்தரு மரங்களுடன் உள்ள காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு : 077 940 1614

**மணமகள் தேவை**

சிவில் இஞ்சினியராக சிங்கப்பூரில் கடமைபுரியும் 5' 6" உயரமுடைய 1978ஆம் ஆண்டு Non R/C கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த மணமகனுக்கு மணமகள் தேவை.


தொடர்பு :T. வசந்தி 077 124 9118 , 021 321 6119

**வீடு வாடகைக்கு**

ஊரெழு பிள்ளையார் கோயிலுக்கு முன்பாக தம்பிதுரை கடைக்கு அருகில் வீடு வாட கைக்கு உண்டு. 8 Rooms களுடன் கூடிய வீடு வாடகைக்கு விடப்படும். அரச உத்தியோகத் தர்களுக்கும்,கிளினிக் சென்ரர்களுக்கும் உகந்தது.

தொ.பே. 077 494 6346


# இடர் முகாமைத்துவ நிலையத்தினர் அம்பாறை மாவட்டத்துக்கு பயணம்



அம்பாறை, செப்.28

இடர் முகாமைத்து அமைச்சின் கீழ் இயங்கிவரும் இடர் தொடர்பான எச்சரிக்கைச் சமிக்ஞையைப் பொது மக்களுக்கு வழங்கும் வீ.எச்.எப். தகவல் பரிமாற்றக் கருவிகளைப் பரிசோதிக்கும் இடர் முகாமைத்துவ நிலையத்தின் ஒரு குழுவினர் அம்பாறை மாவட்டத்துக்கு பயணம் செய்தனர்.

லெப்டினன் கேணல் டபிள்யு.எஸ்.என்.பெரேரா தலைமையில் கடந்த வாரம் பயணம் செய்த இந்தக் குழுவில், அவசர செயற்பாட்டு நிலையப் பொறுப்பதிகாரி பி.கொடித்துவக்கு, தகவல் பரிமாற்ற பொறுப்பதிகாரி எஸ்.அப்பு ஆராச்சி மற்றும் அம்பாறை மாவட்ட இடர் முகாமைத்துவ உத்தியோகத்தர் ஏ.ஏ.சக்கில் அஹமட் ஆகியோர் சென்றிருந்தனர். இந்தக் குழுவினர் அட்டாளைச்சேனை தள ஆயுள்வேத வைத்தியசாலையில் பொருத்தப்பட்ட இடர் தொடர்பான எச்சரிக்கை சமிக்ஞையைப் பொது மக்களுக்காக வழங்கும் வீ.எச்.எப். தகவல் பரிமாற்றக் கருவி கடந்த சில நாள்களாக சீரற்று காணப்பட்டு வந்தது. அதனை சீர் செய்துவிட்டு அந்தக்கருவி தொடர்பான தகவல் பரிமாற்றங்களை எவ்வாறு இடர் முகாமைத்துவ நிலையத் திலிருந்து பெறுவது என்பது தொடர்பில் மிகத்தெளிவான விளக்கத்தை கேணல் டபிள்யு.எஸ்.என்.பெரேரா அங்குகடமை யிலிருந்தவைத்தியர்நைரோஸா மற்றும் ஆண்கள் விடுதியில் கடமைபுரியும் உத்தியோகத்தர்களுக்கும் வழங்கி வைத்தார். கல்முனை, காரைதீவு, ஒலுவில், அட்டாளைச் சேனை, அக்கரைப்பற்று மற்றும் பொத்துவில் போன்ற பிரதேசங்களில் பொருத்தப்பட்டிருக்கும் இடர் எச்சரிக்கை சமிக்ஞை வழங்கும் வீ.எச்.எப். தகவல் பரிமாற்றக் கருவிகளையும் இந்தக்குழுவினர் பரீட்சித்துப் பார்த்தமையும் குறிப்பிடத்தக்கது. (ஐ-10)


**விசேட கட்டணச்சலுகையில் கணினிக்கற்கை நெறிகள்**

| | |
|---|---|
| Dip.in Information Technology | DITEC |
| Diploma in Office Automation | DOA |
| Dip. in Pre-Press Desktop Publicating | DTP |
| Diploma in Pc Applications | DPCA |
| Adv. Dip. in Hardware & Networking | ADHN |
| Dip. in Video Production & Multimedia | DVPM |
| Dip.in Web Designing & Development | DWD |
| Dip. in Computerized Accounting | DCA |



AfTER A\L

DMI COMPUTER EDUCATION

Spoken English

புதிய பிரிவுகள் ஆரம்பம்
26/9/2015 (Sat) - 9.30 am
28/9/2015 (Mon) - 9.30 am

அரசாங்கத்தாலும் சர்வதேசத்தாலும் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம்.
சர்வதேச அங்கீகாரம் பெற்ற நிறுவன (ISO-9001:2008) CERTIFIED சான்றிதழ்கள்
இலகு தவணைக்கட்டண வசதிகள். இங்கிலாந்து, இந்திய பாடநூல்கள்.

அங்கீகரிக்கப்பட்ட முழுமையானதும் தரமானதுமான கல்விக்கு

DMI COMPUTER EDUCATION

| | | | | |
|---|---|---|---|---|
| No.113, யாழ்ப்பாணம் Tel.: 021-222 4403 | M.M.V. வீதி. நெல்லியடி Tel.: 021-226 2470 | No. 174 கண்டி வீதி. HNB வங்கி அருகில் சாவகச்சேரி Tel.: 021-227 0775 | No. 130 K. K. S வீதி. NSB வங்கி அருகில் சுன்னாகம் Tel.: 021-224 1970 | No.111,A9 வீதி, கிளிநொச்சி Tel.: 021-228 5655 |



**பாராட்டி வாழ்த்துகின்றோம்**

9ஆவது மாகாண விளையாட்டு விழாவின் குத்துச்சண்டை தொடரில்,யாழ். மாவட்டத்தின் சார்பாக களமிறங்கி, தங்கப் பதக்கம் வென்ற எமது சங்க அங்கத்தவர், R.ரமேஸ் அவர்களைப் பாராட்டுவதுடன், இவர் தேசிய மட்டத்திலும் பல பதக்கங்கள் வெல்லவாழ்த்துகின்றோம்.



பாதுகாப்பு உத்தியோகத்தர் நலன்புரி கூட்டுறவுச் சங்கம்,பாதுகாப்புத் திணைக்களம் யாழ்ப்பாண பல்கலைக்கழகம்.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# கற்சிலைமடு பெரியகுள வெளிக்கு விவசாயப்பாதை இன்மையால் சிரமம்


முல்லைத்தீவு,செப்.28
கற்சிலைமடு பெரியகுள வெளிக்கு விவசாயப் பாதைகள் இன்மையால் உழவு இயந்திரங்கள் மற்றும் உரம், நெல் என்பவற்றைக் கொண்டு செல்வதில் விவசாயிகள் சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. இந்த விடயத்தை விவசாய அமைச்சின் கவனத்துக்குக் கொண்டு வந்துள்ளதாக விவசாயிகள் தெரிவித்துள்ளனர். பெரியகுள வெளிக்கான விவசாயப் பாதைகள் இருந்த போதிலும் அவற்றில் சில வயல் நிலங்களாகவும் ஏனையவை புனரமைப் பின்றியும் உள்ளன. இதனால் பண்படுத்தலுக்கு உழவு இயந்திரங்கள் கொண்டு செல்லும் போது விவசாயிகள் இடர்களை எதிர்கொள் கின்றனர்.
எனவே இந்த விடயத்தை விவசாய அமைச்சு மீள வும் கவனத்தில் எடுத்து புனரமைப்புப் பணி களை மேற்கொள்ள வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஐ-500)

# தாமதித்த வீதிப்புனரமைப்பு பிரதேச மக்கள் விசனம்

வவுனியா,செப்.28
வவுனியா, லக்சபான வீதி, தோணிக் கல் பிரதேசத்தில் நாகதம்பிரான் கோவில் வீதிப் புனரமைப்புப் பணிகள்தாமதமடைந்துள்ளமை தொடர்பில் அந்தப் பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். வவுனியா தெற்குப் பிரதேச சபையினரால் கடந்த மூன்று மாதங்களாக மேற்கொள்ளப் பட்டு வந்த நடவடிக்கைகள் தற்போது இலங்கை மின்சார சபை யினரின் தாமத நடவடிக்கைகளால் இடைநடுவே கைவிடப் படும் நிலை தோன்றியுள்ளதாக அந்தப்பகுதி பொது மக்கள் தெரிவித்துள்ளனர். பிரதேச சபையினர் புனரமைப்புப் பணிகளை மேற்கொள்ள, வீதிகளி லிருக்கும் மின்சாரக் கம்பங்களை இடம்மாற்றி நட்டுத் தருமாறு வவுனியா தெற்கு தமிழ்ப் பிரதேச சபையினர் இலங்கை மின்சார சபையினரிடம் கடந்த மூன்று மாதத்துக்கு முன்னர் கோரிக்கை விடுத்திருந்தனர்.
அந்த வீதியிலிருந்த தொலைத் தொடர்புக் கம்பங்கள் இடம் மாற்றி நடப்பட்டுள்ளன. எனினும் மின்சார சபையினர் தமது நடவடிக்கையை தாமதப்படுத்துவதாகக் குறித்த வீதியைப் பயன்படுத்தும் சுமார் 30 குடும்பத்தினர் விசனம் தெரிவித்துள்ளனர். (ஐ)

## மரண அறிவித்தல்கள்

### சுப்பிரமணியம் கனகராஜா



ஏழாலை மத்தியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் கனகராஜா (இலங்கை போக்குவரத்துச் சபை முன்னாள் பணியாளர்) 26.09.2015 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - நல்லம்மா தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - சின்னம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும் பரமேஸ்வரியின் அன்புக் கணவரும் றஜனி (சுகி), றாகினி (மாலா), றாகுலன் (ரகு), றாகவன் (வினோ) ஆகி யோரின் பாசமிகு தந்தையும் தில்லை நடராஜன்(ராஜன்), விஜிதா(விஜி) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் சுஜி, றேகன், மிலான், நிஸ்மி, அஸ்மி, கரிசன், ரெறன்ஸ், சொசானா, சபிகா, சாருகா, அனுஸ்கா ஆகியோரின் அன்புப்பேரனும் பிரியா, மீனா ஆகியோரின் பூட்டனும் காலஞ்சென்ற ஜெயரட்ணம் (ராசா) மற்றும் புஸ்பமலர், லீலாவதி, தனபாலசிங்கம், பூபாலசிங்கம், தங்கசிவம், அமிர்தலிங்கம் (மகேந்திரன்) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் காலஞ்சென்ற புஸ்பராணி(ராணி) மற்றும் பராசக்தி, திருக்குமார், மல்லிகாதேவி, காலஞ்சென்ற திருச்செல்வம் மற்றும் ஸ்ரீமாலதி (பபி), ஜெயந்தி (பாபு) காலஞ்சென்ற சாலினி (வசந்தி) மற்றும் தவமணி காலஞ்சென்ற சண்முகநாதன், காலஞ்சென்ற கந்தசாமி மற்றும் சந்திரவதி, இதயகேஸ்வரி, வள்ளிநாயகி, ராசாத்தி ஆகியோரின் அன்பு மைத் துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.09.2015) திங்கட்கிழமை முற்பகல் 11 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக ஏழாலை உசத்தியோடை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப் படும்.

ஏழாலை மத்தி,
ஏழாலை.

தகவல் : ரகு (மகன்)
077 759 9205

(84992)(14, 15)

### திருமதி கனகம்மா சின்னத்துரை



மலர்வு 03.06.1923 உதிர்வு 26.09.2015

கொக்குவில் கிழக்கு, கோவில் வீதியைச் சேர்ந்த சின்னத்துரை கனகம்மா 26.09.2015 சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ் சென்ற இளைப்பாறிய ஆசிரியர் ஆறுப்பிள்ளை சின்னத்துரையின் அன்பு மனைவியும்யோக சௌந்தரி(அவுஸ்தி ரேலியா), தங்கராசா (அவுஸ்தி ரேலியா - முன்னாள் Works Manager, பரந்தன் இரசாயன கூட்டுத்தாபனம்), காலஞ்சென்ற கனகசௌந்தரி மற்றும் தவராஜா (எதிர்க்கட்சி தலைவர் - வடமாகாண சபை) ஆகியோரின் அன்புத்தாயும், காலஞ்சென்ற மகேந்திரன மற்றும் ரீட்டா ஜொய்ஸ் (அவுஸ்திரேலியா), டொக்டர் சிவராசா, ஜீவரஞ்சிதம் ஆகியோரின் அன்பு மாமியாரும், தர்ஷினி-சுரேஷ் (அவுஸ்திரேலியா) பிராமி-சரவணபவன், பிரமேஷ் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் பிரணவன்- ஹரிணி (அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்புப் பூட்டியும் காலஞ்சென்ற கனக சௌந்தரி, காலஞ்சென்ற கனகசபாபதி ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள இன்று (28.09.2015) திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு இல 59, கோவில் வீதி, கொக்குவில் கிழக்கில் உள்ள அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் மாலை 4மணியளவில் கொக்குவில் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் -
**சி.தவராஜா**
(எதிர்க்கட்சி தலைவர் - வட மாகாண சபை)
தொ. இல - 0774 863 893

## மரண அறிவித்தல்கள்

### வல்லிபுரம் ஜெகநாதன் (இராசு)

தோற்றம் 11 . 07 . 1947



மறைவு 26 . 09 . 2015


சுதுமலை தெற்கு, மானிப்பாயைப் பிறப்பிடமாகவும், களவியவத்தை, உடுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட வல்லிபுரம் ஜெகநாதன் 26.09.2015 சனிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (28.09.2015) திங்கட்கிழமை பிற்பகல் 3 மணியளவில் மல்வம் திருக்குடும்ப ஆலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு பூதவுடல் திருக்குடும்ப சேமக்காலைக்கு நல்லடக்கத்துக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

J.இராக்கினி தேவி,
களவியவத்தை, உடுவில்.

தகவல் :
S.ரகு - 0776351801
வெற்றி - 0778207427



பிறப்பு
2 டிசம்பர் 1938

இறப்பு
25 செப்டம்பர் 2015

### விக்டர் இம்மானுவல் ஆசீர்வாதம்

( யாழ்ப்பாணம் Victor & Sons நிறுவனத்தின் முன்னாள் உரிமையாளர்)

நாரந்தனையைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் மற்றும் மெல்பேர்னை வதிவிடமாகவும் கொண்ட விக்டர் இம்மானுவல் ஆசீர்வாதம் 25.09.2015 வெள்ளிக்கிழமை மெல்பேர்ன், ஆஸ்திரேலியாவில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சவரிமுத்து ஆசீர்வாதம்,காலஞ்சென்ற திரேசம்மா - ஆசீர்வாதம் தம்பதியரின் அன்பு மகனும்,காலஞ்சென்ற கேப்ரியேல்பிள்ளை - சபாபதிப்பிள்ளை, காலஞ்சென்ற மரியம்மா - சபாபதிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், ஜூலியானா தயாநிதியின் அன்புக் கணவரும், ஜீன் (சுஜி),ஜெய்மன் (சுரேன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், விஜி, சஜி ஆகியோரின் அன்பு மாமனும், ஹரிணி, திவ்யா, நவீன், ஷ்ருத்தி ஆகியோரின் நேசமிகு தாத்தாவும், மரியதாசன் (இலங்கை), காலஞ்சென்ற திருமதி கிரேஸ்மேரி, குணம் (மெல்பேர்ன்),கிளி (லண்டன், குயீனி (மெல் பேர்ன்),தேவா (லண்டன்),பிள்ளை (லண்டன்), ஜெயரட் ணம் (மெல்பேர்ன்). அன்புமணி (மெல்பேர்ன்)ஆகியோரின் நேசமிகு சகோதரரும், காலஞ்சென்ற திருமதி ஜெயமணி, காலஞ்சென்ற தம்பிரட்ணம், ரெமி, ஜெயம், பாபு,க்ரிஸி, கிறிஸ்டி, சுகுணா, ஆனந்தன், காலஞ்சென்ற செல்வராஜா, ஜெயராஜா,சாந்தி, மனோ ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

**திருப்பலி :**
புதன்கிழமை 30 செப்டெம்பர் 2015
இரவு 7 மணிக்கு
The Chapel at Nazareth House,
16 Cornell St, Camberwell

**இறுதி ஆராதனையும் நல்லடக்கமும்**
வியாழக்கிழமை 1 ஒக்டோபர் 2015
2.30 to 3.30 pm
**Chapel of Reflection**
(next to Customer Service Centre)
Springvale Botanical Cemetery
600 Princes Highway, Springvale

தொடர்புகள்:
Jean Emmanuel +61 (0) 468 011 142 jean.emmanuel@gmail.com
Jaiman Emmanuel +61 (0) 432 571 071 jvemmanuel@gmail.com

(சி.19396) (13.15.16.17)

# லேகியம் விற்பனை சந்தேகநபருக்கு விளக்கமறியல்

பொதிசெய்யப்பட்ட லேகியத்தைக் கடைகளுக்கு விநியோகித்த நபர் ஒருவர் கைது செய்யப்பட்டு கடந்த வாரம் கல்முனை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டார். இதன் போது குறித்த நபரை 14 நாள்கள் விளக்கமறியலில் வைத்து விசாரிக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார். பொலிஸாருக்குக் கிடைக்கப் பெற்ற இரகசியத் தகவலைத் தொடர்ந்து மொனராகலையைச் சேர்ந்த 46 வயதான தெல்கம விதானகே சமந்த என்பவர் கடந்த வாரம் கைது செய்யப்பட்டதுடன் அவரிடமிருந்து போதையூட்டப்பட்ட 24 கிலோகிராம் 300 கிராம் கொண்ட ஆயிரத்து 650 லேகியப் பக்கெற்றுக்களைப் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். அத்துடன் லேகியம் ஏற்றி வந்து விற்பனை செய்வதற் குப் பயன்படுத்திய வாகனத்தையும் கல்முனை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். குறித்த நபர் நீண்டகாலமாக லேகிய விற்பனையில் ஈடுபட்டு வந்துள்ளதாக விசாரணைகளின் மூலம் தெரிய வந்துள்ளதாகத் தெரிவித்த பொலிஸார் குறித்த நபரிடம் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர். (ஐ-10)

# கசிப்பு உற்பத்தி பெண் கைது

கரவெட்டி துன்னாலை தக்குச் சம்பாதிப் பகுதியில் கசிப்பு உற்பத்திக்குப் பயன்படுத்தும் கோடாவைக் கைப்பற்றிய நெல்லியடிப் பொலிஸார் சந்தேகத்தின் பேரில் இளம் குடும்பப் பெண் ஒருவரையும் கைது செய்துள்ளனர். குறித்த பகுதியில் கசிப்பு உற்பத்தியில் ஈடுபடுவதாக நெல்லியடிப் பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்து அந்தப் பகுதிக்கு விரைந்த பொலிஸார் அந்தப் பகுதியைச் சுற்றி வளைத்துத் தேடுதல் மேற்கொண்டனர். அப்போது கசிப்புத் தயாரிப்பதற்காகத் தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்தகோடாவைக் கைப்பற்றிய பொலிஸார் சந்தேகத்தின் பேரில் இளம் குடும்பப் பெண் ஒரு வரையும் கைது செய்துள்ளனர். கைது செய்யப்பட்ட பெண்ணுக்கு எதிராக பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (ஐ-108)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## Samsung S Health
### அப்பிளிக்கேஷனின் புதிய பதிப்பு

S Health என்பது சம்சுங் நிறுவனத்தினால் உடல் ஆரோக்கியத்தை மேம்படுத்துவதற்காக உருவாக் கப்பட்ட அப்பிளிக்கேஷன் ஆகும். தற்போது இந்த அப்பிளிக்கேஷனின் புதிய பதிப்பான S Health 4.5 ஐ அந்த நிறுவனம் அறிமுகம் செய்துள்ளது. இந்தப் பதிப்பில் Dashboard ஆனது நாள் தோறும் இடம்பெறும் செயற்பாடுகள் மற்றும் இலக்குகள் தொடர்பாக விரைவான தரவுகளைத் தரக்கூடியவாறு மேம்படுத்தப்பட்டுள்ளது.

இதனை சம்சுங் அல்லாத ஏனைய அன்ரோயிட் சாத னங்களில் நிறுவகக்கூடிய வகையிலும், சம்சுங் Galaxy S3 மற்றும் அதற்கு பின்னர் அறிமுகமான அனைத்து சம்சுங் சாதனங்களிலும் நிறுவிப் பயன்படுத்தக் கூடியவாறு காணப்படுகின்றது.

மேலும், சில புதிய வசதிகள் உள்ளடங்கலாக வெளி வந்துள்ள இந்தப் புதிய பதிப்பை கூகுள் பிளே தளத்தில் பதிவிறக்கம் செய்துகொள்ள முடியும்.



## பேஸ்புக் தரும் அதிரடி வசதி

முன்னணி சமூகவலைத்தளமாகத் திகழும் பேஸ்புக் ஆனது தற்போது பல்வேறு துறைகளிலும் தனது சேவையைப் பரப்பிவருகின்றது.

இவற்றின் வரிசையில் தற்போது உண்மை போன்ற மாயைக் காட்சிகளைக் கொண்ட தொழில்நுட்பத்தை உருவாக்கிவரும் Oculus VR நிறுவனத்துடன் இணைந்து 360 டிகிரி வீடியோ காட்சிகளை தனது தளத்தில் அறிமுகம் செய்துள்ளது.

இந்தச் சேவையானது கூகுளின் Street View சேவைக்கு ஒப்பானதாகக் காணப்படுகின்றது.

தற்போது டெக்ஸ்டாப் கணினிகளில் உள்ள இணைய உலாவிகளில் பயன்படுத்தக்கூடியதாக இருக்கும் இந்த வசதியானது விரைவில் iOS மற்றும் அன்ரோயிட் சாதனங்களிலும் அறிமுகம் செய்யப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நவீன வடிவமைப்புடன் LG Class



LG நிறுவனமானது LG Class எனும் சாதாரண ஸ்மார்ட் கைப்பேசிகளுக்குரிய அனைத்து வசதிகளும் உள்ளடக்கப்பட்ட புதிய ஸ்மார்ட் கைப்பேசியை அறிமுகம் செய்கின்றது.

இந்தச் சாதனம் முதன் முறையாக Unboxing செய்யப்படும் வீடியோ தற்போது வெளியிடப்பட்டுள்ளது. 5 அங்குல அளவு, 1280 x 720 Pixel Resolution உடைய தொடுதிரையைக் கொண்ட இந்தக் கைப்பேசியானது 1.2GHz வேகத்தில் செயற்படக்கூடிய Quad Core Qualcomm Snapdragon 810 Processor, பிரதான நினைவகமாக 2GB RAM, 16GB சேமிப்பு நினைவகம் என்பவற்றைக் கொண்டுள்ளது.

இவை தவிர 13 மெகாபிக்சல்களை உடைய பிரதான கமரா, 8 மெகாபிக்சல்களை உடைய வீடியோ அழைப்புக்களை ஏற்படுத்துவதற்கான கமரா, 2050 mAh மின்கலம் என்பனவற்றையும் கொண்டுள்ளது.

# யாழில் சிறப்பாக நடைபெற்ற மூவின மக்களின் நடைபவனி

## யாழ்.திருமறைக் கலாமன்றத்தின் பொன்விழாவை முன்னிட்டு ஏற்பாடு















யாழ்.திருமறைக் கலாமன்றத்தின் ஐம்பதாவது வருடத்தின் பொன் விழா நிறைவை முன்னிட்டு மூவின மக்களின் பங்கேற்றலுடன் விசேட நடைபவனி நேற்றுமுன்தினம் சனிக்கிழமை யாழில் சிறப்பாக நடைபெற்றது. அலங்காரக் கலை ஊர்திகள் சகிதம் நடை பெற்ற இந்த நடை பவனியில் மூவின மக்களும் கலந்து கொண்டனர். குறிப்பாக தென்னிலங்கையில் இருந்து நிகழ்வுக்காக வருகை தந்திருந்த தென்னிலங்கையைச் சார்ந்தவர்கள் கலாசார பாரம்பரியங்களை வெளிப்படுத்தும் இந்த விசேட நடை பவனியில் பங்குபற்றியிருந்தனர். மயிலாட்டம், ஒயிலாட்டம், காவடியாட்டம், குதிரையாட்டம், கோலாட்டம் உட்பட சிறுவர்களின் கலை நிகழ்வுகளும் நடை பவனயில் இடம் பெற்றன. யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் இருந்து ஆரம்பமான இந்த நடை பவனி காங்கேசன்துறை வீதி வழியாக ஆஸ்பத்திரி வீதிக்குச் சென்று, அங்கிருந்து கண்டி வீதி ஊடாக திருமறைக் கலாமன்றத்தைச் சென்றடைந்தது.

(ஐ-86-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பிரிமோஸ் ரவ்னிக் எனும் சைக்கிள் சாகச வீரர் ,செங்குத்தான சரிவில் சைக்கிள் ஓட்டி சாதனை படைத்துள்ளார்.கடந்த மாதம் 197 அடி உயரத்தில் இருந்து சைக்கிளை செலுத்தி மயிர் கூச்செரியும் சாகசத்தைச் செய்துள்ளார். இவரது காணொளி மிக குறுகிய நாள்களில் 4.4 மில்லியனுக்கும் மேற்பட்ட மக்களால் பார்வையிடப்பட்டது. (த–ரி4)

# அமெரிக்கா விதித்த தடையை நீக்க கியூபா ஐ.நாவில் முயற்சி

ஜெனிவா, செப்.28

அமெரிக்கா கியூபாவுக்கு விதித்துள்ள வர்த்தக தடையை அந்த நாட்டு ஜனாதிபதி ராவுல் கஸ்ரோ கடுமையாக விமர்சித்துள்ளார்.

அமெரிக்காவுடனான கியூபாவின் நட்புறவு சுமார் 54 வருடங்களின் பின்னர் புதுப்பிக்கப்பட்டமை குறித்து அவர் மகிழ்ச்சி வெளியிட்ட அவர், ஆயினும் தமது நாட்டின் மீது அமெரிக்கா விதித்துள்ள தடையானது, கியூப பொருளாதார அபிவிருத்திக்கு பெரும் தடையாக அமைந்துள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகளின் பொதுச்சபையில் உரையாற்றும் போதே ராவுல் கஸ்ரோ இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அமெரிக்கா விதித்த வர்த்தக தடை காரணமாக தமது நாட்டின் பொருளாதாரத்துக்கு 121 பில்லியன் அமெரிக்க டொலர் நட்டம் ஏற்பட்டுள்ளது என்று அவர் சுட்டிக் காட்டினார்.

அதேவேளை, குறித்த தடையை நீக்க வேண்டும் என்று வலியுறுத்தி ஐ.நா. பொதுச்சபையில் தீர்மானமொன்றை நிறைவேற்றும் முயற்சிகளில் கியூபா ஈடுபட்டுள்ளது.

இந்தத் தீர்மானத்துக்கான வாக்கெடுப்பில் ஐ.நாவின் 188 உறுப்பு நாடுகள் கலந்து கொள்ளும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்தத் தீர்மானம் மீதான வாக்கெடுப்பின் போது பிரசன்னம் ஆகாமல் இருப்பதற்கு அமெரிக்கா தீர்மானித்துள்ளது என்று இராஜதந்திரிகள் குறிப்பிட்டுள்ளனர்.

1960 ஆம் ஆண்டு ஐ.நாவின் பொதுச் சபையில் கியூபாவின் முன்னாள் ஜனாதிபதி பிடல் கஸ்ரோ நான்கு மணித்தியாலங்கள் 30 நிமிடம் கொண்ட நீண்ட உரையை நிகழ்த்தினார். ஆனால் ராவுல் கஸ்ரோ ஐ.நா. பொதுச்சபையின் 70 ஆவது கூட்டத்தொடரில் வெறும் 6 நிமிடங்கள் மாத்திரமே உரையாற்றியிருந்தார். (ற)

## ஏமனில் கடும் சண்டை

### உதவிகள் இன்றி மக்கள் திண்டாட்டம்



சனா, செப்.28

ஏமனில் ஷியா பிரிவு ஹவுதி கிளர்ச்சியாளர்களைக் குறி வைத்து சவூதி கூட்டுப்படைகள், அந்த நாட்டின் 3ஆவது பெரிய நகரான டாய்ஸ் நகரில் நேற்று முன்தினம் வான்தாக்குதல்கள் நடத்தி உள்ளன.

இந்தத் தாக்குதலில் 3 குழந்தைகள் சிக்கி உயிரிழந்தனர். அதேவேளை அந்த நகருக்கு வெளியே அரச படைகளுக்கும், ஹவுதி கிளர்ச்சியாளர்களுக்கும் இடையே தரை வழி சண்டையும் உக்கிர மடைந்துள்ளது. அதில் 10 பேர் உயிரிழந்தனர். ஹோடெய்டா துறைமுகத்தில் இருந்து டாய்ஸ் நகருக்கு அவசர கால மருந்துப்பொருள்கள் மற்றும் உணவுப்பொருள்களை ஏற்றிச் சென்ற வாகனங்களை வழிமறித்து ஹவுதி கிளர்ச்சியாளர்கள் தாக்குதல் நடத்தியுள்ளனர். அதனால் டாய்ஸ் நகருக்கு எந்த நிவாரண பொருள்களையும் அனுப்பி வைக்க முடியாத சூழல் நிலவி விருவதாக ஜெனிவா மருத்துவக் குழுவைச் சேர்ந்த ஹசன் பவுசினைன் தெரிவித்தார்.

மனித உரிமை ஆர்வலர் அப்துல் பாசிட் அல் சாமேய் கருத்து கூறும்போது, டாய்ஸ் மக்களுக்கு இப்போது மருந்தும் கிடையாது. உணவும் கிடைப்பது இல்லை எனக் குறிப்பிட்டார். (ற–ரி4)

## கொலையுண்டார் எனக் கூறப்பட்டவர் 31 ஆண்டுகளின் பின்னர் உயிருடன்

பேர்லின், செப்.28

கொலை செய்யப்பட்டதாகக் கருதிய பெண்மணி 31 ஆண்டுகளுக்கு பின்னர் மீண்டும் உயிருடன் மீட்கப்பட்டுள்ள சம்பவம் வியப்பை ஏற்படுத்தியுள்ளது.

ஜேர்மனியின் பிரவுன்ச்விக் பகுதியைச் சேர்ந்த பெற்றா பஸுக்கா என்பவர் தமது 24 ஆம் வயதில் திடீரென மாயமானார். இந்த நிலையில் கடந்த 2 வாரங்களுக்கு முன்னர் ஒரு நாள், டசல் டொர்ப் பகுதியில் இருந்து திருடர்கள் வீட்டைச் சூறையாடியதாகக் கூறி, ஸ்னிடர் என்பவரிடம் இருந்து பொலிஸாருக்கு அழைப்பு வந்துள்ளது. சம்பவம் நடந்த பகுதிக்கு விரைந்த பொலிஸார் சந்தேகத்தின் பேரில் அவரிடம் விசாரணை மேற்கொண்டதில், அவர்தான் பெற்றா எனவும், பல பெயர்களில் பல நகரங்களில் தாம் வாழ்ந்து வந்ததாகவும் தெரிவித்துள்ளார்.

பெற்றா கொலை செய்யப்பட்டதாக பொலிஸ் அதிகாரிகளே பிரகடனம் செய்திருந்த நிலையில், அவர் குறித்த உண்மைத் தகவல்களைப் பொலிஸாரிடமும் வெளிப்படுத்த மறுப்புத் தெரிவித்துள்ளார். (த–ரி4)

## மக்காவின் ஹஜ் உயிரிழப்புக்கு யாத்திரிகர்கள் மீது குற்றச்சாட்டு

மக்கா, செப். 28

சவூதி அரேபியாவில் உள்ள புனித மக்கா நகருக்கு ஹஜ் பயணம் சென்ற 717 பேர் மினா நகரில் கூட்ட நெரிசலில் சிக்கி உயிரிழந்தனர் .

இந்தத் துயரச் சம்பவத்துக்கு சவூதி அரேபியா அரசின் பாதுகாப்புக் குளறுபடியே காரணம் என க் குற்றம்சாட்டப்பட்டது. ஆனால் அதைச் சவூதிஅரேபிய அரசு மறுத்துள்ளது.யாத்திரிகர்கள் கூட்டத்தின்போது கடைபிடிக்கவேண்டிய நெறிமுறைகளைப்பின்பற்றவில்லை. அதனால்தான் கூட்ட நெரிசல் ஏற்பட்டு கடந்த 25 ஆண்டுகளில் இல்லாத அளவுக்குப் பெரும் விபத்து ஏற்பட்டது எனத் தெரிவித்துள்ளது.

இது குறித்து சவூதி அரேபியாவின் சுகாதாரத் துறை அமைச்சர் காலித் அல்பாலிக் தனது அமைச்சக இணையத்தளத்தில் அறிக்கை வெளியிட்டுள்ளார்.

அதில் கூறியிருப்பதாவது:–

இச்சம்பவம் குறித்து தீவிர விசாரணை நடத்தி உயிரிழந்தவர்கள் மற்றும் காயம் அடைந்தவர்களின் விவரம் அறியப்பட்டுள்ளது. மொத்தம் 863 பேர் காயம் அடைந்துள்ளனர். மினாவில் கூட்ட நெரிசல் ஏற்படுவதற்குச் சில யாத்திரிகர்கள் அதிகாரிகள் கூறிய வழிமுறைகளை பின்பற்றாததே காரணமாகி விட்டது.




[illegible] பட்டுவிட்டது. காயம் அடைந்தவர்கள் மக்கா உள்ளிட்ட பல பகுதிகளில் உள்ள வைத்தியசாலைகளில் அனு மதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

சவூதி மன்னர் சல்மான் இது குறித்து விசாரணைக்கு உத்தரவிட்டிருந்தார். விசாரணையில் ஜமாத் புனித தலத்தில் சாத்தான் மீது கல் எறியும் இடத்துக்குச் சென்ற 2 பெரிய யாத்திரிகர்கள் குழுக்கள் மக்காவில் இருந்து சில கிலோ மீற்றர் தொலைவில் குறுக்கு வீதிகளில் மோதிக் கொண்டனர். இதனால் நெரிசல் ஏற்பட்டு விபத்து நேரிட்டது எனத் தெரிய வந்துள்ளது.

இதற்கிடையே சவூதி அரேபியாவில் நடந்த இந்தச் சம்பவத்துக்கு ஈரான் கடும் கண்டனம் தெரிவித்துள்ளது. இங்கு ஏற்பட்ட நெரிசலில் சிக்கி ஈரானைச் சேர்ந்த 131 பேர் உயிரிழந்துள்ளனர். சவூதி அரேபியாவின் நிர்வாக திறமையின்மையே இந்தச் சம்பவத்துக்குக் காரணம் என ஈரான் குற்றம் சுமத்தியுள்ளது. ஈரான், சவூதி அரேபியாவின் எதிரி நாடு ஆகும். நேற்று மதியம் தொழுகை முடிந்ததும் ஈரான் தலைநகர் தெஹ்ரானில் கண்டனப் போராட்டம் நடந்தது. ஐ.நா. சபைக் கூட்டத்தில் பங்கேற்க நியூ யோர்க் சென்றுள்ள ஈரான் அதிபர் ஹாசன் ரக்கானி மற்றும் அந்நாட்டின் சுப்ரீம் தலைவர் அயா துல்லா அலி காமெனி ஆகியோரும் கண்டனம் தெரிவித்துள்ளனர். (த–ரி4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அமெரிக்கரான டேவிட் அவ்நேர் பிளாஸ்டிக் சிகிச்சை மூலம் தன் முகத்தை புலி போன்று மாற்றியுள்ளார்.
அதற்காக அவர் 200,000 அமெரிக்க டொலர் செலவு செய்துள்ளார் (இலங்கை மதிப்புக்கு 2 கோடியே 60 லட்சத்துக்கும் மேல்). தன்னை புலியாக வடிவமைக்க பற்கள், உதடுகள், காதுகள், முக அமைப்பு போன்றவற்றைச் சத்திர சிகிச்சை மூலம் மாற்றி அமைத்துள்ளார். புலிகளின் வரியை போன்று முகத்தில் பச்சை குத்தியுள்ளார். இவரை புலி / பூனை மனிதன் என்று அழைக்கின்றனர்.
(ற-ரி4)

# பாப்பாண்டவர் பிரான்ஸிஸ் பிலடெல்பியாவுக்கு பயணம்

அமெரிக்க சுற்றுப் பயணத்தின் ஒரு கட்டமாக பாப்பாண்டவர் பிரான்சிஸ் பிலடெல்பியாவுக்கு சென்றுள்ளார். விசேட விமானம் மூலம் பிலடெல்பியாவை சென்றடைந்த பாப்பாண்டவர் பிரான்சிஸை பிலடெல்பியாவின் புனிதர்கள் மற்றும் அதிகாரிகள் வரவேற்றனர். போப் பிரான்சிஸிஸுக்கு சிறுவர்கள் மலர்ச் செண்டுகள் வழங்கி வரவேற்றனர். அதனைப் பெற்றுக் கொண்ட பாப்பாண்டவர் அவர்களை ஆசீர்வதித்தார்.



பின்னர் பார்வையாளர்கள் மத்தியில் சக்கர நாற்காலியில் ஒரு சிறுவன் இருப்பதைப் பார்த்த பாப்பாண்டவர் வழக்கமாக தான் செல்லும் கண்ணாடியால் சூழப் பட்ட சக்கர வாகனத்தை நிறுத்தச் சொன்னார். செரிபரல் பால்சி என்ற அரிய வகை முடக்க நோயால் பாதிக்கப்பட்டிருந்த 10 வயதான மைக்கேல் கீட்டிங் என்ற அந்த சிறுவனுக்காக பிரார்த்தனை செய்த பாப்பாண்டவர் அவனை ஆசீர்வதித்துவிட்டு நெற்றியில் முத்தமிட்டார். பாப்பாண்டவர் பிரான்சிஸின் வருகையை முன்னிட்டு பிலடெல்பியாவின் கத்தோலிக்க தேவாலயத்தில் புனிதர்களான பீற்றர் மற்றும் பாப்பாண்டவர் ஆகியோர் தலைமையில் நேற்றுக் காலை இடம் பெற்ற ஆராதனை நிகழ்வில் சுமார் 1.2 மில்லியன் கத்தோலிக்க மக்கள் கலந்து கொண்டனர். (ற)

# ஐ.எஸ். தீவிரவாத அமைப்பில் 30 ஆயிரம் வெளிநாட்டவர்

## அமெரிக்க உளவுத்துறை தகவல்

வொஷிங்டன், செப்.28
ஐ.எஸ். தீவிரவாத இயக்கத்தில் மூன்று வெளிநாடுகளைச் சேர்ந்த 30ஆயிரம்பேர் இணைந்து போரிட்டு வருகின்றனர் என அமெரிக்க உளவுத்துறை தெரிவித்துள்ளது.
இந்தத் தகவலை அமெரிக்காவில் வெளியாகும் நியூயோர்க் டைம்ஸ் பத்திரிகை வெளியிட்டுள்ளது.
மிகக் குறுகிய காலத்தில் அதிக அங்கத்தவர்களைக் கொண்டதாக பெரியளவில் உருவெடுத்து சிரியா மற்றும் ஈராக்கில் ஆதிக்கம் செலுத்தி வரும் ஐ.எஸ் தீவிரவாத இயக்கத்தில் உள்ள அங்கத்தவர்கள் தொடர்பாக நடத்திய ஆய்வொன்றிலேயே குறித்த விடயம் கண்டறியப்பட்டுள்ளது என்று அமெரிக்க உளவுத்துறை மேலும் குறிப்பிட்டுள்ளது.
சிரியா மற்றும் ஈராக்கில் நிலை கொண்டுள்ள ஐ.எஸ். தீவிரவாதிகள் இந்த இரு நாடுகளிலும் பெரும்பாலான பகுதிகளை கைப்பற்றி தனி நாடு அமைத்துள்ளனர். இந்த தீவிரவாத இயக்கத்தில் மேற்கத்தைய நாடுகள் உள்பட பல வெளிநாடுகளைச் சேர்ந்த இளைஞர்கள் இணைந்து வருகின்றனர்.
அதில் 3 வெளிநாடுகளைச்சேர்ந்த 30 ஆயிரம் பேர் இணைந்து போரிட்டு வருகின்றனர். அவர்கள் ஈராக் மற்றும் சிரியாவில் நிலைகொண்டுள்ள ஐ.எஸ். தீவிரவாதிகளின் முகாம்களில் தங்கியுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. இவர்கள் 2011ஆம் ஆண்டில் இருந்து ஐ.எஸ். தீவிரவாத இயக்கத்தில் சேர்ந்து போரிட்டு வருகின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
இந்த தகவல் அமெரிக்காவில் இருந்து வெளியாகும் நியூயார்க் டைம்ஸ் பத்திரிகையில் வெளியாகியுள்ளது. தற்போது அரேபிய நாடுகள் மற்றும் மேற்கத்தைய நாடுகளின் உதவியுடன் சிரியா மற்றும் ஈராக்கில் ஐ.எஸ். தீவிரவாதிகள் மீது அமெரிக்கா குண்டு வீச்சு நடத்துகின்றது.
சிரியா மற்றும் ஈராக்கில் பல அட்டூழியங்களை அரங்கேற்றும் ஐ.எஸ். தீவிரவாதக் குழுவில் பலர் தொடர்ந்தும் இணைந்து வருகின்றனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ற)

# சவூதி உயிரிழப்புகள் 769 ஆக உயர்ந்தது

மினா, செப்.28
சவூதி அரேபியாவின் மினா நகரில் ஏற்பட்ட நெரிசலில் சிக்கி உயிரிழந்தோரின் எண்ணிக்கை 769 ஆக உயர்ந்துள்ளது என்று சவூதி அரேபியாவின் சுகாதாரத் துறை அமைச்சர் காலித் அல் பாலிஹ் தெரிவித்தார்.
மினா நகரில் சாத்தான் மீது கல்லெறியும் இடத்துக்குச் சென்ற 2 பெரிய யாத்திரிகர்கள் குழுக்கள் இடையில் ஏற்பட்ட கூட்ட நெரிசல்காரணமாக குறித்த உயிரிழப்புக்கள் ஏற்பட்டுள்ளன என்று சவுதி அரேபியா விளக்கம் அளித்துள்ளது.
இதை மறுத்துள்ள ஈராக், சவூதி அரேபியாவின் நிர்வாகத் திறமையின்மையே இந்தச் சம்பவத்துக்குக் காரணம் என குற்றம் சுமத்தியுள்ளது. கூட்ட நெரிசல் சம்பவத்தில் ஈரானைச் சேர்ந்த 136 பேர் உயிரிழந்துள்ளதோடு, 102 பேர் காயம் அடைந்திருந்தனர்.
இவர்கள் தவிர ஹஜ் புனித யாத்திரைக்குச் சென்ற 344 ஈரானியர்கள் காணாமல் போயுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. லெபனானின் முன்னாள் தூதர் கசான்பர் ரோக்னாபடியும் காணாமல் போயுள்ளார் என்று கூறப்படுகின்றது.
ஆயினும் இவர்கள் குறித்து சவுதி அரேபிய அரசு எவ்வித தகவல்களையும் வெளியிடவில்லை என ஈரானின் துணை வெளியுறவு அமைச்சர் ஹுசேன் அப்துல்லாகின் குறிப்பிட்டுள்ளார்.
இதற்கிடையே ஈரான் அரசு வழக்கறிஞர் ஜெனரல் இப்ராகிம் ரைசி, சவூதி அரேபியா ஹஜ் பயணிகளுக்கு எதிராக குற்றம் இழைத்துள்ளது. எனவே,



அந்நாட்டின் மீது சர்வதேச நீதிமன்றில் வழக்குத் தொடருவோம். இது கவனக் குறைவாக நடந்தது அல்ல. இது ஒரு பெரும் குற்றம் என்று தெரிவித்துள்ளார்.
இது குறித்து கருத்துத் தெரிவித்த, சவூதிஅரேபியாவின் வெளியுறவு அமைச்சர் அதெல் அல்ஜுபெயர் கூறும் போது, மதக் கடமையாற்ற வந்தவர்களுக்கு நேர்ந்த சோக சம்பவத்தை வைத்து ஈரான் அரசியல் நடத்த முயற்சிக்கிறது என்று குறிப்பிட்டார்.
இந்நிலையில் குறித்த சம்பவம் தொடர்பாக விரிவாக விசாரணை நடத்தி தமக்கு விரைவில் அறிக்கையொன்றை சமர்ப்பிக்குமாறு, சவூதி [illegible] னர் சல்மன் அந்தநா[illegible] அமைச்சுக்குப் பணிப்புரை விடுத்துள்ளார். (ற)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நவீன சந்தையும் தாம்பூலச் செந்நீர் அலங்காரமும்

மு.தர்மலிங்கம், ஜே.பி.

யாழ். மாவட்டத்தின் வடமுனையில் அமைந்துள்ள பருத்தி மாநகர் வரலாற்றுச் சிறப்பு மிக்க துறைமுகப் பட்டினமாகும். இந்த நகரம் துறைமுகத்தின் அருகில் அமைந்துள்ளதாலும் இந்தப் பகுதியில் உள்ள துறைமுகத்தின் ஊடாக பருத்தி ஏற்றுமதி செய்யப்பட்டமையாலும் பருத்தித்துறை என்ற காரணப் பெயர் ஏற்பட்டதாக நம்பப்படுகிறது.

கடல் வாணிபம் சிறப்புற்றிருந்த பண்டைக்காலம் தொட்டே பருத்தித்துறை முதன்மை நகரமாக விளங்கியது. இலங்கையைப் போர்த்துக்கேயர் ஆண்ட காலப்பகுதியிலும் பருத்தித்துறை பற்றிய வரலாற்றுக் குறிப்புக்கள் பதியப்பட்டுள்ளன. காலப் போக்கில் பல்வேறு காரணிகளால் துறைமுகத்தின் முக்கியத்துவம் குறைந்து கொண்டு சென்றதையும் அவதானிக்கலாம். இருந்தும் விடுதலைப் புலிகளுடனான கடும் சமரின்போது தரைவழிப் பாதைகள் மூடப்பட்டமையால் துறைமுகம் மீண்டும் தலையெடுத்தது. யாழ். குடாநாட்டுக்குத் தேவையான அத்தியாவசியப் பொருள்கள் அனைத்தும் பருத்தித்துறைத் துறைமுகத்தினூடாகவே கொண்டு வரப்பட்டன.

பண்டுதொட்டே பருத்தி நகரின் உற்பத்திகளான தட்டைவடையும் தோசையும் தனிச் சிறப்புடையதாய் விளங்குகின்றன. நவாலியூர் சோமசுந்தரப்புலவரும் பருத்தித்துறை ஊராம் பவளக்கொடி பேராம் எனப் பாடத் தொடங்கிப் பருத்தித் துறையைப் பாடு பொருளாக்கியுள்ளார்.

பன்னெடுங்காலமாகப் பொதுச் சந்தை இருந்த இடத்திலேயே தற்போதைய நவீன சந்தையும் அமைந்துள்ளது. போர் நடவடிக்கைகளால் சிதைந்து போன பழைய சந்தைக்குப் பதிலாகக் கட்டி எழுப்பப்பட்ட மேல் மாடியுடன் கூடிய சந்தையானது நகரின் நடுவே தலைநிமிர்ந்து தனி அழகுடன் காட்சி தருகின்றது. பல்வேறு கடைத்தொகுதிகள் அடங்கிய சந்தையின் மேல்மாடியில் மரக்கறிச் சந்தை அமைந்துள்ளது. மரக்கறி வியாபாரிகள் மேலேபோக மறுத்துக் கீழ்த் தளத்தின் நடைபாதைகளில் பொருள்களை வைத்துச் சில மாதங்களாக வியாபாரம் செய்தனர். இட நெருக்கடியால் மலசலகூடங்களைச் சுற்றியும் காய்கறிகளைப் பரப்பித் தாங்களும் நோய்க்காளாகி மரக்கறிகளுக்கும் அதன்மூலமாக வாடிக்கையாளர்களுக்கும் நோய் கொடுத்து உதவினார்கள். நோய் தீர்ப்பதற்கு நகர சபையினர் நீதிமன்றில் வழக்காட வேண்டியேற்பட்டது. நீதிமன்றின் கடும் உத்தரவினால் வேறு வழியின்றி வியாபாரிகள் மேல்மாடியில் மரக்கறி வியாபாரத்துக்கென நன்கு வடிவமைக்கப்பட்ட துர்நாற்றமற்ற வசதியான இடங்களில் சிறப்பாக வியாபாரத்தை மேற்கொள்ளுகின்றனர்.

மரக்கறி வாங்கும் வாடிக்கையாளருக்கு தற்போது வேறு ஒரு தலையிடியும் தோன்றியுள்ளது. வாடிக்கையாளர்களுக்கு முக்கியமாக முதியோர்களுக்கு மாடிப்படி ஏறி இறங்குவது சிரமமானதே. இருந்தாலும் ஏறி இறங்கும் பயிற்சி யாவருக்கும் நன்மையானதே ஆகும்.

ஆனால், மாடிக்கு ஏறும் படிகளும் படிகளைச் சூழ உள்ள சுவர்களும் தாம்பூலச் செந்நீரால் தினமும் நன்றாகக் குளிப்பாட்டப்படுகின்றன. எச்சில் அழுக்குகள் தினம் தினம் பெருகிச் செல்கின்றன. அவைகள் தினந்தோறும் அல்லாது மாதக்கணக்காகவே சுத்தம் செய்யப்படுவதில்லை. இதனால் ஏறி இறங்கும் வாடிக்கையாளர்கள் முக்கியமாக முதியோர்கள் மிகுந்த அசௌகரியங்களை அனுபவிக்கின்றனர். ஆனால், ஆடாது அசையாது தாம்பூலச் செல்வத்தை மிதிக்காது சுவரிலே மறந்தும் முட்டாது ஏறி இறங்கித் தப்பி வரவேண்டியுள்ளது.

பருத்தித்துறை நகரசபையே சந்தையை நிர்வகிக்கின்றது. வியாபாரிகளிடம் பணத்தை அறவிடுவதில் மட்டும் அக்கறை காட்டாது சந்தையைச் சுத்தமாகப் பராமரிப்பதிலும் நகர சபையானது அக்கறை காட்ட வேண்டும். தாம்பூலம் உமிழ்வோரைக் கண்டுபிடித்து கைது செய்து நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த வேண்டும். அத்தகைய நடவடிக்கை மூலமே இத்தகைய சீரழிவுகளை ஓரளவுக்கேனும் சீர்திருத்த இயலும். நகரசபையினர் இதனைச் செய்வார்களா?

இந்த நவீன சந்தைக் கட்டடத் தொகுதியே பருத்தித்துறை மாநகரை அழகு படுத்துகின்றது. இதுவே நகரின் மையப்புள்ளியாகும். நாற்புறமும் பிரதான வீதிகள் சூழ நடு நாயகமாகச் சந்தை இயங்குகின்றது.

இது எங்களுடைய சந்தை. இதனைச் சுத்தமாகப் பேணிப் பாது காப்போம் என்ற விழிப்புணர்வு எமக்குள் ஏற்பட வேண்டும்.

நகரசபையினரே! சுகாதாரப் பகுதியினரே! நாற்றமெடுக்கும் நவீன சந்தையின் மாடிப்படிகளில் தயவு கூர்ந்து ஏறிப் பாருங்கள். விரைந்து நடவடிக்கை எடுங்கள். பருத்தி மாதாவைப் பேணுங்கள்.

## எப்பவோ முடிந்த காரியம்

இந்த அகிலம் முழுவதும் எம் ஈழத்துச் சித்தர் பரம்பரைகளின் அரிய வாசகங்களுக்குள் அடங்கி இருக்கின்றது என்பதே மிகத் தெளிவான உண்மையாகும். தற்போதைய உலகத்தின் போக்கு ஆன்மிக உண்மைகளைப் பெரும்பாலும் வெளிச்சம் போட்டுக்காட்டத் தயங்குவதில்லை. அதனடிப்படையில் அந்த அரிய வாசகங்களில் ஒன்றை இந்த உலகம் அடிக்கடி புத்திஜீவிகளுக்கு நினைவூட்டுகின்றது. அதுதான் எப்பவோ முடிந்த காரியம் எனும் அரிய இறை வாசகம் ஆகும்.

ஈழத்தின் சித்தர் பரம்பரைகளென எனப் போற்றப்படும் கடையிற்சுவாமிகள் வழியாக வந்த இந்த அரிய வாசகம் நல்லூர் தேரடிச் சித்தர் செல்லப்பா சுவாமிக்ள், அவர் சீடர் யோகர்சுவாமிகள் வழியாக உலகுக்கும் எம்தேசத்து மக்களுக்கும், இறையன்பர்களுக்கும் அந்த மகான்களின் காலத்திலே உணர்த்திக் காட்டப்பட்டது.

ஒருமுறை தேரடிச் சித்தர் செல்லப்பா சுவாமிகள் தன் ஞானக் குருநாதரான கடையிற்சுவாமிகளுக்கு ஏதாவது ஒரு காணிக்கை செலுத்த விரும்பி ஒரு மதுபானப் போத்தலை வாங்கி மறைவிடம் ஒன்றில் மறைத்து வைத்து கடையிற்சுவாமிகளின் தரிசனத்தை எதிர்பார்த்துக் காத்துநின்றார். அவரைக் கண்டதும் செல்லப்பா சுவாமிகள் மது பானப் போத்தலை எடுக்க ஆர்வத்தோடு சென்றார். அந்தப் போத்தல் மதுபான மற்று வெறுமையாக 'இருப்பதைக்கண்டு கவலையுற்று நிற்கும் போது 'அது எப்பவோ முடிந்து விட்டது' என கடையிற் சுவாமிகளின் குரல் ஓங்கி ஒலித்தது. அதைக் கேட்டு செல்லப்பா சுவாமிகள் ஞானத்தெளிவடைந்தார். தமது காணிக்கையைக் குருநாதர் ஏற்றுக் கொண்டு விட்டார் என அகமகிழ்வடைந்தார்.

அந்த மதுபானப்போத்தல் எப்பவோ முடிந்த காரியம் அதை நினைத்துக் கொண்டிருப்பதில் எந்தவித பயனும் இல்லை. அது இருந்தால் என்ன? இல்லா விட்டால் என்ன செல்லப்பா சுவாமிகள் உணர்ந்தது போலவே நாமும் உலகத்தையும் வாழ்க்கையையும் உணர்ந்து கொள்ள வேண்டும்.

சூரியன் உதிப்பதும் சந்திரன் ஒளிர்வதும் காற்று அடிப்பதும் எப்பவோ முடிந்த காரியமாகையால் நாம் அதைக் கண்டு சந்தோசப்படவோ துக்கப்படவோ தேவையில்லை. என்றோ ஒருநாள் இறைவனால் முடித்து வைக்கப்பட்டவையே, இன்று இந்த உலகில் எமக்கு வெறும் நிழலாகத் தெரிகின்றன. கீதையும் இதைத்தான் சொல்கிறது. இந்த உலகம் மன எண்ணங்களால் பார்க்கப்படும் வெறும் கற்பனை யென்று. நடந்த, நடந்து கொண்டிருக்கின்ற, இனி நடக்கப் போகின்ற அனைத்துக் காரியங்களும் இறை செயலே. எப்பவோ முடிந்த காரியத்துக்குள் எமக்கும் நன்மை நடந்திருக்கும் என்ற நம்பிக்கையோடு, எமது வாழ்க்கை வண்டியின் அச்சாணி முறியாமல் மெதுமெதுவாய் பயணித்து எமது இலக்கை அடைவோமாக.

எப்பவோ முடிந்த முடிவுதான்
உன் முடிவு
ஆனால் நீ முடியாமல்
ஒருபோதும் இருந்து விடாதே

*சாம்.ரமேஸ்குமார்*

# சன்ஷைன் ஹெல்த்கெயர் ஊழியர்களுக்கு சக்தியளித்த வெளியிணைப்புப் பயிற்சிகள்


சன்ஷைன் குழுமத்தின் அங்கத்துவ நிறுவனமான சன்ஷைன் ஹெல்த் கெயர் லங்கா நிறுவனம் வெற்றி நோக்கிய ஆர்வத்துடன் அதன் குழுவினரைக் கட்டியெழுப்புவதில் தொடர்ச்சியாக முதலீடு செய்து வருகிறது. சுகாதார பராமரிப்புத் துறையில் தேசத்தின் முன்னணித் தீர்வுகள் வழங்குநராக SHL திகழ்கிறது.

'மனித வள கற்றல் பரப்பில் மிகப் பெரிய பகுதியான அனுபவ ரீதியான கற்றல் அனுபவத்தை வழங்கும் வகையில் அண்மையில் மரபு சாரா பயிற்சி திட்டங்கள் தொடரை நாம் அறிமுகம் செய்திருந்தோம்' என மனித வளங்கள் துறையின் குழும தலைவர் மிஷேல் சேனாநாயக்க தெரிவித்தார். 'மேலும் ஊழியர்கள் தமது சவால்களை எதிர்கொள்வதற்கான ஊக்கு விப்பை வழங்கிடும் வகையில் தனிநபர்களின் பங்களிப்பை அடையாளப் படுத்தும் வகையிலான நிகழ்ச்சிகளையும் முன்னெடுத் திருந்தோம்' என மேலும் அவர் தெரிவித்தார்.

இந்த நிறுவனத்தின் செயற்திறன் அளவுகோல்களில் ஒன்றாகத் திறமை தக்கவைப்பு அமைந்துள்ளதுடன், இந்த முறை ஊடாக அதன் இளம் மற்றும் சக்திவாய்ந்த தொழிற்படையினரை சன்ஷைன் ஹெல்த் கெயர் ஈடுபடுத்தி வருகிறது. ஊழியர் ஆய்வானது எமது ஊழியர்களின் தேவைகளை புரிந்து கொள்ளவும், நிறுவனத்துடன் ஊழியர் களின் நிகழ்ச்சி நிரலை வரிசைப்படுத்துவதற்கும் எமக்கு உதவியுள்ளது.

கடந்த சில மாதங்களாக அனுபவ ரீதியான கற்றல் களமாக முன்னெடுக்கப்பட்ட இந்தத் திட்டங்கள் ஊடாக தலைமைத்துவ ஆற்றல், ஊழியர் ஊக்குவிப்பு மற்றும் குழு மனப்பான்மை போன்றவற்றை விருத்தி செய்ய முடிந்துள்ளது.

உயர் பங்குபற்றல் மற்றும் அனுபவ ரீதியான கற்றல் போன்றவற்றை உறுதி செய்வதே கற்றல் [illegible] திட்டத்தின் முக்கிய அம்சமாக அமைந்துள்ளது. அனைத்து மட்ட



[illegible] தேவைகளுக்குப் பொருத்தமாகவும், நிறுவனத்தின் இலக்குகளைப் பொதுவான புரிந்துணர்வுடன் இயக்கும் வகையிலும் பயிற்சி திட்டங்கள் வடிவமைக்கப்பட்டுள்ளன' என மேலும் மிஷேல் குறிப்பிட்டார். இந் நிறுவனத்தின் அங்கத்தவர்கள் பொதுவாக முகம் கொடுக்கும் சூழ்நிலை பிரச்சனைகளை அடிப்படையாகக் கொண்டு பண்டாரகம நகரின் சர்வோதய கல்விப் பயிற்சி நிலையத்தில் இடம்பெற்ற கற்றல் செயற்பாடுகளில் சன்ஷைன் ஹெல்த்கெயர் குழுக்களைச் சேர்ந்த சுமார் 450 ஊழியர்கள் பங்குபற்றியிருந் தனர்.

இந்தத் திட்டங்கள் குறித்து சன்ஷைன் ஹெல்த்கெயர் இன் முகாமைத்துவ பணிப்பாளர் ஷியாம் சதாசிவம் கூறியதாவது, 'எனது அணியினர் அதியுயர் ஆற்றலை வெளிப்படுத்தியிருந்ததுடன், அவர்கள் மிகவும் துடிப்பாகவும், நேர் மறையாகவும் காணப்படுகின்றனர்' என்றார்.

இந்த நிறுவனத்தின் மனித வளப் பிரிவானது செயற்திறன் நோக்கிய கலாசாரம், செயற்திறன் ஊக்குவிப்பு மற்றும் வெகுமதிகள் மற்றும் திறமைகளைத்தக்கவைத்தல்போன்றவற்றில் மிக முக்கிய பங்கை வகிக்கிறது. (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித மிருகங்களுக்குத் தகுந்த தண்டனை வழங்கப்படவேண்டும்

நாகரிக உலகில் புதிய கண்டுபிடிப்புக்களான முகநூல், இணையம், புதிய வடிவங்களில் பல தொலைபேசிகள் ஏராளம். இன்னும் என்னென்னவோ புதிது புதிதாய் தோன்றுகின்றன. பத்திரிகைகள், தொலைக்காட்சிகள் மூலமும் பல நல்ல நிகழ்ச்சிகளைப் பார்க்கிறோம். இரசிக்கிறோம். ஆனால் சமீபகாலமாக சிறுமிகளை வன்புணர்வுக்கு உட்படுத்திய காமப்பேய்களின் அட்டகாசம் பற்றி அறிகிறோம். மலராத மொட்டுக்களைக் கசக்கிப் பிழிந்து பாலியல் பலாத்காரம் செய்யும் காமுகர்களை யார் தண்டிப்பது?

இந்தப் பேய்களுக்கு தகுந்த தண்டனை தேவை. நல்லாட்சியில் எமது ஜனாதிபதி மரண தண்டனையை நிறைவேற்றக் காத்திருக்கும் வேளையில் அதனைத் தடுப்பதை ஏற்றுக்கொள்ள முடியாது. சாவுத் தண்டனை மனித மீறல் என்றால் பிஞ்சுகளின் நிலை என்ன? குற்றவாளிக்குத் தகுந்த தண்டனை கொடுத்து, மனித மிருகங்களுக்கு சாவுத் தண்டனை கொடுப்பது நிரந்தரத் தீர்வாகட்டும். இறைவன் கண்ணை மூடிவிட்டான். நீதி தேவதை ஆவது கண் திறக்கட்டும்.

மனிதன் இன்று மிருகமாக மாறி வருகின்றான். அவனது சிந்தனையும், செயல்களும் கொடூரமாக மாறிக் காணப்படுகின்றன. ஒன்றுமறியாத இளம் குருத்துக்களைச் சிதைக்கும் அளவுக்கு அவன் மோசமானதொரு நிலைக்குச் சென்றுவிட்டான். அவனைத் திருத்த வேண்டுமானால் கடுமையான தண்டனைகளை வழங்குவதைத் தவிர வேறு வழியே இல்லை. இதன் மூலமாவது ஏனைய மனிதர்கள் திருந்தி நடப்பார்கள் என எதிர்பார்ப்போம்.

– ***வாசகி,*** கல்வயல், சாவகச்சேரி.

# மெல்லச் சாகுதா தமிழ்மொழி?

கடந்த 21 ஆம் திகதி நண்பகல் 12.30மணி அளவில் அரச வங்கி ஒன்றின் கிளைக் கரும பீடத்தில் நடைபெற்ற சம்பவம் இது. ஓர் இளைஞர் ஒரு காசோலையைப் பணமாக மாற்றவோ/தனது சேமிப்புப் புத்தகத்திலிருந்து பணத்தை மீளப்பெற்றுக் கொள்ளவோ முயற்சிக்கையில் அவர் வசம் அடையாளத்தை நிரூபிக்கக்கூடிய தே.அ.அட்டையோ கடவுச்சீட்டோ எதுவும் இருக்கவில்லை. வங்கி அலுவலர் அவரிடம் சாரதி அனுமதிப்பத்திரமாவது இருக்கிறதா? என வினவினார். இளைஞர் தனது மோட்டார் சைக்கிள் வண்டியை நோக்கி ஓடினார். பின்பு மீண்டும் திரும்பி வந்து, அதுவும் இல்லை. ஆனால் 'தடகொள' இருக்கிறது என்றார்.

ஆனால் அதையும் அவர் அலுவலரிடம் காட்ட முயற்சிக்கவில்லை.

கருமபீடத்திலிருந்த 3 பெண் அலுவலர்களும், அது என்ன தடகொள என்று கேட்டு ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள்.




சம்பந்தப்பட்ட இளைஞருக்கும் அதை சரியாகத் தமிழில் புரிய வைக்க முடியவில்லை. இவ்வளவுக்கும் இவர் ஒரு செந்தமிழர். அருகிலிருந்த நான் அழையாவிருந்தாளியாக எனது மூக்கை அவர்களின் பிரச்சினையில் ஓட்டி தடகொள என்றால் அது ஒரு சிங்களச் சொல். அந்தப் பத்திரம் தவறு செய்யும் வாகனச் சாரதிகளிடம் போக்குவரத்துப் பொலிஸாரால் கொடுக்கப்படுகிறது. இதைக் கொண்டுபோய், உரிய இடத்தில் குற்றப்பணத்தைச் செலுத்தி பற்றுச் சீட்டுப் பெற்றுக்கொண்டு, அதைக் காட்டினால், அவர்களுக்கு மீண்டும் சாரதி அனுமதிப்பத்திரம் கையில் கிடைக்கும் என விளங்கப்படுத்தினேன்.

இது ஒரு சிறிய உதாரணமே, எப்படி நமது மண்ணில் அரச கரும மொழி பாவனையில் உள்ளது என்பதற்கு இது அரசின் தவறல்ல. அந்த இளைஞர் அதையே ஒரு தமிழ்ச் சொல்லாக நினைத்து வருகிறாரோ? அல்லது அதற்கு மாற்றாகத் தமிழ் மொழி பெயர்ப்பு என்னவென அறிய முயலவில்லையோ? என்பதுதான் எனது ஆதங்கம். தவறுகள் எமது மக்களிடையேதான் இருக்கிறது என்பதே எனது தாழ்மையான கருத்து.

***வி.எஸ்.நடராஜா,***
***சிறுப்பிட்டி தெற்கு, நீர்வேலி***

## கேலிச் சித்திரம்




நன்றி: லங்காதீப

# பொறுத்திருந்து பார்க்கலாம்

உள்நாட்டுப்போர் நிறைவு, சமாதானம், அமைதி என்றெல்லாம் நிம்மதியடைந்த காலம் இப்போது இல்லை. எப்போது எங்கு என்ன நடக்குமோ என்ற பதற்றமான நிலையே உள்ளது. யாழ்ப்பாணம் தனது பாதையில் இருந்து விலகுகின்றது. முப்பது வருட காலத்துக்கு முன்னர் இல்லாத ரௌடிகளின் அட்டகாசங்கள் தலைவிரித்தாடுகின்றன. தட்டிக் கேட்க யாரும் இல்லை. தண்டனை கொடுக்க நேரமில்லை.

அண்மைக்காலமாகவே உலுக்குகின்றன வல்லுறவுச் செய்திகள். பதற வைக்கின்றன ரௌடி அட்டகாசங்கள். குழந்தை – யுவதி என்றெல்லாம் பார்க்கக்கூட நேரமில்லாமல் துஷ்பிரயோகத்தில் ஈடுபடுகின்றனர். அடிதடியில் இறங்குகின்றனர். எல்லாவற்றுக்கும் காரணம் 'எம்மைத் தட்டிக்கேட்க யார் இருக்கின்றனர்' என்ற ஒருவித மமதை. தலைக்கனம் என்றுகூடச் சொல்லலாம். தவறில்லை.

திருமணம் முடித்து ஒரு வாரம். புது வாழ்க்கை தொடர்பில் ஒரு வித எதிர்பார்ப்பு. இப்படியான ஒரு இளம் தம்பதியினர் மீது தாக்குதல் நடத்தியுள்ளனர் 'அடாவடிக்காரர்'. இந்தச் சம்பவத்தில் 46 வயதான எஸ்.மாதவமணிவண்ணன் உயிரிழந்தார். அவருடைய மனைவி தர்சினியும், தர்சினியின் சகோதரனான யாழ்.போதனா வைத்திய சாலையில் ஊழியராகப் பணிபுரியும் சி.சுகிர்தராஜும் தொடர்ந்தும் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். யாழ்ப்பாணத்தில் தற்போதைய சூழ்நிலையில் இவ்வாறான சம்பவங்கள் அதிகரிக்கின்றன. அடிக்கடி இடம்பெறுகின்றன. சுருக்கமாகச் சொல்லப்போனால் யாழ்ப்பாணத்தில் இதெல்லாம் சகஜமப்பா என்று சொல்லும் அளவுக்கு வந்துவிட்டது. இந்தச் சம்பவத்தில் குறித்த கும்பல் அடாவடியில் ஈடுபடத் தொடங்கியவுடன் அது தொடர்பில் யாழ். பொலிஸாருக்கும், 119 என்ற அவசர இலக்கத்துக்கும் தொடர்பு கொண்டு முறையிட்டப்பட்டுள்ளது. அடாவடித்தனம் ஆரம்பித்து சுமார் ஒரு மணித்தியாலத்தின் பின்னரே மோசமாகத் தாக்குதலை நடத்தியுள்ளனர்.

தாக்குதலாளிகள் அங்கிருந்து சென்ற பின்னர் அரை மணி நேரம் கழித்தே பொலிஸார் சம்பவ இடத்துக்கு வந்தனர் என்பது கொல்லப்பட்டவரின் உறவினர்களின் குற்றச்சாட்டு.

இந்தத் தாக்குதல் சம்பவத்தையடுத்து 3 ஆம் நாள் யாழ்.அரசடியைச் சேர்ந்த ஒருவரும், அல்லைப்பிட்டியைச் சேர்ந்த ஒருவரும் கைது செய்யப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. பொலிஸார் விரைந்து செயற்பட்டிருந்தால் தாக்குதலை நிறுத்தி உயிரிழப்பைத் தடுத்திருக்கலாம் என்றது ஒருபுறம் இருக்க யாழ்ப்பாணத்தில் இந்த நிலை தொடரத்தான் போகின்றதா? என்ற கேள்வி எழுகின்றது.

யாழ்ப்பாணத்தின் நிலைமை இவ்வாறு மோசமாகிவரும் நிலையில் சமூக விரோதச் செயல்களில் ஈடுபடுபவர்கள் எவராக இருப்பினும் அவர்களைக் கண்ட இடத்தில் கைது செய்யுமாறு பொலிஸாருக்கு யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் உத்தரவிட்டுள்ளார். பாடசாலை மாணவர்கள், இளைஞர்கள் ஆகியோரைத் தீவிரமாகக் கண்காணிக்குமாறும் அவர்கள் மது அருந்தி விட்டுச் சமூகவிரோத நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனரா என்பதை உன்னிப்பாக அவதானிக்குமாறும் அவர் பணித்துள்ளார். இது வரவேற்கத்தக்க விடயம். ஆனால் இது எவ்வளவுக்கு சாத்தியம் என்பது தெரியவில்லை.

மது அருந்துபவன் எப்பாடுபட்டாவது மது அருந்தத்தான் செய்வான். அடாவடி செய்தே வாழ்க்கையை நடத்துபவன் தொடர்ந்தும் அதைத்தான் செய்யப்போகின்றான். தண்டனைகள் அதிகரிக்கும் பட்சத்தில் குற்றங்கள் குறையும் என்பது பொதுவான கருத்து. ஆனால் கண்டவுடன் கைது என்பது சாதாரண ஒரு விடயம் தான். நீதிமன்றத் தாக்குதலின்போதும் இப்படித்தான் அள்ளிக் கட்டிக் கைதுசெய்தார்கள். இப்போது பார்த்தால் அதில் பலர் பிணையில் வெளியே வந்து சுதந்திரமாகத் திரிகிறார்கள்.

குற்றச்செயல்களைக் கட்டுப்படுத்துவதற்கும், குற்றவாளிகளையும் சந்தேகநபர்களையும் கைது செய்வதற்கும் விசேட அதிரடிப்படையினரை அமர்த்தித் தேடுதல் மற்றும் கண்காணிப்பு நடவடிக்கைகளைத் தீவிரமாக மேற்கொள்ளுமாறு யாழ்.மேல்நீதிமன்ற நீதிபதி வடமாகாண சிரேஷ்ட பொலிஸ் மா அதிபருக்கு உத்தரவிட்டிருந்தார். இதுபற்றிய தற்போதைய நிலைப்பாட்டை பொலிஸார் மேல்நீதிமன்றுக்குத் தெரியப்படுத்தினர். யாழ்.நகர், கொக்குவில் மற்றும் சுன்னாகம் பொலிஸ் பகுதிகளில் நடைபெற்ற வாள்வெட்டுக்கள், தெரு ரவுடித்தனங்கள் என்பன விசேட அதிரடிப்படையினரின் துணையுடன் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ள நிலையில் யாழ்ப்பாணம் மத்தியில் நடைபெற்ற இந்தக் கொடூரக் கொலை மீண்டும் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

நீதிபதி பொலிஸாருக்கு பல விடயங்கள் தொடர்பில் அறிவுறுத்தியுள்ளார். குறிப்பாக பாடசாலை மாணவர்கள் பகிரங்க இடங்களில் மது அருந்துவதைக் கண்டால் போத்தல்களுடன் கையும் மெய்யுமாகக் கைது செய்யவேண்டும், மாணவர்கள் பாடசாலை நேரத்தில் சீருடையில் வீதிகளில் நின்றால் அவர்களை விசாரணைக்கு உட்படுத்தவேண்டும், மாணவிகளின் பின்னால் கூக்குரலிட்டுச் செல்லும் மாணவர்களைக் கண்காணித்து நடவடிக்கை எடுக்க வேண்டும், மாணவர்கள், இளைஞர்கள் சந்திகளிலும் மதகுகளிலும் கூடிநின்று கும்மாளம் அடிக்கும் செயல்களையும் கட்டுப்படுத்தவேண் டும், தனியார் கல்வி நிலையங்களின் முன்னால் நின்று மாலை 4 மணிக்கும் 6 மணிக்கும் இடையில் மாணவிகளிடம் சேஷ்டை செய் யும் இளைஞர்களையும், அங்கு மாணவிகளுக்குப் பாதுகாப்பு என்று கூறிக் கோஷ்டியாக மோதல்களில் ஈடுபடுபவர்களையும் கைது செய்ய வேண்டும். கூட்டமாகக் கூக்குரலிட்டு மோட்டார் சைக்கிள்களில் இளைஞர்கள் பவனி வந்தால் அவர்களைக் கண்ட இடத்தில் கைது செய்ய வேண்டும் போன்ற விடயங்கள் அவற்றில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இப்படித்தான் காலத்துக்குக் காலம் சட்டங்கள் நடை முறைக்கு வரும். சிறிது காலத்தின் பின்னர் போடப்பட்ட சட்டங்களைத் தேடித்திரிய வேண்டும். பொறுத்திருந்து பார்க்கலாம் புதிய சட்ட நடவடிக்கைகள் என்ன பயனைத் தரப் போகின்றன என்று.

பத்தி எழுத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி : 021-492 7474, 021-492 7475, 021-567 9933, 021-567 9944
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## நல்லாட்சியின் முன்னகர்வுக்கு அரசமைப்புசபை பக்கபலமாகட்டும்

மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக்காலத்தில் நிறைவேற்றப்பட்ட 18 ஆவது அரசமைப்பு திருத்தத்தை அடுத்து நாடும் மக்களும் படிப்படியாக இழந்து வந்த ஜனநாயக விழுமியங்கள், ஜனவரி 8 ஆம் திகதி நிகழ்ந்த அரசியல் புரட்சியின் பின்னர் படிப்படியாக மீண்டும் நிலை நாட்டப்பட்டு வருவதை இப்போது மக்கள் உணரத் தலைப்பட்டிருக்கிறார்கள்.

அவ்வாறான ஒரு முக்கிய நிகழ்வாக கடந்த 21 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் சகல உறுப்பினர்களாலும் ஒரு மனதாக அங்கீகரிக்கப்பட்ட 10 உறுப்பினர்களைக் கொண்ட அரசமைப்புச் சபை தொடர்பான தீர்மானத்தைக் கூறலாம். தேர்தலின்போது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் நாட்டு மக்களுக்கு வழங்கியிருந்த அதிமுக்கியமான வாக்குறுதிகளில் இதுவும் ஒன்றாக விளங்கியது.

ஜனநாயகம் சமூக நீதி, பொறுப்புக்கூறல், வெளிப்படைத்தன்மை இன்னும் இவை போன்ற நல்லாட்சியின் விழுமியங்களை முன்னெடுத்துச் செல்வதில் அரசமைப்புச்சபை பெரிதும் பங்களிப்புக்களை வழங்குவதாக இருக்கும் என்பதே சகலரதும் எதிர்ப்பார்ப்பாகும்.

தகுதியானவர்களிடம் இருந்து விண்ணப்பங்களைப் பெற்று சுயாதீன ஆணைக்குழுக்களைத் தெரிவு செய்யும் பணியை முடுக்கிவிடச் சபை தீர்மானித்திருப்பதாகத் தெரிகின்றது.

ஊழல் மற்றும் கைஇலஞ்சம் போன்ற குற்றச்சாட்டுக்களை விசாரிக்கும் ஆணைக்குழு, பொலிஸ், பொதுசேவைகள் மற்றும் நீதித்துறைகளுக்கான சுயாதீன ஆணைக்குழு, சுயாதீன தேர்தல் ஆணைக்குழு, தேசிய கொள்வனவு ஆணைக்குழு, தேசிய கணக்காளர் சேவைகள் ஆணைக்குழு, நிதித்தொடர்பான ஆணைக்குழு, எல்லை நிர்ணய ஆணைக்குழு மற்றும் மனித உரிமைகள் ஆணைக்குழு என பல்வேறு ஆணைக்குழுக்கள் நியமிக்கப்படவிருக்கின்றன.

இந்த ஆணைக்குழுக்கள் இயல்பாகவும், சுயாதீனமாகவும் இயங்க ஆரம்பிக்கத் தொடங்கியதும் நாட்டில் நல்லாட்சி உறுதி செய்யப்படும். ஜனநாயகமும் அதனுடான நிர்வாகச் செயற்பாடுகளும் விரிவடையும்; மக்கள் சுதந்திரமாகச் செயற்பட வழிபிறக்கும் என்று கருதப்படுகின்றது.

இப்போதைய அரசமைப்புச் சபையில் சிவில் பிரதிநிதிகளின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட வேண்டும் என சமூக ஆர்வலர்கள் பலர் கருதுகிறார்கள். அரசியல் சார்ந்தவர்களை விட பொது மக்கள் சார்ந்த சுயநலம் அல்லது அமைப்பு சார்ந்த அக்கறையில்லாதவர்கள் இடம்பெறுவது அதன் சுயாதீனத்தை மேம்படுத்தும் என்பது அவர்களது கருத்து. 19 ஆவது அரசமைப்புத் திருத்தத்தின் முதல் முன்வடிவின் கீழ் அரசமைப்புச் சபையில் சிவில் உறுப்பினர்களாக 6 பேர் நியமிக்கப்பட வேண்டும் என்று முன்மொழியப்பட்டிருந்தாலும், அப்போது ஐக்கிய மக்கள் சுதந்திரமுன்னணியினர் அதனைக் கடுமையாக எதிர்த்தனர்.

அரசமைப்புச் சபை ஒன்றை நிறுவும் திட்டம் ஒன்று முன்னர் சந்திரிகா குமாரதுங்க ஜனாதிபதியாகவும், ரணில் விக்கிரமசிங்க பிரதமராகவும் இருந்த காலங்களில் நிறுவுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், அன்றைய அரசியல் சிக்கல்களால் அவை முறையாக செயற்படாமல் போயிற்று.

17 ஆவது அரசமைப்புத் திருத்தத்தின் மூலம் கிடைக்கப்பெற்றிருந்த இவ்விதமான வரப்பிரசாதங்கள் அனைத்தும் 18 ஆவது திருத்தத்தின் மூலம் நிர்மூலமாக்கப்பட்டன. அதுவரைக்கும் செயற்பட்டு வந்த அனைத்து சுயாதீன ஆணைக்குழுக்களும் செயலிழந்து சர்வாதிகாரமும் குடும்ப ஆட்சி முறையும் தலைதூக்கி நாடு அதலபாதாளத்தை நோக்கிச் சென்றுகொண்டிருந்தது. அப்போது விழித்துக் கொண்ட சிறுபான்மை மக்கள், நல்லாட்சிக்கு ஒரு தோற்றுவாயை கண்டுபிடித்தார்கள். அது சிறிது சிறிதாக பயன்தரத் தொடங்கியிருக்கிறது. அந்த வகை சார்ந்ததே இப்போது நிறுவப்பட்டுள்ள அரசமைப்பு சபை எனலாம். அதன்மூலம் நாட்டில் ஜனநாயகம் மீண்டும் தழைத்தோங்க வேண்டும். நல்லதையே நினைப்போம் -- நல்லதே நடக்கட்டும்.

# அமெரிக்கத் தீர்மானம் இலங்கையில் எடுபடுமா?



சேரலாதன்

அடுத்த வாரம் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பாக அமெரிக்காவால் கொண்டு வரப்படவிருக்கும் இறுதித் தீர்மானத்தில் இலங்கை அரசை வற்புறுத்தும் அம்சங்கள் இடம்பெற்றிருக்குமெனத் தெரியவருகின்றது.

இந்தத் தீர்மானத்தில் இலங்கையில் இடம் பெற்றதாகக் கூறப்படும் போர்க் குற்றங்கள், மனித உரிமை மீறல்கள் தொடர்பான குற்றச்சாட்டுக்களை இலங்கை விசாரிக்கும் போது சர்வதேச விசாரணையாளர்கள், சட்டத்தரணிகள், நீதிபதிகளின் பிரசன்னம் அவசியமெனவும், இது தொடர்பாக இலங்கை அரசுக்கு அழைப்பு விடுப்பதாகவும் அமெரிக்கத் தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், சட்டத்துக்குப் புறம்பான படுகொலைகள், காணாமற் போகச் செய்யப்பட்டமை ஆகிய குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக நம்பகமான விசாரணைகளை முன்னெடுக்குமாறும், வடக்குக் கிழக்கில் இராணுவ மயமாக்கலைத் துரிதப்படுத்துமாறும் மாகாண சபைகளுக்கு அதிகாரங்களைப் பகிர்ந்து அளிப்பதன் மூலமாக அரசியல் தீர்வொன்றை எப்போதும் இலங்கை அரசைக் கோரும் வகையில் அமெரிக்கத் தீர்மானத்தில் வகை செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை இந்தத் தீர்மானத்தை நடைமுறைப்படுத்துதல் தொடர்பாக ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 33 ஆவது அமர்வில் வாய் மூலமான விளக்கமொன்றையும், இதற்கு அடுத்த அமர்வில் விரிவான அறிக்கையையும் முன்வைக்குமாறு அமெரிக்கத் தீர்மானத்தில் விரிவாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் உள்ளகப் பொறிமுறை உருவாக்கப்பட்டுள்ளதாகவும், நான்கு கட்டங்களாக இது செயற்படுத்தப்படவுள்ளதாகவும் இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார். இலங்கை அரசு, ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளராக அவரது அறிக்கையில் தெரிவிக்கப்பட்ட விடயங்களை [illegible] வம் வழங்குவதை மங்கள சமரவீரவின் கூற்று நிரூபிக்கின்றது.

ஆனால் இதன் நடைமுறைச் சாத்தியம் தொடர்பாக போகப் போகத்தான் தெரிய வரும்.

ஆனால் எதிர்க்கட்சித் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தன் உள்ளக விசாரணைகளில் நம்பிக்கை கொள்ள முடியாதெனத் தெரிவித்துள்ளார். சர்வதேச விசாரணையாளர்களின் பிரசன்னம் இருந்தாலும் உள்ளக விசாரணைகளால் நீதியை நிலை நாட்டமுடியாதெனக் கூறிய அவர் மூதூர், திருகோணமலைப் படுகொலைகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளை இதற்கு உதாரணமாகக் குறிப்பிட்டார்.

இலங்கையில் ஆட்சி மாறினாலும் ஆட்சியாளர்களின் மனங்களில் மாற்றம் ஏற்பட்டதாகத் தெரியவில்லை. குற்றஞ் சுமத்தப்பட்டவர்களைக் காப்பாற்றுவதில் காட்டுகின்ற ஆர்வம் பாதிக்கப்பட்ட தமிழர்கள் மீது அரசுக்கு இருப்பதாகத் தெரியவில்லை. இவ்வாறு இருந்திருக்குமாயின் போர் ஓய்ந்து ஆறு ஆண்டுகள் கடந்த நிலையிலும் போரினால் பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு நியாயம் கிடைக்காமல் இருந்திருக்காது.


பொதுவாகவே இலங்கையில் சிறுபான்மையினருக்கு எதிரான வஞ்சகமான நடவடிக்கைகள் இடம் பெறுவது வழக்கமான ஒன்றாகி விட்டது. சிறுபான்மை மக்கள் தமக்கு ஏற்பட்ட பாதிப்புக்கு நிவாரணம் பெறுவதற்குக் கூட நாதியற்ற நிலையில் வாழ்ந்து வருகின்றனர். இதற்குப் பெரும்பான்மையினரின் ஆட்சி நீடிப்பதே பிரதான காரணம் ஆகும். அத்துடன் இனவெறியும் தலைதூக்கிக் காணப்படுவதால் இனங்களுக்கு இடையிலான உறவுப்பாலம் சிதைவடைந்து காணப்படுகின்றது. இதனைச் சீர்செய்வதற்கு உரியவர்கள் முன்வருவதாகத் தெரியவில்லை. சிறுபான்மையினர் இழிவாகக் கருதப்படும் இந்த நாட்டில் உறவுப்பாலம் தொடர்பாக எவரும் சிந்திப்பதாகத் தெரியவில்லை. இறுதிப் போரின் போது கொத்துக்கொத்தாகத் தமிழர்கள் அழிக்கப்பட்டமை தொடர்பாக பெரும்பான்மையின மக்களும் சரி, அவர்களது அரசியல் தலைவர்களும் சரி சிறிய அனுதாபம்கூடத் தெரிவிக்க வில்லை. மாறாகப் போர் வெற்றியைக் கொண்டாடுவதிலேயே குறியாக இருந்தார்கள். கலிங்கத்துடனான போரில் மாமன்னன் அசோகன் வெற்றி பெற்றிருந்த போதிலும், போரின் போது ஏற்பட்ட மனித அவலங்களை அவன் நேரில் பார்த்து விட்டதால் பெரும் வேதனையில் மூழ்கினான். அந்த நேரம் பார்த்து அங்கு வந்த புத்த துறவி ஒருவர் கலிங்கத்துப்போரில் மனிதர்களுக்கு ஏற்பட்ட அழிவுகளைச் சுட்டிக் காட்டினார். மேலும் இத்தகைய ஒரு அழிவுக்குப் பின்னால் போர் வெற்றி அவசியம்தானா எனவும் அவர் சுட்டிக்காட்டினார். இதனால் மேலும் வேதனை அடைந்த அசோகன் இந்து மதத்திலிருந்து புத்த மதத்துக்கு மதம் மாறினான். இவனது வாரிசுகளான மகிந்தனும் சங்கமித்தையும் புத்தமதம் இலங்கையில் தோன்றுவதற்கு வித்திட்டதாகச் சரித்திரம் கூறுகின்றது. புத்த மதம் உயிர்க்கொலைகளை ஒரு போதுமே நியாயப்படுத்தியதில்லை. அதற்கு எதிரான போதனைகளையே கொண்டுள்ளது. ஆனால் புத்த மதத்தைப் பின்பற்றுவதாகக் கூறும் இலங்கையில் அந்த மதத்துக்கு விரோதமான செயற்பாடுகளே இடம்பெற்று வருகின்றன. புத்த துறவிகள் போர் வெறியை ஊட்டுவதுடன் போருக்கான தமது ஆசீர்வாதத்தையும் வழங்கி வருகின்றனர். மேலும், இறுதிப்போரில் வகைதொகை இன்றி தமிழர்கள் கொல்லப்பட்டதையும், படுகாயங்களுக்கு உள்ளாக்கப்பட்டு அங்கவீனர்கள் ஆக்கப்பட்டதையும் இவர்கள் கண்டு கொண்டதாகவே தெரியவில்லை.

மாறாக, போர் வெற்றியைக் கொண்டாடிய நிகழ்வுகளில் இவர்களைப் பெருமளவில் காணமுடிந்தது.

இந்த நிலையில் அமெரிக்காவோ வேறு எந்த ஒரு நாடோ தீர்மானத்தைக் கொண்டு வந்தாலும் நம்பகத்தன்மை வாய்ந்த நீதியான விசாரணை இடம்பெற்று, குற்றவாளிகள் தண்டிக்கப்படுவார்கள் எனக் கூறமுடியாது. ஏனென்றால் இலங்கையின் தலைவிதி அன்றிலிருந்து இன்றுவரை மாற்றமுடியாத ஒன்றாகவே இருந்து வருகின்றது. இதனை மாற்றி அமைப்பதற்கு அதிகாரம் படைத்த எவருமே துணிந்து செயற்பட மாட்டார்கள் என்பதுதான் யதார்த்தம் ஆகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆங்கில மூலம்: சொன்யா சீட்ஸ்
தமிழில்:ரஜீபன்



# பாதிக்கப்பட்டவர்களின் ஆதரவைப் பெறாத விசாரணைகள் எப்போதும் தோல்வியைத் தழுவும்

இலங்கையில் இடம்பெற்ற போர்க் குற்றங்கள் தொடர்பிலான விடயங்களைத் தன்னால் கையாள முடி யும் என்பதை உலகம் ஏற்றுக் கொள்ளச் செய்வதற்கான முயற்சியில் சிறிசேன அரசு இறங்கியுள்ளது.

எனினும் பாதிக்கப்பட்டவர்களின் நம்பிக்கையைப் பெறக்கூடிய, நாட்டின் காயங்களை ஆற்றக்கூடிய, உரியநீதி நடைமுறை முன்னெடுக்கப்படுவதை உறுதிசெய்வதற்காக சர்வதேச சமூகம் வலுவாக நிற்கவேண்டும்.

உள்நாட்டுப் போரின் இறுதித் தருணங்களில் இரு தரப்பும் இழைத்த மீறல்களுக்குப் பொறுப்புக்கூறுமாறும், நாடு கொடுங் கோன்மைக்குள் சிக்கிய பின்னர் இழைக்கப்பட்ட சித்திரவதைகள் மற்றும் ஏனைய துஷ்பிரயோகங்கள் குறித்து விசாரணை செய்யுமாறும் விடுக்கப்பட்ட வேண்டுகோளைத் தடுப்பதற்காக இலங்கை அரசு இராஜதந்திர நககர்வுகளுக்குப் பெருமளவு பணத்தை முதலீடு செய்தது.

இலங்கை தன்னை பயங்கரவாதத்திற்கு எதிரான போராட்டத்தில் ஈடுபட்டுள்ள நாடாகவும், வளர்ச்சியடைந்து வரும் நாடுகளுக்கான முன்னுதாரணமாகவும்,சித்திரிக்க முயன்றதாலும்,மனித உரிமை நிகழ்ச்சி நிரலை முன்னிறுத்திய மேற்குலகநாடுகளின் தலையீட்டை தனது இறைமையை மீறும் நடவடிக்கை எனநியாயப்படுத்தியதாலும் அதில் வெற்றிபெற்றது

2013 இல் கொழும்பில் இடம்பெற்ற பொதுநலவாய நாடுகளின் உச்சி மாநாடே இந்த விடயத்தில் முக்கிய மாற்றத்தை ஏற்படுத்தியது. மாநாட்டைப் புறக்கணிக்குமாறு விடுக்கப்பட்ட கடும் அழுத்தங்களை உதாசீனம் செய்த பிரிட்டனின் பிரதமர் டேவிட் கமருன் தான் இதைப் பயன்படுத்தி இலங்கையின் பாதிக்கப்பட்ட மக்களை சந்திப்பேன்,மனித உரிமைகள் மீது வெளிச்சத்தை பாய்ச்சுவேன் எனக் குறிப்பிட்டார்.

காணமற்போனவர்களின் குடும்பத்தவர்களுடனான சந்திப்பை கமரூன்போரின் போது இடம்பெற்ற மீறல்கள் மற்றும் போர் முடிவடைந்த பின்னர் தொடரும் உரிமை மீறல்கள் ஆகியவை குறித்த விசாரணைக்கான அழைப்பாகவும், மாற்றினார், அதன் மூலம் தன் மீது வைக்கப்பட்ட குற்றச்சாட்டுகளை அர்த்தமற்றதாக்கினார்.

கடந்த வருடம் மார்ச் மாதம் அமெரிக்காவும் பிரிட்டனும் தண்டனையிலிருந்து விலக்களிக்கப்படுதலைத் தவிர்த்துப் பொறுப்புக் கூறுதலை உறுதிசெய்வதற்காக சர்வதேச விசாரணையொன்றுக்கு உத்தரவிடுமாறு கோரும் ஐக்கிய-நாடுகள் மனித பேரவை தீர்மானத்துக்காக உலக நாடுகள் பலவற்றின் ஆதரவைப் பெற்றன.

ஐக்கிய நாடுகளின் விசாரணைக் குழுவுக்கு 'சித்திரவதையிலிருந்து விடுதலை' அமைப்பும் ஆதாரங்களை வழங்கியிருந்தது.

எமது விசேட மருத்துவநிபுணர்கள் மேற்கொண்ட 150 பரிசோதனைகளின் மூலம் கிடைத்த ஆதாரங்ககளை அடிப்படையாக வைத்து பெருமளவு தடயவியல் ஆதாரங்களை நாங்கள் இலங்கை குறித்த ஐக்கிய

> தங்களுடைய துயரங்களுக்குக் காரணமானவர்களை சர்வதேச தரத்திலான நீதி நடை முறைக்கு உட்படுத்தும் திறன் இலங்கை அரசுக்கு இல்லை எனப் பாதிக்கப்பட்டவர்கள் உறுதியாகக் கருதுகின்றனர். அமெரிக்காவும், பிரிட்டனும்,மனித உரிமைப் பேரவையின் ஏனைய உறுப்பு நாடுகளும் ஒவ்வொரு மட்டத்திலும் வலுவான சர்வதேச பிரசன்னத்தைக் கொண்ட பொறுப்புக்கூறும் பொறிமுறைக்கு அழைப்பு விடுக்கவேண்டும் என அவர்கள் எதிர்பார்க்கின்றனர்.

நாடுகள் விசாரணையாளர்களுக்கு வழங்கியிருந்தோம்.

இலங்கையில் மோதல்கள் முடிவடைந்த பின்னரும் சித்திரவதை ,பாலியல் வல்லுறவு மற்றும் சிகரெட்டால் சுடுதல்போன்ற சித்திரவதை நடைமுறைகளை இலங்கைப் படையினரும், பொலிஸாரும் பின்பற்றுகின்றனர் என்பதை எமது களங்கமடைந்த சமாதானம் என்ற அறிக்கை புலப்படுத்தியது.இதனால் ஆபத்தை எதிர்கொள்பவர்கள் அனேகமாக தமிழர்களாகவே காணப்படுகின்றனர், குறிப்பாக விடுதலைப்புலிகளுடன் தொடர்புகளை வைத்திருந்ததாக கருதப்பட்டவர்கள் அல்லது தொடர்புகளை வைத்திருந்தவர்கள்–

இலங்கை அரசு ஐ.நாவின் இந்த விசாரணையைக் கடுமையாக எதிர்த்தது,மகிந்த ராஜபக்ச தேர்தலில் தோற்கடிக்கப்பட்ட பின்னரும் விசாரணையாளர்கள் இலங்கைக்குள் நுழைவதற்கு அனுமதிக்கப்படவில்லை. ஜனாதிபதி சிறிசேன தலைமையிலான புதிய அரசு நல்லிணக்கத்திற்கு பொறுப்புக்கூறுதல் என்பது அவசியமானது என்பதை ஏற்றுக்கொள்கின்றது,எனினும் இது உள்நாட்டு விவகாரம் எனத் தெரிவிப்பதன் மூலம் முன்னைய அரசின் நிலைப்பாட்டை எதிரொலிக்கின்றது.இலங்கையின் சர்வதேச கடப்பாடுகளை அடிப்படையாக வைத்துப் பார்க்கும்போது தேசிய நடைமுறையென்பது விரும்பத்தக்கதாகக் காணப்படலாம். ஆனால் நடைமுறையில் இது அதிகளவு பிரச்சினைக் குரியதாகக் காணப்படலாம்.

இலங்கை பிழையான உள்நாட்டுப் பொறிமுறைகளின் வரலாற்றைக் கொண்ட நாடு. நாட்டின் ஊழல் மிகுந்த உயர் குழாமிற்குப் பலவருடங்களாக சேவையாற்றிய பின்னர் நீதித்துறையும் பலவீனமானதாகக் காணப்படுகின் றது.

இலங்கையின் புதிய தலைமை ஊடகசுதந்திரத்தை ஏற்படுத்துவது, சட்டத்தின் ஆட்சியை ஏற்படுத்துவது போன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டாலும்,அளவுக்கதிகமான வளர்ச்சியைக் கண்டுள்ள,சட்டத்துக்குக் கட்டுப்படாத பாதுகாப்புத் தரப்பை எதிர்கொள்வதற்கு அது தயாரில்லை.அதனால் அது முடியாததாகக் காணப்படுகின்றது.

இலங்கையின் உள்நாட்டுப் போரின் இறுதித் தருணங்களில் பெரிய மனித உரிமைமீறல்களில் ஈடுபட்டதாகக் குற்றம்சாட்டப்படும் இராணுவ அணியொன்றின் மூத்த தளபதியொருவருக்கு, சமீபத்தில் இராணுவத்தில் மிக முக்கிய பதவியொன்று வழங்கப்பட்டது.இது பாதிக்கப்பட்டவர்களுக்கு விழுந்த பெரிய அடியாகும்.

இலங்கையில் இவ்வருடம் சித்திரவதையை அனுபவித்த 8 பேர் குறித்த விவரங்கள் எங்களிடம் உள்ளன, இந்த சித்திரவதைகள் யூன் மாதம் வரை இடம்பெற்றுள்ளன.அனேக சந்தர்ப்பங்களில் பாதிக்கப்பட்டவர்கள் சாதாரண உடைகளில் வந்தவர்களால் கடத்தப்பட்டு வெள்ளை வானில் அவர்கள் அறிந்திராத இடங்களுக்குக் கொண்டுசெல்லப்பட்டுள்ளனர்.அங்கு அவர்கள் பல்வேறு வகையான சித்திரவதைகளுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர். பாலியல் வன்முறைகள், பெற்றோல் நிரப்பப்பட்ட பிளாஸ்டிக் பைகளினால் மூச்சு திணறச்செய்யப்படுதல் என்பன இதில் அடங்கும்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் இராஜதந்திரிகள் மத்தியில் இலங்கை வெளி விவகார அமைச்சர் மங்களசமரவீர உரையாற்றுகையில்; எங்களை நம்புங்கள் என் றார், எனினும் பாதிக்கப்பட்டு, தப்பியவர்களின் மத்தியில் இந்த நம்பிக்கை மிகவும் குறைவாகக் காணப்படுகின்றது, இதில் பல குடும்பங்கள் இன்று வரை இலங்கைப் படையினரால் கண்காணிப்புக்கும், துன்புறுத்தலுக்கும் உள்ளாகியுள்ளன.

தங்களுடைய துயரங்களுக்குக் காரணமானவர்களை சர்வதேச தரத்திலான நீதி நடைமுறைக்கு உட்படுத்தும் திறன் இலங்கை அரசுக்கு இல்லை எனப் பாதிக்கப்பட்டவர்கள் உறுதியாகக் கருதுகின்றனர். அமெரிக்காவும், பிரிட் டனும்,மனித உரிமைப் பேரவையின் ஏனைய உறுப்பு நாடுகளும் ஒவ்வொரு மட்டத்திலும் வலுவான சர்வதேச பிரசன்னத்தைக் கொண்ட பொறுப்புக்கூறும் பொறிமுறைக்கு அழைப்பு விடுக்கவேண்டும் என அவர்கள் எதிர்பார்க்கின்றனர்.

பாதிக்கப்பட்ட மக்களின் ஆதரவைப் பெறாத எந்த நடைமுறையும் ஆரம்பமாவதற்கு முன்னரே தோல்வியைத் தழுவும் சாத்தியத்தைக் கொண்டது.நல்லிணக்கத்துக்கு உதவுவதற்குப் பதில் அது அதற்கான பாதையில் சறுக்கல்களை ஏற்படுத்தலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | | 3 | | 7 | | 1 | | |
| 6 | | | | | 9 | | | |
| | 8 | 1 | | | | | | |
| 2 | | | | 1 | | | 4 | |
| | | | 7 | 5 | 4 | | | |
| | 7 | | | 8 | | | | 9 |
| | | | | | | 8 | 7 | |
| | | | 5 | | | | | 2 |
| | | 9 | | 3 | | 4 | | 5 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்கரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

**நேற்றைய சுடோக்கின் விடை**

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | 4 | 6 | 2 | 3 | 9 | 8 | 7 | 1 |
| 2 | 7 | 9 | 1 | 5 | 8 | 6 | 4 | 3 |
| 8 | 3 | 1 | 7 | 4 | 6 | 2 | 5 | 9 |
| 1 | 2 | 3 | 5 | 8 | 4 | 9 | 6 | 7 |
| 4 | 9 | 7 | 3 | 6 | 1 | 5 | 8 | 2 |
| 6 | 8 | 5 | 9 | 7 | 2 | 1 | 3 | 4 |
| 3 | 6 | 2 | 8 | 1 | 7 | 4 | 9 | 5 |
| 7 | 1 | 8 | 4 | 9 | 5 | 3 | 2 | 6 |
| 9 | 5 | 4 | 6 | 2 | 3 | 7 | 1 | 8 |

## நாளை

**புரட்டாதி-12**
**செவ்வாய்கிழமை**
**29.09.2015**

**திதி:** பிரதமை காலை 6.52 வரை
**நட்சத்திரம்:** ரேவதி.மாலை 6.30 வரை
**சுபநேரம்:** 10.32-12.02 வரை
**இராகுகாலம்:** 3.02-4.32 வரை

# மரக்கறிகளின் நேற்றைய விலை நிலவரம்

| | மருதனார் மடம் | சாவகச்சேரி | சுன்னாகம் | நெல்லியடி | திருநெல் வேலி | கிளிநொச்சி | மன்னார் | வவுனியா |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 40 | 60 | 40 | 60 | 40 | 60 | 60 | 30 |
| கத்தரி | 60 | 70 | 80 | 60 | 60 | 60 | 80 | 40 |
| கரட் | 50 | 80 | 120 | 80 | 120 | 100 | 100 | 120 |
| மரவள்ளி | 50 | 60 | 50 | 40 | 80 | 60 | 50 | 40 |
| பயிற்றை | 60 | 80 | 120 | 60 | 80 | 80 | 100 | 50 |
| பாகல் | 100 | 100 | 120 | 100 | 100 | 120 | 110 | 80 |
| கருணைக்கிழங்கு | 80 | – | 80 | 100 | 100 | 80 | 120 | 80 |
| பெ.வெங்காயம் | 120 | 100 | 120 | 90 | 90 | 100 | 120 | 70 |
| சி.வெங்காயம் | 80 | 80 | 80 | 90 | 80 | 100 | 100 | 60 |
| பூசணி | 30 | 40 | 40 | 40 | 30 | 40 | 50 | 40 |
| தக்காளி | 120 | 100 | 120 | 100 | 90 | 100 | 80 | 80 |
| வாழைக்காய் | 70 | 60 | 50 | 50 | 60 | 40 | 60 | 30 |
| கீரை | 20 | 20 | 30 | 10 | 30 | 30 | 30 | 25 |
| பொன்னாங்காணி | 20 | 30 | 30 | 20 | 30 | 40 | 15 | 10 |
| பச்சை மிளகாய் | 160 | 120 | 200 | 120 | 140 | 160 | 200 | 120 |
| புடோல் | 40 | – | 40 | 40 | 60 | 40 | 80 | 40 |
| கோவா | 60 | 80 | 60 | 60 | 60 | 80 | 100 | 50 |
| வெண்டி | 50 | 40 | 120 | 50 | 70 | 40 | 50 | 25 |
| போஞ்சி | 160 | 140 | 160 | 160 | 140 | 200 | 160 | 140 |
| லீக்ஸ் | 70 | 80 | 80 | 80 | 80 | 100 | 80 | 70 |
| தேங்காய் | 50 | 40 | 50 | 60 | 50 | 40 | 35–40 | 35 |
| உருளைக்கிழங்கு | 120 | 100 | 100 | 90 | 100 | 80 | 100 | 100 |
| தேசிக்காய் | 160 | 200 | 200 | 120 | 90 | 240 | 160 | 180 |
| வல்லாரை | 20 | 20 | 10 | 10 | 30 | 20 | 15 | 10 |
| கறிமிளகாய் | 100 | 100 | 120 | 100 | 100 | 100 | 120 | 80 |
| இராசவள்ளி | – | – | – | 160 | 120 | – | 180 | 80 |
| முருங்கைக்காய் | 150 | 100 | 160 | 60 | 140 | 80 | 120 | 80 |

# இஞ்சியை ஒதுக்காதீர்..!



இஞ்சி காய்ந்தால் சுக்கு ஆகும். இதுபலமருத்துவப்பயன்களைக் கொண்டிருக்கிறது. சுக்கு, மிளகு, திப்பிலி என்பது திரிகடுகம் எனும் கூட்டு மருந்தாகும். சுக்கு, மிளகு, திப்பிலி என்னும் மூலிகைகள் உடலுக்கு நன்மை தரக்கூடியன. இஞ்சி மஞ்சள் போலவே இருக்கும் ஒரு விவசாயப் பயிராகும். இது பல நோய்களுக்கு அருமருந்தாக உள்ளது. தடிமன் நோய்க் காரணியான வைரஸைத் தாக்கி அழிக்கிறது, தலை வலியைப் போக்குகிறது, இரத்த ஓட்டம் சீராக இருக்க உதவுகிறது, கொழுப் புச்சத்தைக் குறைக்கிறது, மத்திய நரம்பு மண்டலத்தைத் தூண்டி இருதய, சுவாசத் தசைகள் சீராக இயங்க உதவுகிறது.

மலச்சிக்கல் ஏற்படுவதைத் தடுக்கிறது, செரிமானத்தை சீராக்கி வயிற்றுவலி ஏற்படுவதைத் தடுக்கிறது, மகளிரின் கருப்பை வலிக்கும், மாதவிலக்கு நேரங்களில் அடிவயிற்றில் உண்டா கும் வலிகளுக்கும் நன்மருந்தாக உள்ளது. தோலில் உண்டாகும் உலர்சருமம், காயங்கள், சிரங்குகள் போன்றவற்றிக்கும் இது நல்ல மருந்தாகும். இஞ்சியானது பசியைத் தூண்டுவதுடன், தேவையற்ற கழிவுகளை வெளிக்கொணரப் பேருதவி புரிகிறது. உடலின் ஜீரண உறுப்புகள், சிறுகுடல், பெருங்குடல் உள்ளிட்டவை இஞ்சிச் சாறு மூலம் சுத்தப்படுத்தப்படுகிறது. பெரும்பாலான நோய்களுக்கு காரணமாக இருக்கும் மலச்சிக்கலை அறவே அகற்றி உடலுக்குப் புத்துணர்ச்சியைத் தருகிறது.

பொதுவாக அசைவ உணவு வகைகளை சமைக்கும்போது, வெள்ளைப்பூண்டும், இஞ்சியும் அதிக அளவில் சேர்த்து சமைப்பார்கள். இஞ்சிச் சாறை பாலில் கலந்து சாப்பிட வயிற்று நோய்கள் தீரும். இஞ்சியை நன்றாகச் சுட்டு; அதை நசுக்கி உடம்பில் தேய்க்க பித்த, கப நோய்கள் தீரும். இஞ்சிச் சாறில், வெல்லம் கலந்து சாப்பிட வாதக் கோளாறு நீங்கி பலம் ஏற்படும். காலையில் இஞ்சிச் சாற்றில், உப்புக் கலந்து மூன்று நாட்கள் சாப்பிட பித்த தலைச்சுற்று, மலச்சிக்கல் தீரும். இஞ்சிச் சாறோடு, தேன் கலந்து சூடாக்கி காலையில் வெறும் வயிற்றில் ஒரு கரண்டி வீதம் சாப்பிட்டு வெந்நீர் குடித்துவர தொப்பை கரைந்து விடும்.

இஞ்சிச் சாற்றில், தேன் கலந்து தினசரி காலை ஒரு கரண்டி சாப்பிட்டு வர நோய் எதிர்ப்புச் சக்தி கூடும். ஒவ்வொருநாளும் உணவில் ஐந்து கிராம் இஞ்சியைச் சேர்த்துக் கொள்வது, இதய நோயாளிகளுக்கு மாரடைப்பை வராமல் காக்கும். இஞ்சியா னது இதய ரத்தக்குழாய்கள் எதிலும் அடைப்பு உண்டாகாமல் தடுத்தும், மேலும் உண்டாவதைக் கரைத்தும் உதவுவதாக ஆய்வுகள் கூறுகின்றன. இஞ்சியையும், சுக்கையும் உபயோகிக்கும் போது, அதன் தோலை நீக்குவது மிக முக்கியமானது. இல்லை எனில் மாறாக வயற்றுக் கடுப்பு முதலியவை ஏற்படும். இஞ்சியை சுத்தம் செய்யும்போது அதன் மேல் தோலை நன்றாக நீக்க வேண்டும் அதன் மேல் தோல் நஞ்சாகும். அதே போல் சுக்கை சுத்தம் செய்யும்போது அதன் மேல் சுண்ணாம்பை தடவி காயவைத்து பின் அதை நெருப்பில் சுட்டு பின் அதன் தோலை நன்கு சீவி எடுக்கவேண்டும். இது மிக முக்கியமானது; சுத்தம் செய்யாமல் உபயோகிக்க வேண்டாம். தினம் ஒரு துண்டு இஞ்சியை அரைத்து ஒரு டம்ளர் மோரில் கரைத்துக் குடித்தால் இடுப்புப் பகுதியில் கொழுப்பு சேராமல் பார்த்துக்கொள்ளும். சேர்ந்த கொழுப்பையும் கரைக்கும். எந்தப் பானம் குடித்தாலும், அதில் ஒரு கரண்டி இஞ்சிச் சாறு கலந்து குடியுங்கள். வயிற்றுக் கோளாறுகள் பிடித்துக்கொண்டு அவஸ்தைப்பட வேண்டியதில்லை.

## கடவுளைக் காணவேண்டும் விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....



கடவுள் இருந்தால் அவனை நாம் காண வேண்டும், ஆத்மா இருந்தால் அதனை நாம் உணர வேண்டும், அப்படியில்லையென்றால் நம்பிக்கை இல்லாமல் இருப்பது நன்று. பாசாங்கு போடுவதை விட நாத்திகனாக இருப்பதே மேல்.உலகின் குறைகளைப் பற்றிப் பேசாதே. குறைகளை நோக்கி வருத்தப்படு, எங்கும் நீ குறைகளைக் காண்பாய். ஆனால், நீ உலகுக்கு உதவி செய்ய விருப்பினால் உலகைத் தூற்றாதே, குறை சொல்லாதே. குறை சொல்லி உலகை இன்னும் பலவீனப்படுத்தாதே. உலகின் குறைகள், குற்றங்கள் எல்லாம் அதன் பலவீனத்தால் விளைபவை அல்லவா. செயல் நன்று, சிந்தித்து செயலாற்றுவதே நன்று. உனது மனதை உயர்ந்த இலட்சியங்களாலும், சிந்தனைகளாலும் நிரப்பு. அவற்றை ஒவ்வொரு நாளின் பகலிலும் இரவிலும் உன் முன் நிறுத்து அதிலிருந்து நற் செயல்கள் விளையும். வாழ்வும் சாவும், நன்மையும் தீமையும், அறிவும் அறியாமையும் ஆகிய இவற்றின் கலவைதான் மாயா, அல்லது பிரபஞ்சத்தின் இயல்பு. இவ் மாயத்துள் நீ எல்லையற்ற மகிழ்ச்சிக்காக அலையலாம், ஆனால் நீ தீமையையும் காண்பாய்.


# கடலுணவுகளின் நேற்றைய விலை நிலவரம்

| | யாழ்ப் பாணம் | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித் துறை | சாவகச்சேரி | மாதகல் |
|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 600 | 700 | 800 | 600 | 550 |
| நண்டு | 300 | 400 | 300 | 350 | 200 | 400 |
| கணவாய் | 600 | 600 | 300 | 600 | 600 | – |
| பாரை | 550 | 500 | 500 | 550 | 500 | 420 |
| சுறா | 300 | 500 | – | 700 | 700 | – |
| சீலா | 500 | 400 | 300 | 400 | 450 | 350 |
| விளை | 700 | 450 | – | 500 | 500 | 400 |
| முரல் | 300 | 400 | – | 350 | 300 | – |
| கும்பிளா | 400 | 400 | 300 | 400 | 300 | – |
| கிழாக்கன் | 500 | 800 | 300 | 500 | 200 | – |
| ஒரா | 550 | 300 | 300 | 400 | 300 | – |
| திரளி | 250 | 250 | 100 | 350 | 150 | 300 |
| நகரை | 200 | 250 | 200 | 300 | 200 | 300 |
| ஆடை | 150 | 200 | 80 | 120 | 100 | 80 |
| ஒட்டி | 250 | 300 | 100 | 300 | 200 | – |
| திருக்கை | 150 | 300 | 250 | 300 | 200 | 200 |
| பாலை | 350 | 250 | – | 450 | 250 | – |
| வாளை | 100 | 150 | – | 300 | 200 | 200 |
| கொய் | 100 | 150 | 100 | 100 | 50 | – |
| மதனம் | 150 | 200 | – | 280 | 200 | 250 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிர்ஷ்டகரமான வாழ்க்கை

நேற்றைய உதயன் பத்திரிகையில் நவ ரத்தினங்களுள் ஒன்றான 'மரகதம்' பற்றிப் பார்த்தோம். இன்று அதன் தொடர்ச்சியாக 'வைரம்' பற்றிப் பார்ப்போம். பிறவியிலேயே சிலருக்கு அதிர்ஷ்ட அமைப்புக்கள் அமைந்திருக்கும். சிலர் தங்கள் உழைப்பினாலும், தெய்வ வழிபாட்டினாலும், சாமர்த்தியத்தினாலும் அதிர்ஷ்டகரமான நல்வாழ்வை அமைத்துக் கொள்வார்கள். அந்த வகையில், ஒவ்வொருவரின் அதிர்ஷ்டத்தையும் மேன் மேலும் பெருகச் செய்யும் ஆற்றல் மிக்க நவரத் தினங்க ளுள் ஒன்று 'வைரம்'.



**வைரம்**

வைரத்தின் ஆங்கிலப் பெயர் டைமண்ட் ஆகும். வைரத்தைப் பற்றி அறியாதவர்களே இருக்க முடியாது. வைரம் அதிக கடினத் தன்மை வாய்ந்தது என்பதால், வைரத்தை வைரத்தால் மட்டுமே அறுக்க முடியும்.

நிறமற்ற, நீலம் அல்லது சிவப்பு நீல ஒளியைக் கொண்ட, கரும்புள்ளிகள் இல்லாத வைரமே மிகவும் சுபமான வைரமாகும். மஞ்சள், சிவப்பு ஒளி தரும் வைரம், அரசியலில் உயர் பதவிகளை வகிக்கும் ஆற்றலைத் தருகிறது. வெண்மையான வைரம் மதம் மற்றும் ஆன்மிக, தெய்வீக காரியங்களுக்கு ஏற்றது. மஞ்சள் நிறம் மட்டும் கொண்ட வைரம் வெற்றியையும் செல்வச் செழிப்பையும் தரும். சிற்றின்ப நோய்கள், சிறுநீர் சம்பந்தப்பட்ட நோய்கள், கண் நோய் போன்ற நோய்களும் வைரத்தை அணிவதால் குணமாகும். ஆண் குழந்தையை விரும்புபவர்கள் சிறு கருமை கலந்த வைரங்களை அணிவது நன்மையளிக்கும். வைரம் அணிபவர்களை விஷ ஜந்துக்கள் மற்றும் தீய ஆவிகள் தீண்டா.

இந்தியாவில் கோகினூர் என்ற இடத்தில் எடுக்கப்படும் வைரம் மிகவும் தரம் வாய்ந்ததாகவும், விலை உயர்ந்ததாகவும் உள்ளது. தற்போது ஆபிரிக்காவில் உள்ள கிம்பர்லி என்ற இடத்திலிருந்தும் வைரம் வெட்டி எடுக்கப்படுகிறது. வைரத்தின் தெளிவு நிறம், எடை இவற்றை வைத்தே இதன் விலையும் நிர்ணயம் செய்யப்படுகிறது. வைரத்தை எவ்வளவு நாள்கள் உபயோகித்தாலும் அதன் ஓரங்கள் தேயாமலும் நுணுங்காமலும் காணப்படும். விலை உயர்ந்த வைர வியாபாரத்தை உலக அளவில் கட்டுப்படுத்தும் நிறுவனமாக லண்டனில் தலைமையகத்தைக் கொண்ட பீபர்ஸ் விளங்குகின்றது.


எமது நாட்டைப் பொறுத்தவரை கோடுகள், புள்ளிகள் ஏதும் இல்லாமலிருந்தால் அவை நல்ல வைரம் என்றும், அணியத் தகுந்தவை என்றும் எண்ணி வாங்கி அணிந்து கொள்கிறோம். ஆனால் அயல் நாட்டினர் வைரத்தின் ஜொலிப்புக்கு மட்டுமே முக்கியத்துவம் தருகின்றனர்.

வைரத்தை ரிஷபம், துலாம் ராசிகளில் பிறந்தவர்களும் சுக்கிரன் சுபராக இருந்து சுக்கிர திசை நடப்பில் உள்ளவர்களும் 6,15,24 ஆம் எண்ணில் பிறந்தவர்களும் அணிவது சிறப்பைத் தரும். வைரத்தை தங்கம் அல்லது பிளாட்டினத்தில் பதித்து மோதிர விரல் அல்லது நடு விரலில் வெள்ளிக்கிழமைகளில், சுக்கிர ஓரையில் அணிந்து கொள்வது நல்லது.

வைரம் தன் மீது படும் ஒளியை முழுதாக எதிரொலிப்புச் செய்வதால் வைரத்தின் வழியே எந்தவொரு பொருளையும் பார்க்க இயலாது. புளு ஜாகர் எனப்படும் வைரம் தான் உலகிலேயே விலை உயர்ந்ததாகும். இது காலை நேர சூரிய ஒளியில் நீல நிற ஒளி உமிழும் தன்மையுடையதாகும். வைரத்தை 2000 ஆண்டுகளுக்கு முன் பிருந்தே இந்தியாதான் ஏற்றுமதி செய்து வருகிறது. தற்போது அனைத்தும் தோண்டி எடுக்கப்பட்டு விட்டதால் ஒரிஸாவில் மீண்டும் வைரங்கள் இருப்பதற்கான வாய்ப்புகள் உண்டு என்பதைக் கண்டு பிடித்துள்ளனர். ஒரு கரட் (0.2 கிராம்) பட்டை தீட்டப்பட்ட வைரத்தைப் பெறுவதற்கு 30 டன் எடையுள்ள பாறை மற்றும் மணலைப் பிரித்தெடுக்க வேண்டியுள்ளது. அதன் பின்னர் பட்டை தீட்டி, பலர் கை மாறி மாறி விற்பனைக்கு வருவதால்தான் வைரத்தின் விலை பல மடங்காக உள்ளது. சுத்தமான வைரங்களைக் கண்டு பிடிக்க டைமண்ட் டெஸ்டர்களும் தற்போது உபயோகத்துக்கு வந்து விட்டதால் அந்தக் கருவியைக் கொண்டு சுத்தமான ஒளி, ஒலி அமைப்பை கண்டுபிடித்து விடலாம். வைரத்துக்கு எளிதில் வெப்பத்தை கடத்தும் தன்மை உள்ளதாலேயே மேற்கண்ட பரிசோதனையைச் செய்து போலியா, சுத்தமானதா என கண்டறிய முடிகிறது.

வெண்மையாகவும் தீவு போன்ற வடிவம் கொண்டதாகவும் இருக்கும் வைரம் தோஷமுள்ளதாகும் இதை அணிவதால் பெரும் பாதிப்புகளை சந்திக்க நேரிடும்.

ஜிர்கான், வைரத்தை வாங்க இந்த ஜிர்கான் கற்களை வாங்கி அணியலாம். ஜிர்



கான் கற்களும் பளபளப்பும், கடினத் தன்மையும் கொண்டவை. வைரத்தைப் போலவே நற்பலனை ஏற்படுத்துவதாகவும் உள்ளன.

# குடும்ப மகிழ்ச்சி எதில்?



நல்லதொரு குடும்பம் பல்கலைக்கழகம் என்பார்கள். இதை எவரும் மறுக்க முடியாது. இதை அனுபவத்தில் உணர்ந்தவர்கள் பலர். இப்படி ஒரு நல்ல குடும்பம் தனக்கு அமைய வில்லையே என மறுகும் உள்ளங்கள் இல்லாமல் இல்லை. மனித இனத்துக்கு முக்கியமான சந்தோஷம் நல்ல குடும்பச் சூழல் தான். கைநிறையச் சம்பாதிக்கும் பலரும் ஏங்குவது அன்புக்குத்தானே!! கொடுக்கக் கொடுக்க ஆனந்தம் தருவது அன்பு. இனிமையான கதகதப்பான குடும்பச் சூழல் இந்த ஏக்கத்தை நிவர்த்தி செய்துவிடும். நம்பிக்கை, கருணை ஆகியவற்றை அள்ளித் தரும். சொர்க்கத்தை இறந்த பின் தான் அடைய வேண்டும் எனும் ஏக்கம் இல்லாமல் வாழும் வீடே சொர்க்கமாகி பிரச்சினைகள் எதுவந்தாலும் சுமுகமாக தீர்க்க வழி கொடுக்கும். இப்படிப்பட்ட சூழலில் வளரும் குழந்தைகள் வளர்ச்சி அளவிட முடியாமல் அதீதமாகவே இருக்கும்.

**பெற்றோரின் பங்கு:**

கணவன் – மனைவி வாழும் வாழ்க்கையின் பூரணம் அவர்களது அன்பால் பிறந்த குழந்தையாகும். குழந்தையைப் பெற்றால் மட்டும் போதாது. பிள்ளையை முறையாக வளர்க்க மனம் இருந்தால் மட்டுமே குழந்தை பெற்றுக்கொள்வது நலம். தனது காலில் நின்று முன்னேறும் விதமாகவும், பொறுப்புள்ள குடிமகனாகவும் குழந்தையை வளர்க்கும் மிகப் பெரிய பொறுப்பு பெற்றோருக்கு இருக்கிறது. சொத்துக் கொடுக்கிறோமோ இல்லையோ அன்பையும், கல்வியையும் கொடுத்தால் போதும். அதீத அன்பு ஆளையே அழித்துவிடும். கவனம் தேவை.

அன்பு என்றால் தன்னலமற்ற அம்மாவின் அன்பைத்தானே அனைவரும் சொல்வோம். அன்னை தான் குழந்தையின் முதல் ஆசிரியை. இதில் எந்த மாற்றுக் கருத்தும் இல்லை. ஆனால் பிள்ளை மேல் இருக்கும் அதீத பாசத்தினால் சில அம்மாக்கள் கண்டிப்பு இல்லாமல், தகப்பனிடமும் சொல்லாமல் பொத்திப் பொத்தி வளர்த்து கெடுத்து விடுவார்கள். கணவனும் மனைவியும் நன்கு புரிந்து பேசி குழந்தை வளர்ப்பில் ஈடுபட வேண்டும். அன்னையின் அன்பு, தந்தை கற்றுக் கொடுக்கும் உலக அறிவு இரண்டும் முறையாக சரியாக குழந்தைக்குக் கிடைத்தால் அதன் வளர்ச்சி மேல் சந்தேகமே வேண்டாம். அன்னை, தந்தை இருவரும் ஒருங்கிணைந்து செயல்படவேண்டும். நல்லது கெட்டது சொல்லிக் கொடுப்பது. ஒழுங்கு நடவடிக்கைகளின் வரைமுறைகள், அன்பு என கலந்தே வளர்க்க வேண்டும்.

**பெற்றோர் குழந்தை உறவு முறை:**

தனக்குக் கிடைக்காதது தனது பிள்ளைக்குக் கிடைக்க வேண்டும் என நினைப்பவர்கள் தான் பெற்றோர்கள். தமது பிள்ளைகளை சிறு குழந்தையிலிருந்து வளர்த்து வருபவர்கள். அதுவரை தன் பெற்றோர்கள் தான் உலகம் என நினைத்து, மகிழ்ந்து, பிரமித்து பார்த்து வந்த பிள்ளை பதின்ம வயதில் மாறிப் போவதேன்? காரணம் வேறொன்றும் பெரிதாக இல்லை. தனக்கான அடையாளத்தை எதிர்பார்க்கும் வயது இது. பெற்றோரை விட்டு ஓடிப்போய் தனது அடையாளத்தை காட்ட வேண்டும் என நினைப்பார்கள். ஆனால் அவர்களை சார்ந்திருப்பது இதற்கு தடையாக இருப்பதாக நினைப்பார்கள். தனது நண்பர்களையே அதிகம் சார்ந்து இருப்பார்கள். அப்பாவைவிட அம்மாக்கள்தான் பதின்ம வயது பிள்ளைகளுக்கு வில்லிகளாகத் தெரிவார்கள். தகப்பன் வேலைப் பளு, பிள்ளைகளின் எதிர்காலம் என ஓடிக் கொண்டிருப்பவர். தாயோ பக்கத்திலேயே இருந்து அணுஅணுவாக அவர்களது வளர்ச்சியைப் பார்ப்பவள். சின்ன அசைவும் சந்தேகத்தை தந்து தாயைத் தயார்படுத்தி விடும்.

சில சமயம் பிள்ளைகள் தவறு செய்யும் பொழுது இதை அப்பாவிடம் சொல்லவேண்டாம் என்பார்கள், சொல்லவும் முடியாமல் மெல்லவும் முடியாமல் இருதலை கொள்ளி எறும்பாகி கடைசியில் கணவனிடம் சொல்லிவிடுவாள். பிள்ளை கடுப்பாகி விலக ஆரம்பிக்கும். சொல்லாமல் போனால் கணவன் மனைவி உறவுக்குள் விரிசல் வந்துவிடும் என அந்தக் குழந்தைக்குத் தெரியாது.

தவிர அம்மாவிடம் அதிகம் பிரச்சினை ஏற்படக் காரணம் நண்பர்கள். அறையை, வீட்டையை சுத்தமாக வைக்கச் சொல்லுதல் போன்ற சின்ன சின்ன விடயங்களும் பிரச்சினையைத் தரும். அருகில் அமர்த்திப் பேசிப் புரிய வைக்க வேண்டும்.

**உடன் பிறப்புக்களுடனான உறவுமுறை:**


வயது ஏற ஏற உடன் பிறந்தவர்களுடன் உறவில் கொஞ்சம் விரிசல் விழும். அதிலும் அதிக வயது வித்தியாசம் இருந்தால் ரொம்ப கஷ்டம். ஒருவருக்கு மட்டும் அதிக அன்பு கிடைப்பதாக மற்ற பிள்ளை நினைப்பது, அவர்களுக்குள் அடிக்கடி நடக்கும் சண்டைகள், பொறாமை ஆகியவை இடைவெளியை ஏற்படுத்துகிறது. பெற்றோர்கள் இருவரிடம் எப்படி நடக்கிறார்கள் என்பதைப் பொறுத்தும் இது அமையும். ஆண் குழந்தைதான் பெரிது என கொஞ்சம் இழிவாக நடத்தப்படும் பெண் குழந்தை, அல்லது அடுத்தவர் வீட்டுக்கு போய்விடுவாள் என்பதற்காக அன்பை அள்ளிக் கொட்டி வளர்க்கப்படும் பெண் குழந்தை இருக்கும் வீட்டில் அன்புக்கு ஏங்கும் ஆண்மகன். இவர்கள் மனதில் இருக்கும் வடுக்கள் அவர்களின் முதுமை காலத்திலும் கூட ஆறாத வடுக்களாகி விடும். இது குழந்தைக்குத் தன் மீதே வெறுப்பு வரவைக்கும். இதனாலேயே தனது உடன் பிறந்தவரை விட தனது நட்புடன் காலத்தைக் கழிக்க விரும்புவார்கள். நல்லதொரு குடும்பத்தை பிள்ளைக்கு அளித்து நல்ல விதமாக வாழ வழி செய்வோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நரியும் அதன் நிழலும்

ஒரு நரி அதிகாலை எழுந்து மேற்கு நோக்கி வேட்டைக்குப் புறப்பட்டது. கிழக்கே இருந்து எழுந்த சூரிய ஒளியில் அதன் நிழல் வெகு நீளமாய், பெரியதாகத் தெரிந்தது. நரிக்கு ஏக குஷி. நான் ரொம்பப் பெரிய ஆளாக்கும், அதிலும் இந்தக் காட்டின் ராஜாவாக உள்ள சிங்கத்தை விடவும் பெரியவனாக நான் உள்ளேன் என நினைத் துகொண்டே வேட்டைக்குச் சென்றது.




செல்லும் வழியில் நரி ஒரு சிங்கத்தைக் கண்டது. சிங்கமோ சற்று முன்னர்தான் ஒரு மானை வேட்டையாடி அதை உண்ட களைப்பில் மெதுவாக நடந்து வந்து கொண்டிருந்தது.

நரியும் தன்னுடைய நிழல் சிங்கதை விடவும் பெரியதாக இருபதாக நினைத்துக் கொண்டு சிங்கம் வரும் வழியில் நடந்து சென்றது. சிங்கமும் நரியை ஒன்றும் செய்யாமல் கடந்து சென்றது. நரிக்கோ மிகவும் சந்தோஷம். நாம் சிங்கத்தை விடவும் பெரியதாக இருபதனால் சிங்கம் என்னைக் கண்டு பயந்து சென்றது என நினைத்துக் கொண்டு அன்று மாலை தன்னுடைய வீட்டுக்குச் சென்றது. மாலை வீட்டுக்குச் சென்றதும் நரி காட்டில் உள்ள மிருகங்களை எல்லாம் அழைத்தது. அனைத்து மிருகங்களும் நரியின் கூட்டத்துக்கு வந்தன. நரி அனைத்து மிருகங்களிடமும், இனிமேல் இந்தக் காட்டுக்கு நான் தான் ராஜா என்றது. யானையோ, இதை நாங்கள் ஏற்க முடியாது என்றது. உடனே நரி காலையில் நடந்த சம்பவத்தைக் கூறி, சிங்கமே என்னைப் பார்த்துப் பயந்து சென்றது என்றது. கூட்டத்தில் இருந்த மானோ, சிங்கத்தை உனக்கு முன்னால் மண்டி யிடச் சொல், பிறகு உன்னை இந்தக் காட்டுக்கு ராஜ வாக்குகிறோம் என்றது. அடுத்த நாள் நரி அந்தச் சிங்கத்தை தேடிச் சென்றது. செல்லும் வழியில் சிங்கம் தன்னுடைய பாதையை நோக்கி வருவதைக் கண்டு நரி கர்வத்துடன் நின்றது. சிங்கம் வந்தவுடன் சிங்கத்தைப் பார்த்து, எனக்கு முன்னாள் மண்டியிட்டுச் செல் என்று நரி கூறியது.

சிங்கமோ மிகவும் கோபம் கொண்டு தரக்குறைவாக பேசிய நரியைப் பார்த்து, உன்னை மன்னித்து விடுகிறேன் உடனே இங்கிருந்து செல் என்றது. நரியோ சிங்கம் தன்னைக் கண்டு பயந்து விட்டது என நினைத்து முடியாது என்று பதில் கூறிக் கொண்டே தன்னுடைய நிழலைப் பார்த்தது. அது மதிய நேரம் என்பதால் நிழல் உண்மையான அளவில் இருந்தது. அப்பொழுது தான் நரிக்குப் புரிந்தது சூரிய ஒளியில்தான் தன்னுடைய நிழல் பெரியதாக இருந்தது என்று. இதைப் பொறுத்துக் கொள்ள முடியாத சிங்கம் நரியை ஒரே அடியினால் கொன்றது.

நீதி: முட்டாள் தனமாக பெரிதாக யோசித்தால் அதற்கான இழப்பும் பெரிதாக இருக்கும்.







# பொது அறிவுத் தகவல்கள்

- குருதியில் உள்ள சிவப்பணு எரித்ரோசைட் என்றும், வெள்ளை அணு லியூக்கோசைட் என்றும் அழைக்கப்படுகிறது.
- குருதிக் குழாய்கள் இதயத்துக்கு குருதியை ஒரு நிமிடத்துக்குள் கொண்டு போய்ச் சேர்க்கின்றன.
- மனித உடலில் ஐந்தரை லீற்றர் குருதி உள்ளது.
- ரெடினா என்பது விழித்திரை
- ஹைப்போஜியுஸியா என்பது நாக்கில் ஏற்படும் நோய். இதன் அறிகுறி சுவை குறைந்து விடும்.
- ஒரோபாரின்க்ஸ் என்பது வாயின் பின்பகுதி, தொண்டையில் சேருமிடம்.
- கருவிலுள்ள குழந்தையின் இதயம் நான்காவது வாரத்திலிருந்து துடிக்க ஆரம்பிக்கிறது.
- மீடியாஸ்டினம் என்பது இரண்டு நுரையீரல்களுக்கு இடைப்பட்ட பகுதி
- இன்சுலின்: இதன் வேலை குருதியில் இருக்கும் சர்க்கரை அளவைச் சரியாக வைப்பது.
- சிறுநீரகங்கள் கீழ் முதுகில், முதுகுத் தண்டுக்கு இருபக்கமும் உள்ளன.
- அல்வியோலஸ் என்பது மெல்லிய சுவருடைய காற்றுச் செல்.
- மனித நுரையீரல்களில் 750,000,000 அல்வியோலஸ் செல்கள் உள்ளன.
- ஒரு குழந்தை 330 எலும்புகளுடன் பிறக்கிறது.
- உடலில் 206 எலும்புகள் உள்ளன.
- பிபுல்லா என்பது முழங்காலையும் குதிகாலையும் இணைக்கும் எலும்பு.



# முயற்சி திருவினையாக்கும்!



முயன்றால் முடியாதது ஒன்றுமில்லை என்று சொல்வார்கள். நம்மால் இது நிச்சயம் முடியாது என்று எண்ணும் கடினமான காரியங்களைக்கூட திரும்பத் திரும்ப விடாமுயற்சியுடன் செய்தால் கட்டாயம் வெற்றி அடைய முடியும். அது நமக்கு மேலும் நம்பிக்கையை ஊட்டும். ரால்ப் எமர்சன், எந்தச் செயலைச் செய்வதற்கு விடாமுயற்சி எடுக்கிறோமோ அதனைச் சாதிக்க முடிகிறது. சாதிக்கிற போது அந்தச் செயல் ஒன்றும் எளிமையாகி விடவில்லை. நமது முயற்சி அதனைச் செய்து முடிக்க எளிதாக்குகிறது என்கிறார். எந்தக் காரியமும் ஆரம்பிக்கும்போது மலைப் பாகத்தான் தே[illegible] நடக்க ஆரம்பி[illegible] எழுந்துதான் நடை பயிலுகின்றனர். கீழே விழுகிறோமே என்று அவர்கள் முயற்சிக்காமல் விடுவதில்லை. விடாமுயற்சி மட்டும் இல்லாவிட்டால் பல சாதனைகள் நிகழ்ந்திருக்கமாட்டா.

தோமஸ் அல்வா எடிசன் சொல்கிறார் ஒரு தோல்வி ஏற்பட்டால் மேலே முயற்சி செய்யாமல் இருப்பதுதான் நமது பலவீனமே. இன்னுமொருமுறை முயற்சி செய்து பார்ப்போமே எனும் எண்ணம்தான் வெற்றிக்கு நிச்சயமானவை என்கிறார்.

புத்தகங்களைத் தொடர்ந்து படித்து வந்தால் பல அறிஞர்களின் பொக்கிஷங்களை நம்மால் அறிய முடியும். நாம் எல்லாம் படித்து முடித்துவிட்டோம் என்று எண்ணுவது சுலபம். ஆனால் கற்றது கைம்மண்ணளவுதான் என்று புத்தகச் சுரங்கங்களைத் தோண்டத் தோண்டப் புரியும். ஒவ்வொரு சாதனையாளரும் ஆரம்பத்தில் எவ்வளவு சோதனைகளை சந்தித்திருக்கிறார்கள்! அரசியல், ஆராய்ச்சி, இலக்கியம், இசை என்று எந்தத் துறையிலும் சரித்திரப் புகழ் பெறுவதற்கு முன்னால் எத்தனை முறை தோல்வியைத் தழுவியிருக்கிறார்கள் என்பதும் தெரியும்.

தோல்விகள் கதவை மூடும்போது தொடர்ந்து விடாமுயற்சியுடன் கதவுகளைத் தட்டித் திறப்பதுதான் வெற்றிக்கான சாவி.

கடலை நோக்கி மலை சொல்லியது. நான் உன்னைவிட பலசாலி. என்னை யாரும் [illegible] என்று. ஆனால், பல ஆயி[illegible]ரில் கடலின் அலைகளால் மலை மறைந்தது கடல் அலைகள் தொடர்ந்தன.

ஓரிரு முறை தோல்வியை சந்தித்துவிட்டால் பின்னர் துவண்டுவிடாதே! தோல்வி நிரந்தரம் அல்ல, தோல்வியுற்றால் அதில் உள்ள தவறை ஒத்துக்கொண்டு அதிலிருந்து மீண்டு முன் னேறு...! ஆனால் ஒருபோதும் முயற்சி செய்ய மறக்காதே...! இதனை மறவாமல் இருந்தாலே வெற்றி நமது காலடியில் சரணடையும். விடாமுயற்சிக்கு உதாரணங்களாக, மேடம் கியூரி, மார்க்கபோலோ என்று அடுக்கிக் கொண்டே போகலாம். காந்திஜியின் விடாப் பிடியான அகிம்சைச் கொள்கைதானே சுதந்திரத்தையே வாங்கித் தந்தது! உலகில் சாதனையாளர்கள் எல்லோரிடத்திலும் அவரவர் துறைசார் அறிவோடு விடா முயற்சியும் இருந்து வருகிறது. அதனாலே அவர்கள் வெற்றி பெற்றார்கள் சாதனை படைத்தார்கள் தொடர்ந்தும் வருகிறார்கள்.

நமக்கு வெற்றிகள் வந்து சேர்வதற்கென்று தனியாக ஒரு நேரம் எதுவும் இல்லை. விடாமுயற்சியோடு செயற்படுகின்றவர்களிடத்தில் எந்த நேரத்திலும் வெற்றிகள் வந்து சேரும். சிகரங்கள் காத்திருக் கின்றன சிகரங்களை எட்ட நீங்கள் தயாராகுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய மீனவர் அத்துமீறலை தடுக்க இறுக்கமான நடவடிக்கைகள் தேவை

***அதிகாரிகளிடம் கையளித்த மனுவில் வடக்கு மீனவர்கள் கோரிக்கை***

30 வருடகாலப் போர் நிறைவடைந்தாலும் இன்னமும் மக்கள் வலிகளில் இருந்து மீளவில்லை. ஏதோ ஒரு வழியில் மீன்பிடித் தொழிலை ஆரம்பித்த மீனவர்களுக்கு தொடர்ந்து இடையூறுகள் ஏற்படுகின்றன. எல்லை தாண்டி வருகின்ற இந்திய இழுவைப் படகுகளில் வரும் மீனவர்களை நீதிமன்றத்தில் நிறுத்தி உரிய தண்டனையை வழங்கி இதனூடாக இந்திய இழுவைப் படகுகளின் வருகையை தடுப்பதற்கு வழிவகுத்தல் போன்ற கோரிக்கைகளை முன்வைக்கின்றோம் – இவ்வாறு வடக்கு மீனவர் கோரிக்கை முன்வைத்துள்ளனர்.

வடமாகாண கடற்றொழிலாளர் இணையம் – துறைமுகம் மாதகல், யாழ் மாவட்ட கிராமிய க்டற்றொழில் அமைப்புக்களின் சம்மேளனம், கடற்றொழில் நீரியல் வளத்துறை திணைக்களம் – பண்ணை யாழ்ப்பாணம், யாழ். மாவட்ட க.தொ.கூ சங்க சமாசங்களின் சம்மேளனம் – பிரதான வீதி யாழ்ப்பாணம் ஆகிய அமைப்புக்கள் இணைந்து கடந்தவாரம் நடத்திய பேரணியின் முடிவில் அதிகாரிகளிடம் மனு கையளித்திருந்தனர். அந்த மனுவிலேயே அவர்கள் இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

அந்த மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:–

போரால் தொழில் உபகரணங்கள் இழந்தோருக்கு இதுவரை உபகரணங்கள் வழங்கப்படவில்லை, மண்ணெண்ணெய் மானியம் அரைகுறையாக இருந்தபோதும் அதில் வருடக்கணக்கில் இழுத்தடிப்பு, கடற்தொழில் திணைக்களங்களால் மண்ணெண்ணெய் மானிய பதிவு மேற்கொள்ளப்படாத பலர் தவறவிடப்படுகின்றமை, மீனவர்கள் அநேகருடைய காணிகள் இன்னமும் விடுவிக்கப்படாமல் அதியுயர் பாதுகாப்பு வலயத்துக்குள் காணப்படுகின்றமை போன்ற பாதிப்புக்களுக்கு முகம்கொடுத்து சிறியளவில் தமது தொழிலைச் செய்யும் மீனவர்களுக்கு இந்திய மீனவர்களின் இழுவைப்படகின் தாக்கம் பெரியளவிலானது.

வடமராட்சி கிழக்கு, வடமராட்சி, வலிகாமம், தீவகம், ஆகிய யாழ் மாவட்டத்திலுள்ள இடங்களில் இந்திய இழுவைப் படகுகளின் தாக்கம் அதிகளவில் உள்ளது. ஆயிரத்திலிருந்து ஆயிரத்து ஐந்நூறு வரையிலான இந்திய இழுவைப் படகுகள் வாரத்தில் 3 நாள்கள் யாழ்ப்பாணத்தை ஆக்கிரமித்துவாழ்வாதாரத்தை வாரிச் செல்கின்றது. இதனால் பல பில்லியன் ரூபா பெறுமதியான கடல் வளங்கள் அழிவுறுகின்றன.

இலங்கை இந்திய கடல் எல்லைக் கோடு வெறுமனே தேசப்படத்துக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. வடக்கின் கரையோரங்கள் இந்திய எல்லைகள் போன்ற நிலை தோன்றியுள்ளது. எவ்வித தடைகளுமின்றி இந்திய இழுவைப்படகுகள் வடபகுதியில் சுதந்திரமாக தொழில் புரிய வாய்ப்புக்கொடுத்துவருகின்றது இலங்கை அரசு. கேட்டால் அப்படி அனுமதிக்கவில்லை என்கின்றனர். இது தொடர்பில் பாதிக்கப்பட்டுள்ள வடக்கு மீனவர்களுக்கு உரிய பதில் வேண்டும். இது தொடர்பில் உரிய தரப்பினரிடம் பலமுறை முறையிட்டோம். ஜனாதிபதி மைத்திரபால சிறிசேனவிடமும் இது தொடர்பில் பேசினோம். ஆனால் எதுவித தீர்வும் கிட்டவில்லை. பிடித்த இழுவைப் படகுகள் நல்லெண்ண அடிப்படையில் விடுவிக்கப்பட்டது தான் எமக்குக் கிடைத்த பதில்.

இலங்கை அரசின் தலையீட்டில் 2012, 2013, 2014களில் இருநாட்டு மீனவர் கலந்துரையாடல்கள் நடைபெற்றன. கடந்த காலங்களில் இலங்கை, இந்திய அரசுகளின் ஒன்றிணைந்த கூட்டங்களிலும் இந்திய அரசின் ஆலோசனைக்கு இலங்கை அரச பணிந்து செயற் பட்டதே தவிர தனது பக்கம் எவ் விதமான ஆலோசனைகளையும் முன்வைக்க வில்லை. இதுவரை காலமும் நாம் பொறுமையாக இருந்தோம். இனியும் பொறுத்தால் எங்கள் வாழ்வாதாரம் கேள்விக் குறியாகும். இந்த நிலையில் சட்டவிரோதமாக இலங்கை கடற்பரப் புக்குள் நுழைகின்ற இந்திய இழு வைப் படகுகளை கைது செய்து படகுகளை அரசுடைமையாக்குதல், எல்லை தாண்டி வருகின்ற இந்திய இழுவைப் படகுகளில் வரும் மீனவர்களை நீதிமன்றத்தில் நிறுத்தி உரிய தண்டனையை வழங்கி இதனூடாக இந்திய இழுவைப் படகுகளின் வருகையை தடுப்பதற்கு வழிவகுத்தல் போன்ற கோரிக்கைகளை முன்வைக்கின்றோம். – என்றுள்ளது. (ற–10)


உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு advt@uthayan.com 021 493 1111

**வேலையாள் தேவை**

கொழும்பை தலைமை அலுவலகமாக கொண்டு இயங்கும் World Express Services (பொதிகள் சேவை) நிறுவனத்தின் மன்னார் கிளைக்கு வேலைக்கு ஆள்கள் தேவை.

தொடர்பு :011 252 0894

**சேவை நலன் பாராட்டு**



யாழ். போதனா வைத்தியசாலையில் தாதிய உத்தியோகத்தராகவும் வீடுதி சகோதரியாகவும் கடந்த 33 ஆண்டுகாலமாகப் பணியாற்றி 20.09.2015 கடமையில் இருந்து ஓய்வு பெற்றுச் சென்ற திருமதி இராஜேஸ்வரி பாஸ்கரன் அவர்கள் மேலும் சகல சௌபாக்கியங்களும் பெற்று நீடூழி காலம் வாழ எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தாதியர் நலன்புரிக் கூட்டுறவுச் சங்கம், யாழ்ப்பாணம்.

**WORKSHOP ON PERSONALITY DEVELOPMENT & CAREER GUIDANCE**

நான் என்னவாக வேண்டும்?

அதற்கு என்ன செய்ய வேண்டும்!

தனிமனித ஆளுமையை எவ்வாறு வளர்க்கலாம்?
தனிப்பட்ட நிதியை எவ்வாறு முகாமை செய்யலாம்?
சுயதொழில் ஒன்றை எவ்வாறு தொடங்கலாம்?
தொழில் கல்வியை எவ்வாறு திட்டமிடலாம்?
யாழ்ப்பாணத்தில் உள்ள உயர் கல்வி வாய்ப்புகள் ?
ஆகிய தலைப்புகளில் துறை சார்ந்தவர்களின் வழிகாட்டல்கள் இடம்பெறும்.

இடம்:- கலைத்தூது கலையகம் 286, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
திகதி:- 04-10-2015 (ஞாயிறு) நேரம்:- மு.ப.8.30 - பி.ப 1.30
யாருக்கு:- தொழில், கல்வி வாய்ப்பினை தேடும் அனைவருக்கும் -

செயலமர்வில் பங்குபற்ற விரும்புவோர் 076 866 1583 என்ற தொலை பேசி இலக்கத்துடன் தொடர்புகொண்டு முற்பதிவு செய்துகொள்ளவும். வாணிபம்

பிரதான அனுசரணை வாணிபம் - சுய முன்னேற்ற வழிகாட்டி! அனைத்து புத்தக நிலையங்களிலும் கிடைக்கும் விலை ரூ. 75

**வாடகைக்கு**

திருநெல்வேலி, ஆடியபாதம் வீதியில் மருத்துவ பீடத்திற்கு 300m தூரத்தில் அமைந்துள்ள 4 அறை குசினி,வரவேற்பறையும் ஹோலும் மாபிள் பதிக்கப்பட்டது. attached Bathroom கொண்ட வீடு வாடகைக்குண்டு.

(64730) (12.15.17)

தொடர்பு : 0779352775

**Karala Construction**

கேரளா பாணியிலான வீடுகள் மிக குறைந்த செலவில் கட்டிக் கொடுக்கப்படும்.

தொடர்பு : 0779076843

ச.பாபு B.Sc (S.L) msc (U.K)

**தகவல் தொழில்நுட்ப துறையில் முன்னணி வேலைவாய்பை இலக்காக கொண்ட துறைசார் பாடநெறிகள்**

நீங்கள்
இம்முறை க.பொ.த உயர்தரம் செய்தவரா
IT துறைக்குள் நுழைவதற்கு ஆர்வமுள்ளவரா
வேலையில் பதவி உயர்வினை எதிர்பார்ப்பவரா
?



பதிவுகளை இம் மாதம் 30ம் திகதிக்கு முன்னர் நேரடியாக மேற்கொள்ளுங்கள்

அப்படியாயின் உங்களுக்கு விசேடமான PEARSON (UK) அனுமதி பெற்ற டிப்ளோமா பாடநெறிகள் இப்போது ESOFT வழங்குகிறது

DiTEC INTERNATIONAL Diploma in Information Technology — assured by PEARSON

DiE Diploma in English — வலுவான இரட்டைச் சான்றிதழ் ESOFT + Pearson (UK)

PEARSON BTEC HND — Computing & Systems Development — Business Management

பாடநெறிக்கு புதிய மாணவர்கள் தற்போது இணைத்துக் கொள்ளப்படுவர்

New Batches 03.10.2015 | 05.10.2015

எதிர்கால தொழில்வாய்ப்பினை உறுதிப்படுத்தும் ஏனைய டிப்ளோமாக் கற்கைநெறிகள்

DiSE Diploma in Software Engineering — Duration : 6 Months — Free Text books — assured by PEARSON
DiWE Diploma in Web Engineering — Duration : 6 Months — Free Text books — assured by PEARSON
DiBM Diploma in Business Management — Duration : 4 Months — Free Text books — assured by PEARSON
DiHN Diploma in Hardware & Networking — Duration : 4 Months — Free Text books — assured by PEARSON
DiBE Diploma in Business English — Duration : 4 Months — Free Text books — assured by PEARSON
DiCA Diploma in Computerized Accounting — Duration : 5 Months — Free Text books — assured by PEARSON

ESOFT — Shaping Lives, Creating Futures.

ESOFT METRO CAMPUS
No. 137, K.K.S Road, Jaffna
Hotline : 077 309 9 308 | Tel : 021 222 4142

துரித அழைப்பு : 0773099308

web : www.esoft.lk


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# குறைகளை எடுத்துக் காட்டினால் எதிர்ப்பு அரசியல்வாதி என்கிறார்கள்

## வடக்கு முதலமைச்சர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், செப். 28
என்னைப் பலரும் ஒரு எதிர்ப்பு அரசியல் வாதி என வர்ணிப்பதை நான் அறிவேன். நான் ஒரு அரசியல்வாதியும் இல்லை. கட்சி சார்ந்தவனும் இல்லை என வடக்கு மாகாண முதலமைச்சர் நீதியரசர் க.வி. விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

சில கட்சிகளில் ஒருவர், இருவர் எடுக்கும் முடிவுகளுக்கு எல்லோருமே கட்டுப்பட வேண்டும் என்று எதிர்பார்க்கின்றார்கள். அவர்களின் முடிவுகளில் குறைகளை எடுத்துக் காட்டினால் எதிர்ப்பு அரசியல்வாதி என்கின்றார்கள் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் 125 ஆவது ஆண்டு விழாக் கொண்டாட்டத்தின் இறுதி நாள் நிகழ்வு நேற்று மாலை கல்லூரியின் குமாரசுவாமி மண்டபத்தில் இடம் பெற்றது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே முதலமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

*ஏமாற்றம்*

உங்கள் பழைய மாணவரும், எனது பழைய மாணவருமான இந்த நாட்டின் பிரதம நீதியரசர் நண்பர் ஸ்ரீபவன் இந்த நிகழ்வுக்கு வருவார் என்று எதிர்பார்த்திருந்தேன். ஆனால் ஏமாற்றமடைகின்றேன். இந்த நாட்டின் பிரதம நீதியரசர்கள் இரு வர் உங்கள் பழைய மாணவர்கள். பிரதம நீதியரசர் சர்வானந்தாவும் உங்கள் பழைய மாணவரே.

இன்றைய மாணவர்களே எதிர் காலத்தின் தலைவர்களாக மாறுகின்றார்கள் அல்லது மாற்றப்படுகின்றார்கள். தமிழினத்தைப் பொறுத்தவரையில் எமது மக்கள் கடந்த 30 ஆண்டுகளாக சொல்லொணாத் துயரங்களை அனுபவித்தது மட்டுமல்லாமல் ஏனைய மாகாணங்களுடன் ஒப்பிடுகின்ற போது மிகவும் பின்னடைந்த நிலையில் இருப்பதை நாம் அவதானிக்கின்றோம்.

ஊழல் இருக்கத்தான் செய்கின்றது பிள்ளைகளை இழந்தவர்கள் - பெற்றோர்களை இழந்த சிறார்கள் என்று பலதரப்பட்ட மக்கள் தினமும் எம்மிடம் உதவி கோரி வருகின்றனர். இவர்களின் சோகக் கதைகள் எமக்கு மிகுந்த வேதனையைத் தருகின்றன. இவர்களுக்கு உதவுவதற்கு நாமும் முயற்சிகளை மேற்கொண்டுள்ளோம். அரசு தரும் பணம் மிகச் சொற்பமே.

அவற்றைக் கூடுமானவரை இலஞ்ச ஊழல்கள் இன்றி மக்களிடம் போய்ச் சேர்ப்பிக்கும் பிரயத்தனங்களில் ஈடுபட்டுள்ளோம். ஆனால் பழைய பழக்கங்கள் எங்கள் அலுவலர்கள் சிலரை விட்டுப் போவதாக இல்லை. வறியவர்களிடம் வலிந்தெடுக்கும் வக்கிர புத்தி கொண்டவர்களும் இருக்கத்தான் செய்கின்றார்கள்.

*இணக்கமான சூழல்*

வெளிநாடுகளிலிருந்து இங்கே வந்திருக்கும் உங்களில் பலரும் எமது மக்களுக்கு உதவுவதற்கு ஆயத்தமாக உள்ளதை நான் அறிவேன். எனினும் இவ்விடயங்களை ஒழுங்குபடுத்தி வெளி நாடுகளிலிருந்து கிடைக்கப்பெறுகின்ற நிதிகளை உண்மையில் தேவையுள்ள எமது மக்களுக்கு முழுமையாக எடுத்துச் செல்லும் நடவடிக்கைகளில் நாங்கள் ஈடுபட்டபோது முந்திய அரசினால் பல தடைகள் விதிக்கப்பட்டன. இப்போது சற்று இணக்கமான சூழல் தென்படுகின்றது. ஆனாலும் முழுமையான அங்கீகாரம் இதுவரை கிடைக்கப் பெறவில்லை.


முதலமைச்சர் நிதியம் உருவாக்கப்பட்டு விடுமேயாயின் உங்கள் அனைவரிடமும் எமது தேவைகள் குறித்து விண்ணப்பிக்க எம்மால் முடியும். நீங்களும் தாராள மனதுடன் உதவி புரியலாம். அண்மையில் இங்கிலாந்தில் தமிழ் சகோதர சகோதரிமார் என்னிடம் வெளிநாட்டுப் பணத்தை நீட்டினார்கள். நான் ஏற்றுக் கொள்ளவில்லை. பணமானது சட்டப்படி வரவேண்டும் என்பது எனது விருப்பம்.

ஆகவே உங்கள் பணத்தை இலங்கையில் எவருனுக்கேனும் அனுப்புங்கள். அவர்களை இலங் கைப் பணம் மூலம் எமக்கு அனுப்பச் சொல்லுங்கள். நாங்கள் ஏற்று நீங்கள் விருப்பப்படும் செயற்பாடுகளை செவ்வனே செய்வோம் என்று கூறினேன். சிலர் அவ்வாறு செய்யத் தொடங்கி விட்டார்கள்.

*நாட்டாண்மை முறை வழக்கொழிய வேண்டும்*

பிரதேச சபைகளையும் நகர சபைகளையும் நிர்வகிக்கக்கூடிய உறுப்பினர்களை தெரிவு செய்வதற்கான தேர்தல்கள் மிக விரைவில் நடைபெற இருக்கின்றன. தற்போது அவை வழக்கொழிந்து நிற்கின்றன. இந்தத் தேர்தல்களில் எமது பாரம்பரிய 'நாட்டாண்மைமுறை' தெரிவுகள் தவிர்க்கப்பட்டு பிரதேச சபை – நகர சபை அல்லது மாநகர சபை நிர்வாக முறைமையைக் கற்றுத் தேர்ந்தவர்களும் அல்லது கற்றுத் தேற முடிந்தவர்களும் மற்றும் நேர்மையாகச் செயற்படக் கூடியவர்களும், விலை போகாதவர்களும், ஊழல் – இலஞ்சத்திற்கு இடமளியாதவர்களும் ஜனநாயக முறையில் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்.

எந்தக் கட்சியாக இருந்தாலும் மக்கள் நலம் சார்ந்த – படித்த – தன்னலமற்ற சேவையை மக்களுக்குக் கொடுக்கக்கூடிய பிரதிநிதிகளையே நாங்கள் தேர்ந்தெடுக்க வேண்டும். எங்கள் கட்சி என்பதால் அவர் எப்படிப்பட்டவர் என்றாலும் எம்மால் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும் என்ற நிலை ஏற்படக் கூடாது.



*படித்தவர்கள் வேண்டும்*

பிரதேச சபைகளுக்குத் தேர்ந்தெடுக்கப்படுபவர்கள் படித்தவர்களாக இருக்க வேண்டும். படியாத சிலர் அண்மைக் காலங்களில் 'நாங்கள் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள். நாங்கள் எதையும் செய்யலாம்' என்று படித்த, பண்புள்ள செயலாளர்களுக்குக் கூறி, அந்தச் செயலாளர்கள் அப்பேர்ப்பட்டவரின் கோரிக்கைகளை மறுத்ததால் குறித்த நபர்கள் அடிதடியில் இறங்கவும் பின்னிற்கவில்லை. சட்டத்தில் இடமிருக்கின்றதா என்று பார்க்க அவர்களுக்கு அறிவு குறைவு. எனவே 'நான் சொன்னால் அவர் செய்ய வேண்டும்' என்று ஆணவத்துடன் கூறத் தலைப்பட்டு விட்டார்கள்.

இரண்டு நாள்களுக்கு முன்னர் சில ஊழியர்கள் என்னைப் பார்க்க வந்தார்கள். அவர்களை உள்ளெடுக்க தற்போதிருக்கும் சட்டத்தில் இடமில்லை. இதைக் கூறினால் அவர்களின் பதில் 'சேர்! நீங்கள் எடுங்கள் என்று சொன்னால் அவர்கள் எடுக்கத்தான் வேண்டும்! நீங்கள் ஆணையிடுங்கள்' என்று கூறினார்கள். இதுதான் வடமாகாண சபை வரமுன் இருந்த சூழல். அதனை எங்களிடமும் எதிர் பார்க்கின்றார்கள் மக்கள்.

உறுப்பினர்களுக்கும் விளங்கவில்லை சட்ட திட்டங்கள், சுற்றறிக்கைகள், காரியாலயப் பழக்க வழக்கங்கள் எதையுமே ஏற்காமல் தான்தோன்றித்தனமாக நாங்கள் நடந்து கொள்ள வேண்டும் என்று எதிர் பார்க்கின்றார்கள். இதில் விசித்திரம் என்னவென்றால் எமது வடமாகாணசபை உறுப்பினர்கள் சிலர் கூட இதே போலத்தான் கருத்துத் தெரிவிக்கின்றார்கள். சட்டத்திற்கு அமைவாக நடக்க வேண்டும் என்றால் முன்னர் எவ்வாறு செய்தார்கள் என்று கேள்வி கேட்கின்றார்கள். ஆகவே கல்வியறிவின் முக்கியத்துவத்தை இதிலிருந்து உணர்ந்து கொண்டிருப்பீர்கள்.

*சிறப்பானவர்கள் வேண்டும்*

125 ஆவது ஆண்டு நிறைவை கொண்டாடுவதற்கு இன்று பல்வேறு நாடுகளிலும் இருந்து எவ்வாறு பெருந் தொகைப் பணத்தை செலவழித்து இங்கே வந்திருக்கின்றீர்களோ அதேபோல் எதிர் வரும் தேர்தல் காலத்திலும் இங்கே வந்து உங்கள் பகுதிக்குரிய பிரதேச சபை, நகரசபை, மாநகரசபை உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான முயற்சிகளில் முன்னின்று உழைக்க வேண்டும். படித்தவர்களையும் – பண்புள்ளவர்களையும் – ஊழல் அற்றவர்களையும் தேர்ந்தெடுக்க உதவி புரிய வேண்டும்.

அதுமட்டுமல்லாது நீங்கள் சார்ந்த கட்சிகளில் மிகச் சிறப்பானவர்களைப் போட்டியிட வைப்பதற்கு நீங்கள் பாடுபட வேண்டும். எமது தற்போதைய 'நாட்டாண்மை' ஆட்சி முறைமை நீக்கப்பட வேண்டும். அப்போது தான் இந்த நாட்டில் எமது மக்களுக்கு ஒரு பூரண விடிவு கிடைக்கும். வன்முறை மூலம் நிர்வாகம் நடந்த காலம் மலையேறிவிட்டது என்பதை மக்கள் உணர வேண்டும்.

*பணத்தால் வாக்கு வாங்கினர்*

தற்போது நடந்து முடிந்த தேர்தலின் போது கோடி கோடியாகப் பணம் செலவழிக்கப்பட்டது. பணத்தைச் செலவழித்தவர்கள் எவ்வாறு தாம் செலவழித்ததை இனி ஈடு செய்ய முடியும் என்பதிலேயே கண்ணுங் கருத்துமாக இருக்கின்றார்கள். சிலர் பணம் தந்த நிறுவனங்களுக்கு எவ்வாறு விசுவாசமாய் நடந்து கொள்ள வேண்டும் என்ற எண்ணத்தில் இருக்கின்றார்கள்; பணம் செலவழித்து வாக்குகளை வாங்கும் அண்மைக்கால பழக்கங்களை நாங்கள் இனியாவது கைவிட வேண்டும்.

இப்போது எமக்கு அத்தியாவசியமாகத் தேவைப்படுவது ஒழுங்கானதும் – வினைத்திறன் மிக்கதும் – விலைபோகாததும் – நேர்மையானதுமான ஒரு அரசியற் கட்டமைப்பாகும். அவ்வாறான ஒரு கட்டமைப்பை உருவாக்குவதன் மூலமாகவே எமது பணிகளை விரைவுபடுத்தி எமது மக்களின் வாழ்க்கைத் தரத்தை ஓர் உயர் நிலைக்கு கொண்டு வர முடியும்.

*நான் அரசியல்வாதி இல்லை*

என்னைப் பலரும் ஒரு 'எதிர்ப்பு அரசியல் வாதி' என்று வர்ணிப்பதை நான் அறிவேன். நான் ஒரு அரசியல்வாதியும் இல்லை. கட்சி சார்ந்தவனும் இல்லை. நீதித்துறையில் எனது காலத்தைக் கழித்த பின்னர் சிவனே என்று ஆன்மீகத்துடனும், இலக்கியத்துடனும், சட்டத்துடனும் மூழ்கியிருந்த என்னை வலுக்கட்டாயமாக இழுத்து வந்தார்கள். தேர்தலில் போட்டியிட வைத்தார்கள். மக்களும் தங்கள் வாக்குகளைப் பெருவாரியாக எனக்கு அளித்து அமோக வெற்றியடையச் செய்தார்கள். அதனால் என் நிலை மாறியது.

தினமும் என்னைச் சந்திக்க வருகின்ற மக்கள் படுகின்ற அவலங்கள் பற்றி, அவர்களுடைய கஷ்டங்கள் பற்றி, அவர்களுடைய தேவைகள் பற்றி, அவர்கள் பறிகொடுத்த செதிகள் பற்றி, அவர்கள் வாழ்வில் இழந்தவை பற்றித் தமது சோகக் கதைகளை எனக்கு எடுத்துக் கூற என்னுள் ஒரு வைராக்கியம் பிறந்தது. இந்த மக்களுக்கு என்னால் முடிந்த அனைத்து உதவிகளையும் எந்த மட்டத்திலாவது சென்று பெற்றுக் கொடுக்க வேண்டும் என்று.

*குறையைச் சொன்னதால் எதிர்ப்பு அரசியல்வாதி*

அதற்காக நான் எவ்வாறான எதிர்ப்பை அல்லது பழிச்சொல்லை ஏற்க நேர்ந்தாலும். நான் அதைப் பற்றி கவலைப்படப் போவதில்லை. சில கட்சிகளில் ஒருவர் – இருவர் எடுக்கும் முடிவுகளுக்கு எல்லோருமே கட்டுப்பட வேண்டும் என்று எதிர்பார்க்கின்றார்கள். அவர்களின் முடிவுகளில் குறையிருந்து எடுத்துக் காட்டினால் 'எதிர்ப்பு அரசியல் வாதி' என்கின்றார்கள்.

ஆகையால்தான் நீங்களும் இது பற்றி நன்றாகச் சிந்தியுங்கள். எது நல்லது என்று நம்புகின் றீர்களோ அதனை வலுப்பெறச் செய்வதற்கு எல்லா முயற்சிகளையும் மேற்கொள்ளுங்கள்! அவ்வாறான செயல்களுக்கான அத்திவா ரங்கள் இப்போதிருந்தே இடப்பட்டு திட்டமிட்ட முறையில் மிகச் சிறப்பான சபைகளை எதிர்வரும் தேர்தல்களில் உருவாக்குவோம். அத்துடன் எங்கள் மக்களுக்கு ஒரு நிரந்தர தீர்வைப் பெற்றுக் கொடுப்பதற்கு நாம் அனைவரும் ஒன்றாக இணைந்து பாடுபடுவோம் – என்றார். (ற–5,ரி5)

மரண அறிவித்தல்

**திருமதி மங்களகுமாரி தவச்செல்வம்**

சுழிபுரத்தை பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மங்களகுமாரி தவச்செல்வம் நேற்று (27.09.2015) ஞாயிற்றுக்கிழமை இந்தியாவில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தசாமி பொன்னாச்சி தம்பதிகளின் பாசமிகு மகளும் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் அன்னமுத்து தம்பதியரின் பாசமிகு மருமகளும், சுப்பிரமணியம் தவச்செல்வத்தின் அன்பு மனைவியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக் கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்,

தகவல் :-
அ. பாலசுப்பிரமணியம்
(பாலையா மாஸ்டர்)

[illegible]புரம். 0777 592666

## ஜனாதிபதி மைத்திரிபாலவிடம் மனக்குறைகளை கூறிய கீதா

கொழும்பு, செப்.28
சினிமா நடிகையும், நாடாளுமன்ற உறுப்பினருமான கீதா குமாரசிங்க அண்மையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவைச் சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

இரகசியமாக அரசியல் பேசும் நோக்கத்துடன் தாம் ஜனாதிபதியைச் சந்திக்கவில்லை எனவும் தமது மனக்குறைகளை தெரிவிக் கும் வகையிலேயே சந்தித்து கலந் துரையாடல்களில் ஈடுபட்டதாகவும் கீதா குமாரசிங்க தெரிவித்துள்ளார்.

[illegible] உறுப்பினர் கீதா குமாரசிங்கவுக்கு எதி ராக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்று பதிவு செய்யப்பட்டுள்ளது. அவரது இரட்டைக் குடியுரிமை தொடர்பிலேயே பொலிஸ் மா அதிபர் என்.கே.இளங்ககோனிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்தநிலையில் இதுதொடர்பில் பொலிஸ் தலைமையகத்தின் விசேட விசாரணைப் பிரிவின் பணிப்பாளர் பொலிஸ் அத்தியட் சகர் மெவன் டி சில்வா, தலைமையில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று கூறப்படுகின்றது. அத்துடன் பொலிஸார் இது குறித்து தேர்தல்கள் ஆணையாளர் மற்றும் குடிவரவு குடியகல்வு கட்டுப்பாட் டாளரிடம் அறிக்கைகளை கோரி யுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ந)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகிந்த வழங்கிய காசோலை வங்கிக் கணக்கில் பணமில்லாது திரும்பியது

## ஒலுவில் துறைமுகத்தால் காணி இழந்தோர் சங்கத்தின் தலைவர் குற்றச்சாட்டு

கொழும்பு, செப்.28

பணம் இல்லாத வங்கிக் கணக்கின் காசோலையை வழங்கி முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தங்களை ஏமாற்றிவிட்டார் என்று ஒலுவில் துறைமுகத்தால் காணி இழந்தோர் சங்கத்தின் தலைவர் எம்.ஐ. பழீலுல்லாஹ் தெரிவித்துள்ளார்.

2013 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் முதலாம் திகதி முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவால் ஒலுவில் துறைமுக நிர்மாணப் பணிகளின் போது காணி இழந்தோருக்கு இழப்பீடாக ஒரு தொகைப் பணம் காசோலையாக வழங்கப்பட்டிருந்தது.

எனினும், குறித்த காசோலைக்குரிய வங்கிக் கணக்கில் பணம் இல்லையென காசோலை திரும்பிவிட்டது என்று பாதிக்கப்பட்டவர்கள் குற்றம் சுமத்துகின்றனர்.

இந்தநிலையில் குறித்த விடயம் தொடர்பில் கருத்து வெளியிட்டுள்ள ஒலுவில் துறைமுகத்தினால் காணி இழந்தோர் சங்கத்தின் தலைவர் எம்.ஐ. பழீலுல்லாஹ் தெரிவித்துள்ளதாவது:-

ஒலுவில் துறைமுக நிர்மாணப் பணிகளுக்காக ஒலுவில் கரையோரக் கிராமத்தைச் சேர்ந்த 48 குடியிருப்பாளர்களின் 63 ஏக்கர் காணி 2008 ஆம் ஆண்டு சுவீகரிக்கப்பட்டது.

ஒரு பேர்ச் காணிக்கு 20 ஆயிரம் ரூபா இழப்பீடு என்ற மதிப்பீட்டின் அடிப்படையில் காணி இழப்பீடு வழங்கத் தீர்மானித்ததன் பிரகாரம் ஒரு தொகைப் பணம் காசோலையாக 2013 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் முதலாம் திகதி அப்போதைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவால் தரப்பட்டது.

ஆனால், அந்தக் காசோலையை வங்கியில் பணமாக மாற்ற முற்பட்டபொழுது அது காசு இல்லாத வங்கிக் கணக்கு என காசோலை திரும்பி வந்தது. இது எங்களுக்குப் பெருத்த அவமானமாகவும் ஏமாற்றமாகவும் இருந்தது.

அதன் பிற்பாடு இது விடயமாக அட்டாளைச்சேனைப் பிரதேச செயலாளரிடம் முறையிட்டதற்கிணங்க அம்பாறை மாவட்ட அரச அதிபர் தலைமையில் துறைமுக அதிகார சபைக்கும் துறைமுகத்தால் காணி இழக்கப்பட்ட குடியிருப்பாளர்களுக்குமிடையில் ஒரு பேச்சு இடம்பெற்றது.

அதன் பின்னர் காணியிழந்த 48 பேரில் 32 பேருக்கு காணியிழப்பு மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டு அவர்களில் 20 பேருக்கு நட்டஈடு வழங்கப்பட்டது. மதிப்பீடு செய்யப்பட்டவர்களில் மேலும் 12 பேருக்கும் மதிப்பீடு செய்யப்படாத 16 பேருக்குமாக மொத்தம் 28 பேருக்கும் இதுவரையில் எந்த நட்ட ஈடும் கிடைக்கவில்லை.

ஒட்டுமொத்தத்தில் இந்தத் துறைமுகத் திட்டம் இங்கு கொண்டுவரப்பட்டதால் எமது வசிப்பிடம், காணி, தொழில், வாழ்க்கை எல்லாமும் பறி போனதுடன் இப்பொழுது கடலரிப்பால் நாளுக்கு நாள் எமது கிராமமும் அழிந்து போகக் கூடிய சூழ்நிலை உருவாகி விட்டிருக்கின்றது.

தற்போதைய நல்லாட்சியில் எமது இழப்புக்களுக்கு ஒரு முடிவு வேண்டும். உலகிலேயே கப்பல் வராத ஒரு துறைமுகத்தை இங்கு வைத்திருந்து மக்களின் வாழ்க்கைக்குப் பங்கம் விளைவிப்பதா என்பது பற்றி இந்த அரசு சிந்திக்க வேண்டும். – என்று தெரிவித்துள்ளார். (ற)

# சர்வதேச எழுத்தறிவு வேலைத் திட்டத்தின் சிறுவர்களுக்கான உதவி வழங்கும் நிகழ்வு

யாழ்ப்பாணம், செப்.28

கோப்பாய்ப் பிரதேச செயலகத்தின் சர்வதேச எழுத்தறிவு வேலைத்திட்டத்தின் சிறுவர்களுக்கான உதவி வழங்கும் நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை கோப்பாய்ப் பிரதேச செயலர் ம.பிரதீபன் தலைமையில் நடைபெற்றது. வாழ்வெழுச்சித் திணைக்களத்தின் மாணவர்களின் பயணம் என்ற பொருளிலான இந்தத் திட்டத்தில் தாய் தந்தையரை இழந்த அல்லது நோய் காரணமாக தொழிலற்று வறுமையில் உள்ள பெற்றோர்களைக் கொண்ட குடும்பத்தில் கல்வியில் ஊக்கமுடன் ஈடுபாடு கொண்டுள்ள பிள்ளைகளுக்கு அவர்களின் கல்விக்கு உதவும் வகையிலான ஒத்துழைப்புக்களை வழங்க முன்வந்த நலன்விரும்பிகளால் கல்விக்கான நிதியுதவிகள் வழங்கப்பட்டன.

வங்கியூடாக வழங்கப்படும் இந்த உதவிக்கான வங்கிக் கணக்குப் புத்தகங்களை வாழ்வெழுச்சி அபிவிருத்தித் திணைக்களத்தின் மாவட்டப் பணிப்பாளர் க.மகேஸ்வரன், கோப்பாய் பிரதேச செயலர் ம.பிரதீபன் மற்றும் விருந்தினர்கள் வழங்கினர்.

இந்த முறை நாற்பது மாணவர்களுககுக் கல்விக்கான மாதாந்த உதவித் தொகையை வழங்கி உத்வ கோப்பாய் பிரதேசத்துக்குட்பட்ட நல்லெண்ணம் கொண்ட பொதுமக்களும் கோப்பாய் பிரதேச செயலகத்தில் கடமையாற்றும் ஊழியர்களும் முன்வந்துள்ளனர். கோப்பாய்ப் பிரதேச செயலர் ம.பிரதீபன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வாழ் வெழுச்சி அபிவிருத்தித் திணைக்கள மாவட்டப் பணிப்பாளர் க.மகேஸ்வரன் கலந்து கொண்டார்.

அங்கு கருத்துத் தெரிவித்த அவர்,

உங்கள் கல்வி உயர்நிலை எய்த வேண்டும் என்ற நல்ல நோக்கத்துடன் மாணவர்களுக்கான உதவிகளை வழங்க முன்வந்த தாபரிப்புப் பெற்றோரின் உள்ளம் பெருமைப்படக்கூடியதாக உதவி பெறும் ஒவ்வொரு மாணவர்களும் அவர்களது பெற்றோர்களும் கல்விச் செயற்பாடுகளில் மிகுந்த உற்சாகத்துடன் ஈடுபட்டு உதவியாளர்களை மகிழ்ச்சியில் வைத்திருக்க வேண்டும் எனவும் நீங்கள் நல்ல நிலையை எட்டுவதன் மூலம் எதிர்காலத்தில் இது போன்ற உதவிகளை மாணவர்களுக்கு வழங்கி உதவ வேண்டும். – என்றார். (ற-7)

# 10 வயது சிறுவன் கொலை: சந்தேக நபருக்கு மறியல்

## தந்தையுடனான முரண்பாடே கொலைக்குக் காரணம்!

கொழும்பு, செப்.28

அத்துருகிரிய பனாகொட பகுதியில் 10 வயது சிறுவனை வெட்டிக் கொலை செய்த சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

குறித்த சந்தேகநபர் ஹோமாகம நீதிவான் முன்னிலையில் முற்படுத்தப்பட்டபோது சந்கேநபரை எதிர்வரும் 7ம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்டுள்ள 50 வயத்தான குறித்த நபர் கடுவலை கொத்தலாவல பகுதியைச் சேர்ந்த ஒருவர் எனத் தெரியவந்துள்ளது.

பியகம பகுதியில் வைத்து நேற்று முன்தினம் சந்தேகநபர் கைது செய்யப்பட்டிருந்தார். சிறுவனின் தந்தையுடன் ஏற்பட்ட முரண்பாடே கொலைக்குக் காரணம் என தெரியவந்துள்ளது என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் குறிப்பிட்டுள்ளது. கொலைக்கு பயன்படுத்தப்பட்ட ஆயுதமும் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, குறித்த ஆயுதத்தை காட்டுவதற்காக சந்தேகநபர் தான் ப்ணிபுரிந்த தொழிற்சாலைக்கு அழைத்துச் செல்லப்பட்ட போது, கீழே விழுந்ததில் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ற)

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
021 493 1111

## கண்ணீர் அஞ்சலி



எமது கழக ஆர்வலரான
சி. தவராசா அவர்களின்
அன்புத் தாயார்

**திருமதி கனகம்மா சின்னத்துரை**

அவர்கள் 26.09.2015 காலமான செய்தி அறிந்து துயரடைவதோடு அன்னாரின் குடும்பத்துக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு ஆத்மா இறைவனடி சேரப் பிரார்த்திக்கின்றோம்.

கொக்குவில் வளர்மதி முன்னேற்றக் கழகம்
சம்பியன் லேன், கொக்குவில்.

(10.17)

## நீங்கா நினைவில் எட்டாண்டுகள்



| கண்மகிழ | கண்நெகிழ |
|---|---|
| 03 | 27 |
| 04 | 09 |
| 1978 | 2007 |

**அமரர் கோபாலபிள்ளை சுபாஸ்கரன் (சுபாஸ்)**

திதி : பிரதமை (28.09.2015)

நாவிரண்டு வருடங்கள் எமைக்கடந்தாலும் என்றும்
நாவிலே உந்தன் நாமம் அழியாத கோலமாக
நீள்துயில் கொண்டவனே நித்தமும் - உன்
நினைவை சுமந்து வாடுகின்றோம்
நிஜமான உன் நிழலைத் தேடுகின்றோம்.

கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

என்றும் உந்தன் நினைவுகளுடன்
குடும்பத்தினர்.
(வேலணை மேற்கு)

## மரண அறிவித்தல்

### வைத்திலிங்கம் தில்லையம்பலம்

(உரிமையாளர் - K.T.C Kilinochchi Trading Company)



நெடுந்தீவு மேற்கைப் பிறப்பிடமாகவும், பரவிப் பாஞ்சான் கிளிநொச்சியை நிரந்தர வசிப்பிடமாகவும், தற்போது வைத்தியசாலை முன்பாக இல.07, ஆனந்தபுரம், கிளிநொச்சியை வசிப்பிடமாகவும் கொண்ட வைத்திலிங்கம் தில்லையம்பலம் 26.09.2015 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் கோமளத்தின் (தில்லையம்பலம் ரீச்சர், ஓய்வு பெற்ற ஆசிரியர், கிளிநொச்சி மகா வித்தியாலயம்) அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் - சின்னம்மா தம்பதிகளின் பாசமிகு மகனும், காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - வேலாசிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும், சிவகுமாரி (லண்டன்), Dr.சிவகுமார் (விரிவுரையாளர் மொரட்டுவ பல்கலைக்கழகம்), சிவரூபி (லண்டன்), சிவலோஜினி (மீள் குடியேற்ற அமைச்சு - கொழும்பு) ஆகியோரின் பாசமிகு தந்தையும், பிரபாகரன் (லண்டன்), Dr.கிருபாலினி (களுபோவில போதனா வைத்தியசாலை - கொழும்பு), சேகரன் (லண்டன்), அதிரதன் (விரிவுரையாளர் கொழும்புப் பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களான பசுபதிப்பிள்ளை, காமாட்சி மற்றும் கற்பகம் காலஞ்சென்ற பூரணம் மற்றும் செல்லம்மா, காலஞ்சென்றவர்களான தனுக்கோடி, கணபதிப்பிள்ளை மற்றும் இராசம்மா, காலஞ்சென்ற வள்ளிப்பிள்ளை மற்றும் கோவிந்து, காலஞ்சென்ற தியாகராஜா ஆகியோரின் அன்புச் சகோதரரும், பிரஷா, பிரமிஷா, சிவானி, சிவானுஜன், பிரனித்தா, பிரணவன், பிரணவி ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 29.09.2015 செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மு.ப 9.00 மணியளவில் தகனக்கிரியைகளுக்காக திருநகர் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் :-
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### திருமதி அமிர்தநாயகி (செல்வராணி) அந்தோனிப்பிள்ளை



உயரப்புலம் ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அமிர்தநாயகி (செல்வராணி) அந்தோனிப்பிள்ளை 25.09.2015 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் வரப்பிரகாசம் அந்தோனிப்பிள்ளையின் (ராசு) அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சிமியோன் ஞானப்பிரகாசம் - பார்பரம்மா தம்பதியரின் சிரேஷ்ட புதல்வியும், காலஞ்சென்றவர்களான வரப்பிரகாசம் பொன்னுத் துரை மேரியோசேப்பின் தம்பதியரின் அன்பு மருமகளும், றிபினெக் (சூரியன் - கனடா) அன்ரன் டோமினிக் (சந்திரன் - இலங்கை) ஆஷா (யூட்டி - சுவிஸ்) மேரி சுலேக்கா (லண்டன்) மேரிநிர்மலா (இலங்கை) ஆகியோரின் அன்புத்தாயும், பவா (கனடா) காஞ்சனா (இலங்கை) உதயகுணசீலன் (சுவிஸ்) காலஞ்சென்ற டன்ஸ்ரன் (லண்டன்) ஜீவச்சந்திரன் (இலங்கை) ஆகியோரின் அன்பு மாமியும், அபிநாஸ் (கனடா), சுஜீவன் (சுவிஸ்), சுயந்தன் (சுவிஸ்), றுஷானா (இலங்கை), மதுஷன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் நல்லடக்கம் ஆனையூர் புனித அடைக்கல நாயகி ஆலயத்தில் 29.09.2015 செவ்வாய்க்கிழமை பி.ப 3.00 மணியளவில் இரங்கற் பலி ஒப்புக் கொடுக்கப்பட்ட பின்னர் காக்கைதீவு அடைக்கல நாயகி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

உயரப்புலம்,
ஆனைக்கோட்டை,
021 300 7016

(64966) (11.17)

தகவல்:
கணவர், பிள்ளைகள்,
மருமக்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வல்லிபுர ஆலய தேர் திருவிழாவில் நகை களவாடிய கும்பல் சிக்கியது

## 60 பவுண் நகைகள் மீட்பு: 5 பெண்கள் உட்பட 7 பேர் பொலிஸ் பிடியில்

யாழ்ப்பாணம், செப்.28

வல்லிபுர ஆழ்வார் ஆலய தேர் உற்சவத்தின் போது பக்தர்களிடம் இருந்து களவாடப்பட்ட 60 பவுண் தங்க நகைகளுடன் 5 பெண்கள் உட்பட 7 பேர் பருத்தித்துறை பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலை அடுத்தே சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும், சந்தேக நபர்கள் பயன்படுத்தியதாகக் கூறப்படும் ஹையஸ் வாகனமும் மீட்கப்பட்டுள்ளது என்றும் பருத்தித்துறைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட பெண்களிடம் பெண் பொலிஸார் மேற்கொண்ட சோதனையின்போது அவர்களின் உடைகளுக்குள் மறைத்து வைக்கப்பட்டிருந்த 27 சங்கிலிகளும், 3பதக்கங்களும் மீட்கப்பட்டுள்ளன. அவற்றில் 7 சங்கிலிகள் போலியானவை எனவும் பருத்தித்துறை பொலிஸார் தெரிவித்தனர்.

இவர்கள் கொள்ளையடித்த தங்க நகைகளுடன் ஹையஸ் வாகனத்தில் புறப்பட தயாரான நிலையிலேயே பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்கள் சிலாபம், புத்தளம், மற்றும் இந்தியாவைச் சேர்ந்தவர்கள் என்று விசாரணைகளில்தெரியவந் துள்ளது.

விசாரணைகளை அடுத்து நேற்று சந்தேகநபர்கள் பருத்தித்துறை நீதிவானின் வாசஸ்தலத்தில் முற்படுத்தப்பட்டனர். அவர்களை 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

(ந-109,ரி,422)

## அமெரிக்க

ளடக்கம் ஐ.நாவின் தொழில்நுட்ப உதவி, பாதுகாப்பு தரப்பினருக்கு எதிரான பரிந்துரை உள்ளிட்ட விடயங்களுக்கே அவர் கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளார். இவ்வாறான சரத்துகள் நீக்கப்பட வேண்டும் என்றும், அதன் பின்னரே தீர்மான வரைவு நிறை வேற்றப்பட வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கைக்கு ஆதரவாக அமெரிக்காவால் முன்வைக்கப்பட்டுள்ள பிரேரணை தொடர்பில் தமது நிலைப்பாட்டை தெளிவுப்படுத்தி நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே நாடாளுமன்ற உறுப்பினர் மஹிந்த மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அந்தஅறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:

"ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கைக்கு எதிராக தற்பேரது சமர்ப்பிக்கப்பட்டுள்ள அமெரிக்கப் பிரேரணையை வாக்கெடுப்புக்குச் செல்லாமல், இணக்கப்பாட்டுடன் ஏற்றுக்கொள்ள அரசு தீர்மானித்துள் ளது. இந்தத்தீர்மா னம் இலங்கைக்கு சாதகமானதாக அமையும்என்ற எண் ணத்தின் அடிப்படையிலேயே இவ்வாறானதொரு முடிவுக்கு அரசு வந்துள்ளது.

"இந்தப் பிரேரணை சபையில் சமர்ப்பிப்பதற்கு முன்னர் இடம்பெற்ற பேச்சின்போது, ஜெனிவாவிலுள்ள இலங்கைத் தூதுவர், இந்தப் பிரேரணையிலுள்ள பொய்யான போர்க் குற்றச் சாட்டுகள் தொடர்பில் கவனம் செலுத்தி, இலங்கையின் புதிய அரசு குறித்து சிந்தித்து, அதன்பிரவேசத்தை மாற்றியமைக்க வேண்டும் என விடுத்த கோரிக்கையை அமெரிக்கா உட்பட பிரேரணையை கொண்டுவரும் நாடுகள் ஏற்கவில்லை.

சமர்ப்பிக்கப்பட்டுள்ள இந்தப் பிரேரணையிலுள்ள பரிந்துரைகள்குறித்துப் பெரும் பிரச்சினைகள் உள்ளன. அவற்றில் சில விடயங்களை சுட்டிக்காட்டுகிறேன்.

01 ஆவது பரிந்துரை. " ஐ.நா மனித உரிமை ஆணையாளர் வழங்கிய வாய்மொழி அறிக்கை மற்றும் இலங்கை குறித்த ஐ.நா மனித உரிமை ஆணையாளர் பணியகத்தின் விசாரணை அறிக்கை என்பனவற்றை கவனத்தில் கொள்கிறோம். அதுமட்டுமல்ல, மனித உரிமைகள் ஆணையாளரின் அறிக்கையில் மிகவும் கருத்து வேறு பாட்டுக்கு வழிவகுக்கும் அனைத்த பரிந்துரைகளும் அமெரிக்கப் பிரேரணயில் நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய பரிந்துரைகளாக உள்ளடக்கப்பட்டுள்ளது.

04 ஆவது பரிந்துரையில், " நல்லிணக்கம்'கடந்தகால பிரச்சினைகள் மீள இடம்பெறா மல் இருத்தல் காணாமற் போனோர் குறித்த பணியகம் உள்ளிட்ட விடயங்கள் வரவேற்கப்படவேண் டியவை. பக்கச்சார்பற்ற நேர்மையான விசாரணைப் பொறிமுறைமை மற்றும் நீதிமன்றக் கட்டமைப்பின் மூலம் விசாரணைகள்நடத்தி பாதிக்கப்பட்டவர்களுக்குநியாயம் வழங்கப்பட வேண்டும். இதற்கு அனைத்துலக உதவிகளையும் ஐ.நா. மனித உரிமைஆணையாளர் பணியகத்தின்தொழில்நுட்ப உதவிகளையும் பெறலாம்.

06 ஆம் பரிந்துரை. " இந்தப் பரிந்துரைக்கமைய 'அரசால் பொய்யான யுத்த குற்றச்சாட்டுக்களை விசாரிக்க நீதிமன்ற பொறிமுறை ஒன்றை நிறுவ வேண்டும். இதற்கு வெளிநாட்டு நீதிப திகள், விசாரணையாளர்கள் மற்றும் சட்டத்தரணிகளையும் உள்வாங்க வேண்டும். மனித உரிமைகள் சபையின் தீர்மானத்தினூடாக உள்ளகப் பொறிமுறை இடம்பெறவுள்ளது என அரசு முன்னெடுக்கும் பிரசாரம் பொய்யானது என்பது இதனூடாகத் தெரிகிறது.

08 ஆவது பரிந்துரை. " இந்த பரிந்துரைக்கமைய மனித உரிமைகள் மீறியதாக சந்தேகிக்கப்படும் பாதுகாப்பு இராணுவத்தினரை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தி, சாட்சி இல்லாவிட்டால் நிர்வாக நடவடிக்கையினூடாக இராணுவத்திலிருந்து நீக்க வேண்டும்.

"இந்தப் பிரேரணை இலங்கைக்குச் சார்பான வகையில் கடினத் தன்மை குறைக்கப்பட்டுள்ளது எனப் பிரசாரம் செய்வதனூடாக அரசினூடாக எமது நாட்டுக்குள் பரப்பப்பட்டுவரும் கருத்துக்கு முற்றிலும் எதிரான திசைக்கு மேற்கூறப்பட்ட பரிந்துரைகள் அமைகின்றன என்பது தெளிவாகும்.

அரசு இந்தத் தீர்மானத்தை இணக்கப்பாட்டுடன் ஏற்று, மனித உரிமைகள் சபையில் ஏகமனதாக நிறைவேற்ற எதிர்பார்க்கு மாயின், இலங்கைக்கு ஆபத்தை ஏற்படுத்தும் இதுபோன்ற பரிந்துரைகளை நீக்கி, அந்தத் தீர்மானம் இலங்கை மக்களின் எதிர்பார்ப்புக்கமைய மாற்றியமைக்கப்பட வேண்டும்."? எனத் தெரிவித்துள்ளார். (ந-சி)

## சர்வதேசத்தை

காணப் பட்ட அதேவேளை, பொது நலவாய மற்றும் வெளிநாட்டு நீதிபதிகள், சட்டத்தரணிகள், விசாரணையாளர்கள் பற்றி குறிப்பிடப்பட்ட விடயங்கள் நீடிக்கின்றன.

சர்வதேசம் என்ற சொல் அகற்றப்பட்டதற்கும், தீர்மானம் மென்மையான வடிவம் பெற்றமைக்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வின் முயற்சிகளே காரணம். கடந்த திங்கட்கிழமை அவர் இது தொடர்பாக இலங்கைக்கான பிரிட்டனின் தூதுவருடன் கலந்துரையாடினார். இந்த சந்திப்பு அலரி மாளிகையில் இடம்பெற்றது.

அதன் பின்னர் அவர் ஜெனிவாவில் தற்போதுள்ள இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் அத்துல் கெசாப்புடன் உரையாடினார். இந்த தொலைபேசி உரையாடலில் இலங்கை வெளிவிவகார அமைச்சர் மற்றும் இலங்கைக்கான பிரிட்டனின் தூதுவர் ஆகியோரும் இணைந்துகொண்டனர்.

விசாரணைப் பொறிமுறை குறித்து குறிப்பிடும்போது சர்வதேச என்ற பதத்தை தவிர்ப்பது குறித்தே பிரதமர் ரணில் முக்கியமாக கவனம் செலுத்தினார்.

வெளிநாடு என்ற பதம் பயன்படுத்தப் பட்டதற்கான முன்னுதாரணங்கள் உள்ளன என்று அரச வட்டாரங்கள் வலியுறுத்தின. இதன் பின்னர் தமிழ் தேசியகூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் மீண்டும் ஜெனிவா சென்று ஐ. நாவுக்கான அமெரிக்காவின் பிரதி தூதுவர் சிசனை சந்தித்து உரையாடினார். இந்த பேச்சின் மூலம் இறுதித் தீர்மானம் குறித்த முடிவு எட்டப்பட்டது. சர்வதேசம் என்ற பதத்துக்கு பதில் வெளிநாட்டு என்ற பதம்மாற்றப்பட்டது. பொது நலவாய நீதிபதிகளும் ஏனையவர்களும், உள்வாங்கப்படுவதற்கான வழிபிறந்தது.

லண்டனுடனும், அமெரிக்காவுடனும் மேற்கொண்ட பேச்சின் போது பிரதமர் விக்கிரமசிங்க குற்றவாளிகளை விசாரணை செய்து தண்டிப்பதற் கான ஏற்பாடுகள் அரசமைப்பின் கீழ் உள்ளன. இதன் காரணமாக சட்டங்களில் மாற்றங்களை மேற்கொள்ள வேண்டியதில்லை என குறிப்பிட்டுள்ளார்.

செவ்வாய்க்கிழமை வெளியான இரண்டாவது நகல்வடிவே இறுதி தீர்மானமாகும். இதனை ஒரு மணிக்கு சமர்ப்பிக்க வேண்டும் என தெரிவிக்கப்பட்டிருந்த போதிலும் பல நாடுகளில் இடம்பெற்ற தீவிர தொலைபேசி உரையாடல்கள் காரணமாக அது மூன்று மணி நேரம் தாமதமானது.

அது ஜெனிவா நேரப்படி 17.17 மணிக்கு வெளியானது. இலங்கை அமெரிக்க பிரதிநிதிகள் மூடிய கதவுகளின் பின்னால் பேச்சு மேற்கொண்ட வேளை பதட்டமான நிலைகாணப்பட்டது என கொழும்பு தகவல்கள் மேலும் தெரிவித்தன.

(ந-வ)

## நேற்று

இன்னும் மூன்று நாள்களுக்கு மழை தொடரும் என வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது. வெப்ப நிலையில் மாற்றமில்லை என்றும் 34 பாகை செல்சியஸ் காணப்பட்டது என்றும் தெரிவிக்கப்பட்டது. மண் வெப்ப நிலை 48 பாகை செல்சியஸிலிருந்து வீழ்ச்சி அடைந்துள்ளது என்றும் வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

(ந-ரி4)

## சுகாதார

வைத்திய கலாநிதி தங்கமுத்து சத்திய மூர்த்தி கிளிநொச்சி மத்திய மகாவித்தியாலயத்தின் பழைய மாணவர், யா. பல்கலைக்கழக மருத்துவப் பட்டதாரியும் கொழும்பு பல்கலைக்கழக மருத்துவ நிர்வாகத் துறை முதுமாணிப் பட்டதாரியுமாவார்.

மேற்படி நியமனங்கள் உடனடியாக நடைமுறைக்குவரும் வண்ணம் சுகாதார அமைச்சின் செயலரால் வழங்கப் பட்டுள்ளது என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

(ந)

## உள்ளக

அவர் மேற்கண்டவாறு கூறினார்.

ஐ.நா மனிதவுரிமைகள் சபையில் இவ்விடயம் தொடர்பிலான அறிக்கையொன்று கொண்டுவர வேண்டும் என்று அமெரிக் காவிடம் ஏற்கனவே கலந்துரையாடப்பட்டது.

இலங்கையில் உள்ளக உண்மையைகண்டறியும் ஆணைக்குழுவொன்று உருவாக்கப்படும் என்று தெரிவித்திருந்தோம். அதில் மதத்தலைவர்களின் பங்களிப்புடன் கூடிய கருணை பேரவையொன்று உருவாக்கப்படும். இந்த விடயம் தொடர்பில் அமைச் சர் மங்கள சமரவீர ஜெனிவாவில் எடுத்துரைப்பார் " என்று பிரதமர் மேலும் தெரிவித்துள்ளார்.(ந-சி)

## அரச

எதிர்கொண்டுள்ளது என்று குறிப்பிட்டுள்ள நிதியமைச்சு, அதனை சீர்செய்ய வேண்டிய நிலை காணப்படுவதால் சம்பவ அதிகரிப்பு சாத்தியமற்றது என்றும் தெரிவித்துள்ளது.

அடுத்த நிதியாண்டுக்கான வரவு செலவுத் திட்டம், எதிர்வரும் நவம்பர் மாதம் 20ஆம் திகதி சமர்ப்பிக்கப்படவுள்ள நிலையில் தற்போது அதற்கான தயார்படுத்தல்களை நிதியமைச்சு மேற்கொண்டுள்ளது.

ஜனாதிபதியின் செலவினங்கள் மற்றும் பாதுகாப்பு அமைச்சுக்கான நிதிகளை குறைத்து மக்களுக்கு நிவாரணம் வழங்கவும் அபிவிருத்திப் பணிகளுக்கு செலவிடவும் அரசு நடவடிக்கை எடுத்துள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

அதேவேளை, வடக்கு கிழக்கு மக்களின் மீள்குடியேற்ற நடடிக்கைகளுக்கான நிதியொதுக்கீடு குறித்து கலந்துரையாடல்கள் நடைபெற்று வருகின்றன என்று அறியமுடிகின்றது.

வடக்கு கிழக்கு மாகாணங்களின் மீள்குடியேற்ற நடவடிக்கைகளுக்காக நிதியொதுக்கப்படவில்லை என்றும், குறித்த நடவடிக்கைகளை, மீள்குடியேற்ற அமைச்சுக்கென ஒதுக்கப்படும் நிதியிலேயே மேற்கொள்ளவேண்டும் எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

ஆயினும் இராணுவத்தினரின் குடும்பங்களுக்காகவென தனியாக நிதியொதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

மகிந்த அரசு உலக நாடுகளில் பெற்றுக்கொண்ட நிதியை திருப்பிச் செலுத்தாமையால், தற்போதைய அரசு பெரும் நிதி நெருக்கடியை எதிர்நோக்கியுள்ளது என்று தெரிவித்துள்ள நிதியமைச்சு, தற்போது குறைவடைந்து காணப்படும் அமெரிக்க பெறுமதியை அதிகரிப்பதன் மூலம் வெளிநாட்டு நிதியை பெறும் முனைப் பில் அரசு ஈடுபட்டு வருகின்றது என்றும் தெரிவித்துள்ளது. (ந)

## அமெரிக்கப்

தெரிவித்துள்ளார்.

கடந்த நாடாளுமன்ற தேர்தல் வெற்றியையடுத்து, இலங்கையின் தேசிய நல்லிணக்கத்திற்கு வலு சேர்க்கும் வகையில் ஆஸ்திரேலிய அரசு தொடர்ந்தும் இலங்கையுடன் ஒன்றிணைந்து செயற்படும் என்று ஜூலி பிஷொப் முன்னர் தெரிவித்திருந்தார்.

இலங்கை தொடர்பான அமெரிக்காவின் பிரேரணையானது கடந்த 24ஆம் திகதி பல திருத்தங்களுடன் ஐ.நா. சபையில் முன்வைக்கப்பட்டதோடு, குறித்த யோசனைக்கு இலங்கை அரசு பங்களிப்பு செய்யவுள்ளது என்றும் தெரிவித்திருந்தது. (ந)

## தமிழரின்

விசாரணை அறிக்கைக்கு இலங்கையின் தற்போதைய அரசு கொண்டுள்ள நேர்மறையான அணு குமுறையை வரவேற்ற பான் கீ மூன் விரைவில் அறிக்கையின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார். (ந-வ)

## சமந்தா

தொடர்பான தீர்மானம் சமர்ப்பிக்கப்படுவதற்கு முன்னர் இந்த சந்திப்பு இடம்பெற்றுள்ளது. சர்வதேச சமூகத்தின் பங்களிப்புடனான செயற்பாடுகளால் மாத்திரமே போரால் பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு நீதி கிட்டும் என சுமந்திரன் இந்த சந்திப்பின்போது குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை அரசு வலியுறுத்தும் வகையில் தீர்மானத்தின் இறுதி வடிவில் மாற்றங்களை மேற்கொள்ள வேண்டாம். அரசு வெறுமனே உள்நாட்டு பொறிமுறை மூலம் விசாரணைகளை மேற்கொள்ள தீர்மானித்தால் தமிழ் தேசிய கூட்டமைப்பு அதற்கு ஆதரவளிக்காது எனவும் சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

(ந)

## 2030 ஆம்

நிலையான அபிவிருத்தி என்பது ஒட்டுமொத்த உலக மக்களினதும் பொருளாதார, சமூக மற்றும் சுற்றாடல் பாதுகாப்பின் அடிப்படையிலானது.

எதிர்வரும் 2030ம் ஆண்டளவில் அனைத்து இலக்குகளையும் எட்டும் நோக்கில் இலங்கை அரசு நடவடிக்கைகளை முன்னெடுக்கும். வறுமையை இல்லாதொழித்து அனைத்து விதமான ஏற்ற இறக்கங்களையும் இல்லாமல் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

இயற்கை வளங்களை உச்சளவில் பாதுகாக்க வேண்டியது அவசியமானது. இயற்கை அனர்த்தங்களை எதிர்நோக்கும் வகையிலான 13ம் நிலையான அபிவிருத்தி இலக்குகளுக்கு பூரண ஒத்துழைப்பு வழங்கப்படும். - என்றார்.

(ந-வ)

## நேற்றிரவு

விக்கப்படவில்லை.

இலங்கை மின்சார சபையில் யாழ்.பிராந்திய அலுவலகத்துடன் இது குறித்து தொலைபேசியூடாகத் தொடர்பு கொள்ள முயன்ற போதும், தொடர்பை ஏற்படுத்த முடியவில்லை. (ந)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச விசாரணை என்பதிலிருந்து இந்தியா ஒருபோதும் பின்நகரக் கூடாது

## கலைஞர் கருணாநிதி வலியுறுத்து

சென்னை, செப். 28

குற்றம் சாட்டப்பட்டவரே குற்ற விசாரணையை நடத்துவது இயற்கை நீதியையே கேலிப் பொருளாக ஆக்கி விடும் என்பதால் தான், உலகத் தமிழ் அமைப்புகள் அனைத்தும் சர்வதேச விசாரணை வேண்டுமென்று வலியுறுத்தி வருகின்றன, எனவே இந்தக் கருத்திலிருந்து இந்திய அரசு பின்வாங்கக் கூடாது என்று தி.மு.க தலைவர் கலைஞர் கருணாநிதி வலியுறுத்தியுள்ளார்.

இந்தியாவைப் பொறுத்தவரை நாம் எப்போதும் இயற்கையாகவே நீதிக்கான விசாரணையை ஆதரிக்கிறோம். அத்துடன் இலங்கையின் இறையாண்மைக்கு மதிப்பளிக்கிறோம். இறுதி வரைவுத் தீர்மானம் வரும் போது அது ஏகமனதாக இலங்கை அரசால் ஏற்றுக் கொள்ளத்தக்க வகையில் இருக்க வேண்டும் என்று விரும்புகிறோம். இந்தியா கருத்துக் கூறுவது பாலுக்கும் காவல், பூனைக்கும் தோழன் என்பதைப் போல எவருக்கும் பயன்படாமல் போய்விடும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது:-

சர்வ தேசச் சட்ட விதிமுறைகள் அனைத்தையும் அவமதித்து, இலங்கையில் திட்டமிட்டு நடத்தப்பட்ட கடுமையான போர்க் குற்றங்கள் மற்றும் அப்பட்டமான மனித உரிமை மீறல்கள் பற்றி, ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் அலுவலகம் விசாரணை நடத்தி, அங்கே மனித உரிமை மீறல்களும், போர்க் குற்றங்களும் நடந்தது உண்மை தான் என்று உறுதி செய்ததை அடுத்து, ஜெனிவாவில் நடந்து வரும் ஐ.நா. மனித உரிமைகள் சபை 30ஆவது அமர்வில், மனித உரிமைகள் ஆணையாளர் அறிக்கையைத் தாக்கல் செய்தார்.

அந்த அறிக்கையில் இலங்கையில் நடைபெற்ற போர்க் குற்றங்கள் குறித்து, சர்வதேச நாடுகளின் நீதிபதிகளைக் கொண்ட சர்வதேச கலப்பு நீதிமன்றம் அமைத்து விசாரணை நடைபெற வேண்டுமென்று தெரிவித்திருந்தார். ஆனால் இலங்கை அரசு உள்நாட்டு விசாரணை மட்டும் தான் நடத்துவோம், இதில் சர்வதேச நீதிபதிகள் மற்றும் சட்ட வல்லுனர்களின் யோசனைகளை வேண்டுமானால் ஏற்றுக் கொள்வோம் என்றும் தெரிவித்து வருகிறது. வரும் 2016, ஜனவரி மாதத்தில் இந்த உள்நாட்டு விசாரணையைத் தொடங்கப் போவதாகவும் இலங்கை அரசு கூறியுள்ளது.



உள்நாட்டு விசாரணை நடத்தினால், அது பாரபட்சமற்ற, நடுநிலையான, விருப்பு வெறுப்பற்ற விசாரணையாக இருக்காது என்பதாலும் குற்றம் சாட்டப்பட்டவரே குற்ற விசாரணையை நடத்துவது இயற்கை நீதியையே கேலிப் பொருளாக ஆக்கி விடும் என்பதாலும் தான், உலகத் தமிழ் அமைப்புகள் அனைத்தும் சர்வதேச விசாரணை வேண்டுமென்று வலியுறுத்தி வருகின்றன.

இந்திய அரசும் பெரும் பாதிப்புக்காளான தமிழர்களுக்கு நீதி கிடைத்திட வேண்டுமென்ற உள்ளார்ந்த எண்ணத்தோடு, சுதந்திரமான, நம்பகத் தன்மையுள்ள சர்வதேச விசாரணை வேண்டும் என்பதற்கு ஆதரவாகக் குரல் கொடுக்க வேண்டுமென்றும், இந்தியாவே அதற்கானதொரு தீர்மானத்தை ஐ.நா. மனித உரிமைகள் சபையில் முன்மொழிய வேண்டுமென்றும் தொடர்ந்து தெரிவித்து வருகிறோம்.

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் அமெரிக்கா முதலாவது வரைவுத் தீர்மானத்தைத் தாக்கல் செய்த போது, இலங்கை மீது பல்வேறு குற்றச்சாட்டுகளைக் கூறியிருந்தது. அதற்கு இலங்கை அரசு கடும் எதிர்ப்புத் தெரிவித்ததோடு, அமெரிக்க அதிகாரிகள் கொண்ட குழுவுடன் இலங்கைக் குழுவினர் பேச்சுவார்த்தையும் நடத்தினர். இதனைத் தொடர்ந்து தற்போது, இறுதியாகத் திருத்தப்பட்ட வரைவுத் தீர்மானம் ஒன்றை ஐ.நா. மனித உரிமை கள் சபையில் அமெரிக்கா தாக்கல் செய்துள்ளது.

அதில் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் பரிந்துரைத்த சர்வதேச நீதிமன்றம் பற்றி எதுவுமே குறிப்பிடவில்லை என்பதால், அமெரிக்கா ஏற்கனவே மேற்கொண்டிருந்த நிலைப்பாட்டைத் தலைகீழாக மாற்றிக் கொள்ள வேண்டிய நெருக்கடி ஏன் ஏற்பட்டது என்ற கேள்வி எழுந்துள்ளது. போர்க்குற்றச்சாட்டுக்களை இலங்கையின் நீதித் துறை அமைப்பே விசாரிக்கலாம் என்றும், பொதுநலவாய நாடுகள் மற்றும் சர்வதேச நாடுகளைச் சேர்ந்த நீதிபதிகளும், வழக்கறிஞர்களும் இந்த விசாரணை அமைப்பிலே இடம் பெறலாம் என்றும் அமெரிக்கா தெரிவித்துள்ளது.

இந்தப் புதிய வரைவுத் தீர்மானத்தின் மீது விவாதம் நடத்தப்பட்டு, மேலும் திருத்தங்கள் செய்ய வாய்ப்புள்ளது. இறுதித் தீர்மானத்தின் மீது நாளை மறுதினம் ஐ.நா. மனித உரிமைகள் சபையில் வாக்கெடுப்பு நடைபெறவுள்ளது.

அமெரிக்காவின் நீர்த்துப் போன இந்த வரைவுத் தீர்மானத்துக்கு இந்தியா ஆதரவு தெரிவித்திருக் கிறது. இந்திய வெளியுறவுத்துறை செய்தித் தொடர்பாளர் விகாஸ் சுவரூப் கூறும்போது,

இந்தியாவைப் பொறுத்தவரை நாம் எப்போதுமே இயற்கையாகவே நீதிக்கான விசாரணையை ஆதரிக்கிறோம். அத்துடன் இலங்கையின் இறையாண்மைக்கு மதிப்பளிக்கிறோம். இறுதி வரைவுத் தீர்மானம் வரும் போது அது ஏகமனதாக இலங்கை அரசால் ஏற்றுக் கொள்ளத்தக்க வகையில் இருக்க வேண்டும் என்றும் விரும்புகிறோம் என்று கூறியிருக்கிறார். இவ்வாறு இந்தியா கருத்துக் கூறுவது பாலுக்கும் காவல், பூனைக்கும் தோழன் என்பதைப் போல எவருக்கும் பயன்படாமல் போய் விடும்.

இலங்கை சீனாவின் பக்கம் சாய்ந்து விடுமோ என்பதால், அமெரிக்கா இலங்கைக்கு ஆதரவான நிலை எடுத்திருக்கிறது என்றும், போர்க் குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் குறித்து நடுநிலை யான நியாயமான விசாரணை நடைபெற்று, குற்றம் புரிந்தோர் தண்டிக்கப்பட வேண்டுமென்பதில், அமெரிக்காவுக்கு ஆர்வம் மிகக் குறைவு என்றும் எழுந்துள்ள விமர்சனத்தை அப்படியே புறந்தள்ளி விடுவதற்கில்லை.

இந்த நிலையில், இந்தியா, அமெரிக்காவின் தீர்மானத்தை ஆதரித்திட முயற்சிப்பது, இலங்கையில் நடந்த இனப்படுகொலை, போர்க் குற்றங்கள், மனித உரிமை மீறல்கள் ஆகியவற்றுக்கு உரிய நீதி வழங்க மறுப்பதாக அமைந்து விடுவதோடு, உலகத் தமிழர்களின் உள்ளத்தில் ஆறாத வடுவாகவும் ஆகிவிடும் என்பதை உணர்ந்து, இதில் எச்சரிக்கையாக அடியெடுத்து வைத்திட வேண்டும் என்றே தமிழின ஆர்வலர்கள் அனைவரும் விரும்புகிறார்கள்.

எனவே இந்திய அரசு இலங்கைத் தமிழர் பிரச்சினையில் சர்வதேச விசாரணை வேண்டும் என்பதிலிருந்து சிறிதும் பின்வாங்கக் கூடாது என்பதைத் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் மீண்டும் ஒரு முறை அழுத்தம்திருத்தமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்- இவ்வாறு அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (ற-வ)

# சுயாதீன ஆணைக்குழுக்கள் நியமனத்தில் வெளிப்படைத்தன்மை மிகவும் அவசியம்

## *பவ்ரல் வலியுறுத்து*

கொழும்பு, செப்.28

சுயாதீன ஆணைக்குழுக்களுக்கான நியமனங்களின்போது வெளிப்படைத்தன்மை மிகவும் அவசியமானது என பவ்ரல் அமைப்பு, சபாநாயகர் கரு ஜயசூரியவிடம் கோரியுள்ளது. அத்துடன் அரசமைப்பு பேரவையில் சிவில் உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டமை வரவேற்கப்பட வேண்டியது எனவும், இதில் சபாநாயகரின் நடவடிக்கைகள் பாராட்டுக்குரியது என்வும் அந்த அமைப்பு குறிப்பிட்டுள்ளது.

19ம் திருத்தச் சட்டத்தின் அடிப்படையில் சுயாதீன ஆணைக்குழுக்களுக்கான உறுப்பினர்களை நியமனம் செய்ய விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன். இந்த நிலையிலேயே தேர்தல் கண்காணிப்பு அமைப்பான பவ்ரல் இந்தக் கோரிக்கையை, அரசமைப்பு பேரவையின் தலைவரான சபாநாயகரிடம் முன்வைத்துள்ளது.

சுயாதீன ஆணைக்குழுக்களுக்கான உறுப்பினர்களை நியமிக்கும் போது வெளிப்படைத்தன்மையுடன் உறுப்பினர்கள் நியமிக்கப்பட வேண்டியது மிகவும் அவசியமானது. இந்த நியமனங்கள் உரிய முறையில் மேற்கொள்ளப்படாது என தகவல்கள் கிடைக்கப்பெற்றுள்ளதாக பவ்ரல் அமைப்பின் பணிப்பாளர் ரொஹண ஹெட்டியாரச்சி தெரிவித்துள்ளார்.

கிரமமான அடிப்படையில் உறுப்பினர்கள் தெரிவு மேற்கொள்ளப்பட வேண்டுமெனவும் அவர் வலியுறுத்தியுள்ளார். (ற-வ)



பழைமையான பீரங்கி செலுத்தி ஒன்று காலி முகத்திடல் பகுதியில் இருந்து கைப்பற்றப்பட்டுள்ளது. ஹோட்டல் ஒன்றின் செயற்திட்டப் பணிகளின் நிமித்தம் குழி தோண்ட முற்பட்ட போதே இதனைக் கண்டு பிடித்துள்ளதாக இராணுவ ஊடகப் பேச்சாளர் குறிப்பிட்டுள்ளார். மேலும் செயற்திட்டப் பணிகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்த தனியார் நிறுவனம் ஒன்றின் ஊழியர்களே இதனைக் கண்டுபிடித்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (ற-வ)

# அரச சாட்சியாவதற்கு சஜின் வாஸ் இணக்கம்

## மகிந்தாவின் மோசடிகளை வெளிக்கொணர அரசு நடவடிக்கை

சென்னை, செப். 28

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவுக்கு எதிரான சாட்சியாளராக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சஜின் வாஸ் குணவர்தன மாறவுள்ளார் எனக் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இது தொடர்பில் அவை மேலும் தெரிவித்துள்ளதாவது–

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவுக்கு எதிரான நிதி மோசடி குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் விசாரணை நடத்தப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. இந்த முக்கிய விசாரணைகளில் அரச தரப்பு சாட்சியாளராக மாறுவதற்கு சஜின் வாஸ் குணவர்தன இணக்கம் வெளியிட்டுள்ளார். மகிந்த ராஜபக்ச ஆட்சிக் காலத்தில் இடம்பெற்ற பெரியளவிலான நிதி மோசடிகள் குற்றச் செயல்கள் தொடர்பிலான தகவல்களை வழங்க சஜின் முன் வந்துள்ளார். எதிர்வரும் சில வாரங்களில் கடந்த அரசின் முக்கிய பிரமுகர்கள் பலரிடம் விசாரணை நடத்தப்பட உள்ளதாக குற்றப் புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

நிதிக் குற்றவியல் விசாரணைப் பிரிவினால்சிலவிசாரணைகள்மேற்கொள்ளப்படவுள்ளன. இதன்போது மிக முக்கியமான கொடுக்கல் வாங்கல்களின்போது இடம்பெற்ற மோசடிகள் பற்றிய விபரங்களை சஜின் வாஸ் குணவர்தன வெளியிட உள்ளமை எதிர்பார்க்கப்படுவதாக அந்தச் செய்திகள் மேலும் தெரிவித்துள்ளன (ற–வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கின் வல்லவனானது சென்.மேரிஸ் கழுகுகளின் தொடரில் கில்லறியை வீழ்த்தி

கரணவாய், செப். 28

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் நெற்கொழு கழுகுகள் விளையாட்டுக் கழகம் வட மாகாண ரீதியாக நடத்திய வடக்கின் வல்லவன் கிண்ணத்துக்கான உதைபந்தாட்டத் தொடரில் சமநிலைத் தவிர்ப்பு உதையில் கில்லறியை வீழ்த்தி கிண்ணத்தைக் கைப்பற்றியது சென்.மேரிஸ் வி.கழகம்.




நேற்றுமுன்தினம் மின்னொளியில் இடம்பெற்ற இந்த இறுதியாட்டத்தில் மன்னார் கில்லறி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து நாவாந்துறை சென்.மேரிஸ் விளையாட்டுக் கழகம் மோதியது. மாகாண ரீதியிலான தொடரின் இறுதியாட்டத்துக்கு ஏற்ற முறையில் சற்றும் குறைவில்லாத வகையில் பார்வையாளர்கள் நிரம்பி வழிந்தனர். சென்.மேரிஸ் யாழ்பாண அணி என்பதனாலும் ஆட்டம் நடைபெற்றது யாழில் என்ற காரணத்தினாலும், சென். மேரிஸுக்கு சாதகமாகச் சற்று அதிகப்படியான பார்வையாளர்கள் வந்திருந்தனர். போட்டி ஆரம்பமானது முதல் பாதி. அவ்வளவு இலகுவில் கோல்கள் எதனையும் அனுமதிப்பதாயில்லை. பந்து அங்குமிங்குமாக அல்லாடித் திரிந்ததுதான் மிச்சம். 0:0 என்ற நிலையில் பந்தோடு சேர்ந்து உருண்டோடியது முதல் 45 நிமிடங்களும்.

இரண்டாம் பாதியிலும் இதேநிலைமை நீடிக்கும் என்று எதிர்பார்க்கப்பட்ட போதிலும் 13 ஆவது நிமிடத்தில் தன் தலையில் தானே மண்ணைக் கொட்டியது நர்வாந்துறை. நாவாந்துறையின் முறை தவறிய ஆட்டத்தின் காரணத்தினால் கில்லறிக்கு தண்டனை உதை வழங்கப்பட கோல் கணக்கு 1:0 என்று மாற்றம் பெற்றதுடன் கில்லறியின் ஆதிக்கம் ஆரம்பமானது. சென்.மேரிஸ் தாக்குதல் பாணியில் கில்லறி தாக்குதலுடன் இணைந்த தற்காப்புப் பாணியில். இறுதி நிமிடம் வரை மேரிஸால் பழி தீர்க்க முடியவில்லை. கில்லறியின் வெற்றி கிட்டத்தட்ட உறுதியாகியிருந்தது. கிண்ணம் மன்னாருக்கு செல்லப்போகின்றது என்று எதிர்பார்த்திருந்த வேளையில் ஆட்டம் நிறைவடைய 30 செக்கன்கள் இருக்கும் பொழுது வழக்கம்போல திரில் கோலை விளாசினார் யக்சன். நிமிடங்களுடன் இணைந்து ஆட்டமும் சமநிலையில் முடிந்தது. ஆனந்தக்கூத்தாடினார்கள் சென்மேரிஸின் ரசிகர்கள். இவ்வளவுக்கும் சென். மேரிஸ் வெற்றிபெறவில்லை. கோல் கணக்கு சமநிலையாக்கப்பட்டிருந்து தோல்வியில் இருந்து தற்காலிகமாகத் தப்பியிருந்தது அந்த அணி.

இருதயம் பலவீனமானவர்கள், முதியவர்கள், கர்ப்பிணிப் பெண்கள், குழந்தைகள் பார்க்கத் தடை என்பதைப்போல அமைந்திருந்த ஆட்டத்தின் சமநிலைத் தவிர்ப்பு உதைகளும் அதே போக்கில்தான். இறுதி வரை இழுபட்டு 5:4 என்ற கோல் கணக்கில் கிண்ணத்தில் பெயரைப் பொறித்தது சென்.மேரிஸ். ஆட்ட நாயகனாக மேரிஸின் ஜக்சன் தெரிவான அதேநேரம் தொடராட்ட நாயகனாக கில்லறியின் றஞ்சா தெரிவானார். சிறந்த நன்னடத்தை அணியாக கில்லறி விளையாட்டுக் கழகம் தெரிவுசெய்யப்பட்டது. வளர்ந்துவரும் வீரராக வல்வை ஆதிசக்தியின் கௌரிதாசனும் சிறந்த கோல்காப்பாளராக கில்லறி வீரர் சரத் பாபுவும் மக்கள் மனம் கவர்ந்த வீரராக மன்னார் சென். ஜோசப் அணியின் டிக்கோனியும் தெரிவு செய்யப்பட்டனர். பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்ட இந்தியத் துணைத் தூதுவர் அ.நடராஜன் கிண்ணங்களை வழங்கி வைத்தார். இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனத் தலைவர் அனுர டி சில்வா உட்படப் பலரும் குறித்த இறுதியாட்டத்தில் கலந்து கொண்டனர். (ம-108)



# பற்றிசியன்ஸ், பமிலியன்ஸ் அணிகளிடம் கிண்ணம்





யாழ்ப்பாணம், செப். 28

இலங்கை கூடைப்பந்தாட்டச் சம்மேளனத்தின் அனுசரணையுடன் யாழ். மாவட்ட கூடைப்பந்தாட்டச் சங்கம் பாடசாலைகளின் அணிகளுக்கும் கழக அணிகளுக்கும் இடையில் நடத்திய மூன்று நபர்கள் மட்டும் பங்கேற்கும் கூடைப்பந்தாட்டத் தொடரின் கழகங்களுக்கிடையிலான ஆட்டத்தில் ஆண்கள் பிரிவில் பற்றிசியன்ஸ் அணியும், பெண்கள் பிரிவில் பமிலியன்ஸ் அணியும் சம்பியன் ஆகின.

***பெண்கள் பிரிவு***

நேற்றுமுன்தினம் சனிக்கிழமை யாழ். மத்திய கல்லூரியின் கூடைப்பந்தாட்டத் திடலில் மின்னொளியில் இடம்பெற்ற பெண்களுக்கான இறுதியாட்டத்தில் பமிலியன்ஸ் அணியை எதிர்த்து இராமநாதன் அணி மோதிக் கொண்டது. இதில் பமிலியன்ஸ் அணி 11:8 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றி பெற்றது.

மூன்றாம் இடத்துக்கான ஆட்டத்தில் கே.கே.எஸ். 'ஏ' அணியை எதிர்த்து கே.கே.எஸ். 'பி' அணி மோதிக் கொண்டது. இதில் கே.கே.எஸ். 'ஏ' அணி 8:7 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்று மூன்றாம் இடத்தை தனதாக்கிக் கொண்டது.

***ஆண்கள் பிரிவு***

ஆண்களுக்கான இறுதியாட்டத்தில் பற்றிசியன்ஸ் அணியை எதிர்த்து சென்றலைட்ஸ் அணி மோதிக் கொண்டது. இதில் பற்றிசியன்ஸ் அணி 14:11 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்று சம்பியன் ஆனது.

மூன்றாம் இடத்துக்கான ஆட்டத்தில் யாழ்.பல்கலைக்கழக அணியை எதிர்த்து மல்லாவி அணி மோதிக் கொண்டது.

இதில் யாழ். பல்கலைக்கழக அணி 19:16 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்று மூன்றாம் இடத்தைத் தனதாக்கிக் கொண்டது. (ம-23)

# யாழ். இந்து, கொக்குவில் இந்து கூடைப்பந்தாட்டத்தில் சம்பியன்

யாழ்ப்பாணம், செப். 28



இலங்கை கூடைப்பந்தாட்டச் சம்மேளனத்தின் அனுசரணையுடன் யாழ். மாவட்ட கூடைப்பந்தாட்டச் சங்கம் பாடசாலைகளின் அணிகளுக்கும் கழக அணிகளுக்கும் இடையில் நடத்திய மூன்று நபர்கள் மட்டும் பங்கேற்கும் கூடைப்பந்தாட்டத் தொடரின் பாடசாலைகளுக்கிடையிலான ஆட்டத்தில் ஆண்கள் பிரிவில் யாழ். இந்துக்கல்லூரி அணியும், பெண்கள் பிரிவில் கொக்குவில் இந்துக்கல்லூரியின் 'பி' அணியும் சம்பியன் ஆகின.

***பெண்கள் பிரிவு***

நேற்றுமுன்தினம் சனிக்கிழமை யாழ். மத்திய கல்லூரியின் கூடைப்பந்தாட்டத்திடலில் மின்னொளியில் இடம்பெற்ற இந்த இறுதியாட்டத்தில் பெண்களுக்கான இறுதியாட்டத்தில் யாழ். இந்து மகளிர் கல்லூரி அணியை எதிர்த்து கொக்குவில் இந்துக்கல்லூரி 'ஏ' அணி மோதிக் கொண்டது. இதில் கொக்குவில் இந்துக்கல்லூரி 'ஏ' அணி 11:9 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றி பெற்று சம்பியன் ஆனது.

மூன்றாம் இடத்துக்கான ஆட்டத்தில் திருக்குடும்ப கன்னியர்மட அணியை எதிர்த்து கொக்குவில் இந்துக்கல்லூரி 'பி' அணி மோதிக்கொண்டது. இதில் கொக்குவில் இந்துக்கல்லூரி பி அணி 12:10 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்று மூன்றாம் இடத்தை தனதாக்கிக் கொண்டது.


***ஆண்கள் பிரிவு***

ஆண்களுக்கான இறுதியாட்டத்தில் யாழ். இந்துக்கல்லூரி அணியை எதிர்த்து கொக்குவில் இந்துக்கல்லூரி அணி மோதிக்கொண்டது. இதில் யாழ். இந்துக்கல்லூரி அணி 19:16 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்று சம்பியன் ஆனது.

மூன்றாம் இடத்துக்கான ஆட்டத்தில் மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேச பாடசாலை அணியை எதிர்த்து யாழ். மத்திய கல்லூரி அணி மோதிக்கொண்டது. இதில் யாழ். மத்திய கல்லூரி அணி 15:9 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்று மூன்றாம் இடத்தை தனதாக்கிக் கொண்டது. (ம-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2015 | செப்ரெம்பர் 28 | திங்கட்கிழமை | உதயன்



தென்னாபிரிக்காவுக்கு எதிரான தொடருக்காக பெங்களூரில் முகாமிட்டுப் பயிற்சியில் ஈடுபட்டு வரும் இந்திய வீரர்கள் அனைவரும் பெங்களூரில் உள்ள பிரபலமான திரையரங்குக்குச் சென்றுள்ளனர். அரங்கில் டோனியின் அருகே இருந்த ஹர்பஜன் அனைவரையும் படம்பிடித்து தனது சமூக வலைதளங்களில் பகிர்ந்துள்ளார். டோனியும் ஹர்பஜனும் பகை பாராட்டுகிறார் கள் என்று–வலைதளங்களில் வாதிட்டுவந்த சிலர் இந்தப் படத்தைப் பார்த்து அதிர்ச்சியில் உறைந்து விட்டார்களாம். (ம)

# மெஸ்ஸிக்கு காயம்

## பார்சிலோனாவுக்கு பின்னடைவு





ஸ்பெயினின் உதைபந்தாட்ட கழக அணிகளுக்கிடையே நடை பெற்று வரும் லா லிகா தொடரில் நேற்று நடந்த லீக் ஆட்டத்தில் பார்சிலோனாவை எதிர்த்து பால்மாஸ் அணி மோதியது. நட்சத்திர வீரரான மெஸ்ஸி காயமடைந்தமை ரசிகர்களுக்கு ஏமாற்றமாகவும் பார்சிலோனாவுக்கு பலத்த பின்னடைவாகவும் அமைந்துள்ளது.

ஆட்டம் ஆரம்பித்தது முதல் வழக்கம் போல் துடிப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய மெஸ்ஸி ஆட்டத்தின் 9ஆவது நிமிடத்தில் காயமடைந்தார். கீழே விழுந்ததில் மெஸ்ஸியின் முழங்கால் பகுதியில் காயம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. காயம் சற்று பலமாக இருப்பதனால் அவர் கிட்டத் தட்ட 2 மாதங்கள் வரை ஓய்வில் இருக்க வேண்டி வரலாம் என்றும் சொல்லப்படுகிறது.

அவ்வாறு இரண்டு மாதங்கள் வரையில் ஓய் வில் இருந்தால் அது லா லிகா தொடரின் எஞ்சிய ஆட்டங்களில் பார்சிலோனாவுக்கு பெரும் பின்னடைவையும் நெருக்கடியையும் ஏற்படுத்தும்.

இந்த ஆட்டத்தில் பார்சிலோனா 2:1 என்ற கோல்.கணக்கில் பால்மாஸ் அணியை தோற்கடித்து புள்ளிப் பட்டியலில் மீண்டும் முதலிடம் பிடித்துள்ளது. மாட்ரிட் 2ஆவது இடத்தில் உள்ளது. (ம)

# சண்ஸ்ரார் வி.கழக முடிவுகள்

யாழ்ப்பாணம், செப். 28

தீவக உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் புங்குடுதீவு சூழலியல் மேம்பாட்டு அமைவகம் (சூழகம்) புங்குடுதீவு சண்ஸ்ரார் விளையாட்டுக்கழகத்துடன்இணைந்து நடத்தும் விலகல் முறையிலான உதைபந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் புங்குடுதீவு சண்ஸ்ரார் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் நேற்று முன் தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஆட்டங்களில் வெற்றி பெற்ற அணிகளின்விவரங்கள் வருமாறு:–

புங்குடுதீவு சென்.சேவியர் அணிக்கும் நெடுந்தீவு உயதசூரியன் அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் புங்குடுதீவு சென்:சேவியர் அணி 4;0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

ஊர்காவற்றுறை சென்.ஜேம்ஸ் அணிக்கும் தம்பாட்டி காந்திஜி அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் இரண்டு அணியினரும் ஆட்ட நேர முடிவில் எந்தவித கோல்களையும் பெறாததினால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது. சமநிலை தவிர்ப்பு உதைகளில் ஊர்காவற்றுறை சென்.ஜேம்ஸ் அணி, 4:2 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

மெலிஞ்சிமுனை இருதயராஜா அணிக்கும் புங்குடுதீவு நிலாஜோதி அணிக்கும் இடையிலான ஆட்டத்தின்போது மெலிஞ்சிமுனை இருதயராஜா அணி, 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (ம–23)

# மற்றுமொரு கிண்ணம்

சீனாவில் நடைபெற்றுவரும் ரென்னிஸ் தொடரின் பெண்கள் இரட்டையர் பிரிவில் கிண்ணத்தைக் கைப்பற்றியுள்ளது சானியா –கிங்கிஸ் இணை.

தரப்படுத்தலில் முதலிடத்தில் உள்ள இணையான சானியா மிர்சா – கிங்கிஸ் இணை இறுதியாட்டத்தில் சொந்த நாட்டு அணியான சீனாவின் லின் – யூயோடி இணையை எதிர்கொண்டது. இதில் சானியா – கிங்கிஸ் இணை 6:3, 6:1 என்ற நேர்செற் கணக்கில் வெற்றிபெற்று கிண்ணத்தைக் கைப்பற்றியது.


சானியா – கிங்கிஸ் இணை விம்பிள்டன், அமெரிக்க ரென்னிஸ் போன்ற சர்வதேச அங்கீகாரம் பெற்ற தொடர்களில் கிண்ணத்தைக் கைப்பற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)



# வீஸூக்கு பதிலாக அல்பி மோர்கல்

இந்தியா – தென்னாபிரிக்கா அணிகளுக்கிடையிலான தொடரில் இருந்து காயம் காரணமாக வீஸ் நீக்கப்பட்டு அவருக்குப் பதிலாக அல்பி மோர்கல் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்திய அணிக்கு எதிரான ஆட்டத்துக்காகத் தயார்ப்படுத்தும்பொழுது கையில் ஏற்பட்ட காயம் காரணமாகவே வீஸ் விலக்கப்பட்டுள்ளார் என்றும்–காயத்துக்கு அறுவைச்சிகிச்சை செய்ய வேண்டியிருப்பதாலேயே வீஸுக்கு கிட்டத்தட்ட ஆறு மாதங்கள் வரை ஓய்வு கொடுக்கப்பட்டுள்ளது என்றும் தென்னாபிரிக்க கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை தெரிவித்துள்ளது. (ம)



# சுழல்பந்துவீச்சே ஆட்டத்தை தீர்மானிக்கும்

இரு அணிகளதும் சுழற்பந்து வீச்சு இந்தியா – தென்னாபிரிக்கா தொடரில் ஆதிக்கம் செலுத்தப்போகும் அணியை நிர்ணயிக்கும் வகையில் அமையும் என்று தெரிவித்துள்ளார் தென்னாபிரிக்க சகலதுறை வீரர் டுமினி.

இந்தியாவுக்கு சவாலளிக்கக்கூடிய வீரர்களில் ஒருவராக கணிக்கக் கூடிய டுமினி குறித்த தொடர் தொடர்பாக தெரிவித்ததாவது:–

இந்தியாவில் உள்ள மைதானங்கள் மற்ற நாடுகளின் மைதானங்களை விட மிகவும் சிறியது. இது ரி–20 ஆட்டங்களில் பெரிய வித்தி



யாசத்தை உண்டாக்கும். இ[illegible] வின் வீரர்கள் பட்டியலை [illegible] கும்போது சுழற்பந்து வீச்சுக்கு [illegible]. இதன்மூலம் ரி–20 தொடருக்கான ஆடுகளம் பந்துவீச்சுக்கு சாதகமான நிலையில் தயார் ஆகி கொண்டிருக்கிறது என்று அர்த்தம்.

எவ்வாறான ஆடுகளங்களாக இருந்தாலும் அதிலும் சாதிக்கக் கூடிய பந்துவீச்சாளர்கள் எம்மில் இருக்கின்றனர். எவ்வாறான பந்து வீச்சையும் எதிர்கொள்ளும் திற மையுள்ள துடுப்பாட்ட வீரர்களும் இருக்கின்றனர்.

எமது சுழல் வீரர்கள் திறமை [illegible] செயற்பட்டால் இந்தியாவின் சவாலை இலகுவில் எதிர் கொள்ளலாம்– என்றார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சென்.ஜோன்ஸ், ஐயனார் அணிகள் அரையிறுதிக்கு முன்னேற்றம்

யாழ்ப்பாணம், செப். 28

தீவக உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் புங்குடுதீவு சூழலியல் மேம்பாட்டு அமைவனம் (சூழகம்) புங்குடுதீவு சண்ஸ்ரார் விளையாட்டுக் கழகத்துடன் இணைந்து நடத்தும் விலகல் முறையிலான உதைபந்தாட்டத் தொடரின் ஆண்கள் பிரிவு ஆட்டத்தில் சென்.ஜோன்ஸ் அணி, வேலணை துறையூர் ஐயனார் அணி என்பன அரையிறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றுள்ளன.

நேற்று ஞாயிற்றுக்கிழமை புங்குடுதீவு சண்ஸ்ரார் கழக மைதானத்தில் இடம்பெற்ற காலிறுதியாட்டங்களில் முதலாவது காலிறுதியாட்டத்தில் வேலணை மகேஸ்வரி அணியை எதிர்த்து நெடுந்தீவு சென்.ஜோன்ஸ் அணி மோதிக்கொண்டது இதில் நெடுந்தீவு சென்.ஜோன்ஸ்அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று அரையிறுதியாட்டத்துக்குத் தகுதிபெற்றது.

தொடர்ந்து இடம்பெற்ற இரண்டாவது காலிறுதியாட்டத்தில் வேலணை துறையூர் ஐயனார் அணியை எதிர்த்து நயினாதீவு அண்ணா அணி மோதிக் கொண்டது. இதில் வேலணை துறையூர் ஐயனார் அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று அரையிறுதியாட்டத் துக்கு தகுதி பெற்றது. (ம-23)

# சிம்பாப்வேக்கு கௌரவத்தோல்வி போராடி வென்றது பாகிஸ்தான்



சிம்பாப்வே, பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான இரண்டு ரி-20 ஆட்டங்களைக் கொண்ட தொடரின் முதலாவது ஆட்டத்தில் 13 ஓட்டங்களால் சிம்பாப்வேயை வீழ்த்தி 1-0 என்ற அடிப்படையில் தொடரில் முன்னிலை வகிக்கிறது பாகிஸ்தான்.

முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தானுக்கு ஆரம்ப வீரர்கள் இருவரும் சிறந்த தளம் அமைத்துக் கொடுக்கத் தவற சிம்பாப்வேக்கு எதிராக திக்குமுக்காட ஆரம்பித்தது பாகிஸ்தான். பாகிஸ்தானின் ஓட்ட எண்ணிக்கை 21ஆக இருந்த பொழுது 17 ஓட்டங்களுடன் பவிலியன் திரும்பினார் செசாட். அடுத்த சில நிமிடங்களிலேயே சக ஆரம்ப வீரரான அகமட்டின் ஆட்டமும் முடிவுக்கு வந்தது. சிப்கபாவிடம் போல்ட்டானார் மக்சூட். மலிக் மட்டும் மத்திய வரிசையில் நிலைத்து நின்றார். உமர் அக்மல், வசிம் இருவரும் பதின்மத்துடன் பவிலியன் திரும்ப அப்ரிடியும் இரண்டே ஓட்டங்களுடன் வீழ்ந்தார். முடிவில் பாகிஸ்தான். 136-8. அதிகபட்சமாக மலிக் 35 ஓட்டங்களையும் ரிஸ்வான் 33 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் சிம்பாப்வே சார்பாக சிப்கபா 3 இலக்குகளைக் கைப்பற்றினார்.

137 என்ற எட்டக்கூடிய இலக்கினை நோக்கி களமிறங்கிய சிம்பாப்வேயின் தொடக்கமும் சொதப்பலாகவே அமைந்தது. அணியின் ஓட்ட எண்ணிக்கை ஒன்றாக இருந்த பொழுது ஓட்டங்கள் எதனையும் பெறாமல் வெளியேறினார் சிப்கபா. தொடர்ந்தும் நிலைத்து நின்றாலும் பந்துகளை வீணடித்துக் கொண்டிருந்தார் மசகட்டசா. ஏர்வின், ரசா, வில்லியம்ஸ் மூவரும் 15 ஓட்டங்களை எட்டவில்லை. தற்பொழுது சிம்பாப்வே 66-5. சிம்பாப்வேயின் இறுதி நம்பிக்கையாக களத்தில் சிக்கும்புராவும் ஜோங்வியும். இறுதிவரை போராடி 31 ஓட்டங்களுடன் ரண்அவுட் ஆனார் சிக்கும்புரா. சிக்கும்புராவின் ஆட்டமிழப்புடன் 123 ஓட்டங்களுடன் சிம்பாப்வேயின் ஆட்டமும் முடிவுக்கு வந்தது. முடிவில் சிம்பாப்வே 13 ஓட்டங்களால் கௌரவத் தோல்வியடைந்தது. (ம)

# இன்றைய மோதல்கள்

***நியூட்டன் வி.கழகத்தொடர்***

கரணவாய், செப். 28

வடமராட்சி உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் சமரபாகு நியூட்டன் விளையாட்டுக்கழகம் யாழ். மாவட்ட ரீதியாக நடத்தும் உதைபந்தாட்டத்தொடர் குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.

இந்தத்தொடரில் இன்று திங்கட்கிழமை பி.ப. 3.30 மணிக்கு இடம்பெறும் முதலாவது ஆட்டத்தில் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து வதிரி பொம்மர்ஸ் விளையாட்டுக் கழகமும் மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் மானிப்பாய் ரெட்றேஞ்சர்ஸ் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து ஊரெழு றோயல் விளையாட்டுக்கழகமும் மோதவுள்ளன. (ம-108)

***ஸ்ரார் வி.கழகத் தொடர்***

அச்சுவேலி ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தின் 8ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு குறித்த கழகத்தால் யாழ். மாவட்ட ரீதியாக நடத்தப்பட்டுவரும் கரப்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் ஸ்ரார் வி.கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.

இந்தத்தொடரில் இன்று திங்கட்கிழமை இடம்பெறும் 'பி' பிரிவு அணிகளுக்கு இடையிலான ஆட்டத்தில் இரவு 7மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் புத்தூர் வளர்மதி அணியை எதிர்த்து அச்சுவேலி தோப்பு வாலிபர் அணி மோதவுள்ளது. இரவு 7.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் அச்சுவேலி கலைமகள் 'ஏ' அணியை எதிர்த்து சிறுப்பிட்டி கலையொளி அணி மோதவுள்ளது. இரவு 8 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் அச்சுவேலி எல்லாளன் அணியை எதிர்த்து மல்லாகம் நியுவோரியஸ் அணி மோதவுள்ளது. (ம-23)

# ஆஸியின் பயணத்தில் தாமதம்

ஆஸ்திரேலியா பங்களாதேஷ் அணிகளுக்கிடையிலான 2 டெஸ்ட் ஆட்டங்களைக் கொண்ட தொடர் அடுத்த மாதம் 9ஆம் திகதி பங்களாதேஷில் நடத்தத் திட்டமிடப்பட்டிருந்தது. குறித்த தொடருக்காக ஆஸி இன்று பங்களாதேஷ் நோக்கிப் பயணமாகவிருந்த நிலையில் பாதுகாப்புப் பிரச்சினை காரணமாக ஆஸியின் பயணம் தள்ளிவைக்கப்பட்டுள்ளதாக ஆஸ்திரேலிய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை அறிவித்துள்ளது.

ஆஸ்திரேலியா அணி மீது பயங்கரவாதக் குழுக்கள் தாக்குதல் நடத்தலாம் என்று வந்த தகவலையடுத்தே ஆஸியின் பயணம் தடைப்பட்டதாக ஆஸ்திரேலிய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இருப்பினும் தொடரை கைவிடுவதாக இன்னமும் எந்தத் தகவல் வெளியாகவில்லை. (ம)

# கோக்லியின் 5 பந்துவீச்சாளர் முறைமை வெற்றிக்கான நிரந்தரத் தீர்வு அல்ல



இந்திய டெஸ்ட் அணியின் தலைவரான கோக்லியின் ஐந்து பந்து வீச்சாளர் திட்டம் நிரந்தரத் தீர்வு இல்லை என்று தெரிவித்துள்ளார் அணியின் இயக்குநர் ரவி சாஸ்திரி. டெஸ்ட் அணிக்கு தலைமைதாங்கி வரும் கோக்லி ஐந்து பந்து வீச்சாளர்களுடன் களமிறங்குவதை வழக்கமாகக் கொண்டுள்ளார். அவ்வாறு ஐந்தாவதாக இடம்பிடிக்கும் பந்துவீச்சாளர் சகலதுறை வீரராகவும் இருப்பார். ஆனால் இந்தத் திட்டம் வெற்றிக்கான தீர்வல்ல என்று தெரிவித்துள்ளார் சாஸ்திரி.

குறித்த விடயம் தொடர்பாக சாஸ்திரி தெரிவித்ததாவது:- ஐந்து பந்து வீச்சாளர் என்பது நிரந்தர திட்டம் கிடையாது. சூழ்நிலைகளுக்கு நாம் முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். சூழ்நிலைகள் முற்றிலும் மாறுபட்டால் அது பாதகமாக அமைந்து விடும். டோனியின் 6 துடுப்பாட்ட வீரர்கள் 4 பந்துவீச்சாளர்கள் முறைமையே சரி. ஆனால் தற்பொழுது இருக்கும் இளம் வீரர்கள் போதிய அனுபவம் பெறும்வரையிலும் கோக்லியின் திட்டத்தின் படியே செல்ல வேண்டும்-என்றார். (ம)

SPOKEN ENGLISH
WITH DIPLOMA CERTIFICATE
உலகிலுள்ள எல்லாக்குழந்தைகளும் 2 - 4 வயதிற்குள்ளேயே தத்தம் மொழியை கற்றுக்கொள்கின்றன! 2 வருடத்தில் ஒரு குழந்தை செய்யும் காரியத்தை இன்றுவரை ஏன் உங்களால் செய்யமுடியவில்லை? இலக்கணம் என்ற தவறான வழியில் கற்றமையே ஆங்கிலமொழியில் இன்றுவரை உங்களால் பேசமுடியாமைக்கான காரணம் ஆகும்.
எமது 3 மாத நேரடி உரையாடற் பயிற்சியில் இணைந்த அனைத்து மாணவர்களும் சரளமாக ஆங்கிலம் பேசுவதை எமது நிறுவனத்தில் எவரும் நேரடியாக பார்வையிடமுடியும்!
2 வது சனி, ஞாயிறு பிரிவுகள் ஆரம்பம் 03-10-2015 சனி
பிரிவு 1 : காலை 08.00-10.00 பிரிவு 2 : மு.ப 10.00-12.00
பிரிவு 3 : பி.ப 01.00-03.00 பிரிவு 4 : மாலை 03.00-05.00
இம்முறை A/L எழுதியோர், இளைஞர், யுவதிகள், பல்கலை புகுமுக மாணவர்கள் தொழில்புரிவோர் வெளிநாடு செல்வோர் ஆசிரியர்கள் இணையமுடியும்!
SAAMSON
279, ஆஸ்பத்திரி பின்புறம், யாழ்நகர்.
021 320 3313
077 621 4567

ஆசிரியர் வே. அன்பழகன் அவர்களின்
தரம் - 5புலமைப்பரிசில் பரீட்சை - 2016
வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன
யாழ்ப்பாணத்தில் அன்பொளி கல்வியகம் யாழ். இந்துக்கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்.
சாவகச்சேரியில் அன்பொளி கல்விநிலையம் [illegible] வீதி, சாவகச்சேரி
அனுமதிகளை 28.09.2015 திங்கட்கிழமையிலிருந்து 05.10.2015 திங்கட்கிழமை வரை பிற்பகல் 3.00 மணி தொடக்கம் மாலை 5.30 மணிக்குள் முற்கூட்டியே பதிவு செய்து கொள்ளவும்.
குறிப்பு:- பெற்றோர் கலந்துரையாடலுடன் வகுப்புக்கள் ஆரம்பிப்பது பற்றிய மேலதிக விபரங்கள், நேர அட்டவணை நேரில் வழங்கப்படும்.
சின்ன விழி அசைத்து சிரித்துவரும் சித்திரங்களை அள்ளி அணைத்து அரிய கல்வியினை மகிழ்வுடனே ஊட்டிடுவோம்.
இயக்குநர்கள்.

விசேட கருத்தரங்குகள்
3ஆம் திகதி நடைபெறவுள்ள பரீட்சைக்கு
பட்டப்பின் படிப்பு கல்வி டிப்ளோமா தேர்வுக்கு
வட மாகாண சாதி தேர்வுக்கு
இன்று திங்கள் முதல் வெள்ளி வரை மாலை 4.30 தொடக்கம் 6.30 மணி வரை
அதிபர் சேவை தரம் - 03
தேர்வுப் பரீட்சைக்கு புதன் (30/09) முதல் நிறைவு மாலை 5.00 தொடக்கம் 7.00 மணி வரை
தொடர்புகளுக்கு 076 6883394
யாழ்ப்பாணக்கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு
(யாழ் ஆஸ்பத்திரி வீதி, [illegible])

NEW SCIENCE WORLD
VICTORY MUST
NEW SCIENCE WORLD
Navalar Road-Brown Road Junction, Jaffna
Web : www.physicsocean.com E-mail : info@physicsocean.com
Hotline : 077 336 4055
G.C.E (A/L) 2016
Day Classes
திங்கள் - வெள்ளி
பௌதிகவியல் → திரு. R. குகன் திரு. R. குமரன்
இரசாயனவியல் → திரு. டயஸ் திரு. T. சிவகுமார்
உயிரியல் → திரு. S. பொன்திவாகரன் திரு. V. உமாசங்கர்
இணை கணிதம் → திரு. S. செந்தில்ராஜ்
09.09.2015 தொடக்கம் வகுப்புக்கள் நடைபெறுகின்றன.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 28.09.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org